REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2023 ஒக்டோபர் 17 செவ்வாய்க்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 91 இல. 246 | Tuesday 17, October, 2023 | 16பக்கங்கள் | 50/-

பீஜிங் மாநாட்டில் பங்கேற்க ஜனாதிபதி சீனா சென்றடைந்தார்

பீஜிங்கில் நடைபெறும் ஒருபாதை ஒரு மண்டலம் திட்டத்தின் மூன்றாவது சர்வதேச ஒத்துழைப்புக்கான மாநாட்டில் கலந்துகொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று திங்கட்கிழமை (16) காலை சீனா சென்றடைந்தார்.

சமூக ஊடகங்கள் மூலம் அவதூறு பழிவாங்கலைத் தடுக்க கண்காணிப்பு

முறைமையொன்று அவசியம் என்கிறார் வஜிர எம்.பி

சகலருக்கும் சமூக ஊடக சுதந்திரம் இருந்தாலும் பிறரை அவமதிக்கும் நோக்கில் அல்லது பழிவாங்கும் எண்ணத்தில் அதனைப் பயன்படுத்தப்படுவதை தடுக்கும் வகையில், விதிகள் கொண்டுவரப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

சிங்கப்பூரின் தகவல் மற்றும் தொடர்பு ஊடக அதிகார சபை சட்டம் நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்ததைப் போன்று, உண்மையான தகவல்களை அறிந்துகொள்ளும் பிரஜைகளின் 06

03 இரண்டு வருடங்களுக்கு தேர்தல்களே கிடையாது

க.பொ.த. சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் நவம்பர் மாதத்தில்

லோரன்ஸ் செல்வநாயகம்

கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சை பெறுபேறுகளை எதிர்வரும் நவம்பர் மாதத்தில் வெளியிட உத்தேசித்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடுவதற்கான முன்னோடி நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ள அவர், பெறுபேறுகளை கணினி மயப்படுத்தும் நடவடிக்கைகள் இந்நாட்களில் இடம் பெற்று வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். 2022 ஆம் ஆண்டுக்கான கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சை கடந்த மே மாதம் நடைபெற்றது.

அதேவேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளை, 45 தினங்களுக்குள் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் இம்முறை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையுடன் சம்பந்தப்பட்ட வினாத்தாள்களை பரீட்சைக்குப் பின்னர், சமூக வலைத்தளங்கள் ஊடாக வெளியிடுவதற்கு முயன்ற நபர் ஒருவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அல்கைதாவுக்கு நிதியுதவி வழங்கிய கோடீஸ்வரர் அஹமத்துடன் தொடர்பு

ஈஸ்டர் தாக்குதல் முக்கிய நபர் உட்பட அறுவர் தடுப்புக்காவலில்

சட்டமா அதிபரின் பணிப்புரை கிடைக்கும் வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

அல்கைதா பயங்கரவாத அமைப்புக்கு நிதியுதவி வழங்கினார் என தெரிவிக்கப்படும் இலங்கை கோடீஸ்வரரான அஹமத் லுக்மான் தாலிப்புடன் தொடர்புகளை கொண்டிருந்த ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலில், முக்கிய சூத்திரதாரி உள்ளிட்ட சந்தேக நபர்கள் ஆறு பேருக்கு சட்டமா அதிபரின் பணிப்புரை கிடைக்கும் வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக மஜிஸ்திரேட் நீதவான் பசன் அமரசிங்க உத்தரவிட்டுள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத குண்டுத் தாக்குதலின் சந்தேக நபர்கள் அஹமட் லுக்மான் தாலிப்புடன் தொடர்புகளை கொண்டிருந்த

தாக தாலிப்பின் தொலைபேசி அழைப்புகளை ஆராய்ந்ததன் மூலம் தெரிய வந்துள்ளதாக சர்வதேச பொலிஸார் விடுத்துள்ள அறிவிப்பிற்கு இணங்க விசாரணைகளை 06

சனல்-4 குற்றச்சாட்டுகள்:

விசாரணைகளுக்கு பாராளுமன்ற விசேட தெரிவுக்குழுவை நியமிக்கவும்

ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் யோசனை முன்வைப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

சனல் 4 அலைவரிசை வெளியிட்ட உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத குண்டுத் தாக்குதல் தொடர்பான காணொளியில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை விசாரணை செய்ய, பாராளுமன்ற விசேட தெரிவுக்குழுவொன்றை 06

காங்கேசன்துறை ஜனாதிபதி மாளிகையை SLIIT நிறுவனத்திற்கு வழங்க நேற்று ஒப்பந்தம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் ஜனாதிபதி மாளிகையை இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. பத்தரமுல்லையிலுள்ள நகர அபிவிருத்தி 06

வவுனியாவில் தொழில்முனைவோர் முன்னோடித் திட்டம் அங்குரார்ப்பணம்

இளைஞர் விவசாய தொழில் முனைவோர் முன்னோடித் திட்டம் வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 06

03 தமிழ்க் கட்சிகள் இணைந்து மீண்டும் மோடிக்குக் கடிதம்!

தமிழ் மக்களுக்கான தீர்வு அடுத்த வருட ஆரம்பத்தில்

ஜனாதிபதி அக்கறையுடன் உள்ளார் அமைச்சர் சுசில்

"தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் செயற்பாடுகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அக்கறையுடன் ஈடுபட்டு வருகிறார். தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அடுத்த வருட ஆரம்பத்தில் தீர்வுகள் கிடைத்தே தீரும் என்ற நம்பிக்கை தனக்கு உள்ளதாகவும் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். மேலும் இது பற்றி தெரிவித்த அவர்:

ஜனாதிபதி மீதும், 06

ஜனாதிபதி தலைமையில்

ஐ.தே.கவின் விசேட மாநாடு 21 ஆம் திகதி

கட்சி செயற்குழு கூடி தீர்மானம்

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட மாநாடு இம்மாதம் 21ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் பிற்பகல் 2 மணிக்கு இம்மாநாடு 06

தென்னிலங்கை தனியார் நிறுவனங்களுக்கு யாழ். ஜனாதிபதி மாளிகையை ஒப்படைக்க கூடாது

அகில இலங்கை இந்து மாமன்றம் எதிர்ப்பு

யாழ்ப்பாணம் கீரிமலையில் உள்ள ஜனாதிபதி மாளிகையை தென்னிலங்கையில் உள்ள தனியார் நிறுவனங்களுக்கு நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கு அகில இலங்கை இந்து மாமன்றம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. கீரிமலை காங்கேசன்துறை வீதியில் உள்ள அரச மாளிகை, அச்சுற்றாடலில் அழிக்கப்பட்ட சைவ ஆலயங்கள் மற்றும் மடங்கள் தொடர்பாக அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் ஆறு திருமுருகன் வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் 06

தோட்டத் தொழிலாளர்களுக்கு 20 ஆயிரம் ரூபா வழங்க கோரிக்கை

தீபாவளி முற்பணமாக மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு இம்முறை 20 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதனை நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான கோரிக்கை கடிதம், பெருந்தோட்டக் கம்பனிகளிடம் நேற்று (16) கையளிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். 06

30 அடி பள்ளத்தில் ஆட்டோ வீழ்ந்து விபத்து: பெண் பலி

தெனியாய நாதகல வீதியில் பயணித்த முச்சக்கரவண்டி விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முச்சக்கரவண்டி வீதியை விட்டு விலகி சுமார் 30 அடி பள்ளத்தில் வீழ்ந்ததில், பெண் ஒருவர் உயிரிழந்ததாக தெனியாய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெவரலிய, நாதகல அம்பகஸ்தன்ன பிரதேசத்தில் உள்ள தனியார் தேயிலைத் தோட்டம் ஒன்றில் தொழில் புரிந்து விட்டு, திரும்பிக்கொண்டிருந்த 06

தினேஷ் ஷாப்டரின் உடலை அடக்கம் செய்ய அனுமதி

விசாரணைகளின் போது தோண்டியெடுக்கப்பட்ட வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் சடலத்தை அடக்கம் செய்ய, அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் இன்று (16) அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி, கொழும்பு ஜாவத்தை மயானத்தில் அவரது சடலத்தை அடக்கம் செய்யுமாறு கொழும்பு மேலதிக நீதவான் 06

இணையவழி பாதுகாப்பு சட்டமூலம்

கர்தினால் மல்கம் ரஞ்சித் மனு தாக்கல்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இணையவழி பாதுகாப்பு தொடர்பான சட்டமூலத்தின் சில சரத்துக்கள், அரசியலமைப்புக்கு முரணானதென 06

தயாசிறிக்கு உப தலைவர் பதவி வழங்கவும்

ஸ்ரீல.சு.க. சிரேஷ்ட உறுப்பினர்கள் வேண்டுகோள்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக பதவி வகித்து, அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவுக்கு அக்கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பதவியை வழங்குமாறு கட்சியின் சிரேஷ்ட 06

பஸ்ஸில் பயணம் செய்த மாணவி பாலியல் துஷ்பிரயோகம்

பஸ் சாரதி, நடத்துநர் உள்ளிட்ட மூவர் கைது

(லோரன்ஸ் செல்வநாயகம்)

குருநாகலிலிருந்து நிககொள்ளவுக்கு பஸ்ஸில் பயணம் செய்த 15 வயது பாடசாலை மாணவி 06

நூற்றாண்டை நிறைவு செய்யும் அரச கணக்குகள் தொடர்பான செயற்குழு சபை

1. அறிமுகம்

அரசாங்கக் கணக்குகளுக்கான செயற்குழு

இலங்கை பாராளுமன்றத்தின் அரசாங்கக் கணக்குகள் தொடர்பான செயற் குழு என்பது வெஸ்ட்மின்ஸ்டர் பாராளுமன்ற மாதிரியைப் பின்பற்றும் ஒரு செயற்குழுவாகும். இது இலங்கை பாராளுமன்றத்தின் பழமையான மற்றும் மிகவும் பிரத்தியேகமான நிதி மேற்பார்வைக் குழுவாகும். மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்பாக, அரச கணக்கு செயற்குழுவானது, பொது நிதிகளின் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதில் பாராளுமன்றத்திற்கு உதவுவதன் மூலம் மேற்பார்வைக் குழுவாக முன்னணிப் பாத்திரத்தை வகிக்கிறது. இது நிர்வாக நிறுவனங்களால் நிதியின் பயன்பாட்டைக் கண்காணிக்கும் பணியாகும்.

2. செயற்குழுவின் வரலாறு

ஈ.ஆர். தம்பிமுத்துவால் அரச பிரதிநிதிகள் சபைக்கு 1921 ஒக்டோபர் 05 ஆம் திகதி முன்வைக்கப்பட்ட முன்மொழிவுக்கு பதிலளிக்கும் வகையில் அரச கணக்குகளுக்கான செயற் குழு அமைக்கப்பட்டது.

முன்வைக்கப்பட்ட யோசணைகள்

'சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட செலவு விடயங்களுக்கு துணை மானியங்கள் உட்பட ஒவ்வொரு நிதியாண்டுக்கும் இந்த சபையின் நிதி பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும், அதன் முடிவில் செலவழிக்கப்படாத மீதமுள்ள நிலுவைத் தொகைகளையும் சரிபார்க்க இந்த சபையில் எந்த அமைப்பும் இல்லை. அடுத்த ஆண்டுக்கான அதாவது 1921 – 22 நிதி ஆண்டிற்காக செலவினங்கள் தொடர்பான நிலையான செயற்குழு சபையை அமைக்க வேண்டும் என நான் பரிந்துரைக்கிறேன். (சபை பதிவுகள், 1922)அதன்படி, 1923ஆம் ஆண்டு செப்டம்பர் 5ஆம் திகதி அரசுக் கணக்குகளுக்கான செயற்குழு நியமிக்கப்பட்டது. அதன் முதல் கூட்டம் 1923 அக்டோபர் 17 அன்று நடைபெற்றது. அந்தக் செயற்குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

தலைவர் இ. ஜே. ஹேவர்ட், ஈ.ஆர்.தம்பிமுத்து, எஃப். ஆர். டயஸ் ஏ.சி.ஜி.விஜேகோன்.

அங்கு, 1921 – 22ம் ஆண்டுக்கான காலனித்துவ கணக்காய்வாளரின் அறிக்கை ஆய்வு செய்யப்பட்டது. இந்த நிலைமை 1931 இல் டொனமோர் அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்படும் வரை தொடர்ந்தது, இது சில வரம்புகளுடன் செயல்பட்டது. இருப்பினும், குழுவின் வேண்டுகோளுக்கு இணங்க காலனித்துவ கணக்காய்வாளர் அனைத்து கூட்டங்களிலும் கலந்து கொண்டார். 1931 அரசியலமைப்பு தணிக்கை அல்லது அரச கணக்குகளின் செயற்குழுக்களின் பங்கிற்கு அதிக கவனம் செலுத்தவில்லை. எவ்வாறாயினும், தணிக்கையின் பொறுப்பு தொடர்பான தொலைநோக்கு தாக்கங்களுடன் மாற்றங்களை அவர்கள் பரிந்துரைத்தனர். அதன்படி, முதல் முறையாக கணக்காய்வாளர் நாயகம் சட்டமன்றத்திற்கு நேரடியாக பொறுப்புக் கூரும் நிலைமைக்கு உட்படுத்தப்பட்டார்.

ஜூன் 21, 1932 திகதியிட்ட அரச பிரதிநிதிகள் சபை தீர்மானத்தின் மூலம் குழு நியமிக்கப்பட்டது மற்றும் அரசாங்கக் கணக்குகள் குறித்த நிலைக்குழுவை வழங்குவதற்காக அரச பிரதிநிதிகள் சபை விதிகள் மற்றும் ஆணைகள் திருத்தப்பட்டன.

திறைசேரியின் ஒப்புதலுடன், பொதுக் கணக்குக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நிதிச் செயலாளர் முன்மொழிந்தார், அதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டது. குழுவின் வேண்டுகோளுக்கு இணங்க, கணக்காய்வாளர் நாயகம் மற்றும் திறைசேரியின் பிரதிநிதி ஆகியோர் குழுவின் கூட்டங்களில் கலந்து கொண்டனர்.

இந்தக் காலக்கட்டத்தில் எழுந்த மற்றொரு முக்கியப் பிரச்சினை, அரச பிரதிநிதிகள் சபை, அரசுக் கணக்குகளுக்கான நிலைக்குழுவின் அறிக்கையை சபையில் பரிசீலிக்க வேண்டும்.

1947 ஆம் ஆண்டின் சோல்பரி ஆட்சியில், பணத்தின் மீதான கட்டுப்பாடு பாராளுமன்றத்தின் மதிப்பீடுகளை நிறைவேற்றுவதில் முடிவடையவில்லை, ஆனால் ஒதுக்கீட்டுச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு, ஒரு குறிப்பிட்ட சேவைக்காக அங்கீகரிக்கப்பட்ட பணம் சரியாகச் செலவிடப்பட்டதா என்பதைச் சரிபார்க்கும் முக்கியத்துவம் கணக்காய்வு விடயத்துக்குள் இருக்க வேண்டும். இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டதன் பின்னர் அரசாங்கத்தின் வருமானம் மற்றும்

செலவினங்களின் வளர்ச்சியின் காரணமாக, சரியான பொறுப்புக்கூறலை அடைவது மிகவும் முக்கியமானது. 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்தவுடன், பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை இலக்கம் 125 இன் கீழ் முழு அதிகாரங்களைக் கொண்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய செயற்குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டது. பல ஆண்டுகளாக, பொதுக் கணக்குகளுக்கான செயற்குழுவின் பணிச்சுமை அதிகரித்து வருவதால், அரச தொழில் முனைவுகள்; (பொது நிறுவனங்கள்) தொடர்பான அரச நிதிக் கொள்கை விடயங்களைக் செயற்குழுவிலிருந்து பிரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 1979ஆம் ஆண்டு மார்ச் 23ஆம் திகதி, அரச வணிகம் தொடர்பான தனிக் குழுவை நிறுவுவதற்காக, 126ஆம் இலக்க நிலையியற் கட்டளையை பாராளுமன்றம் இயற்றியது. 05 அக்டோபர் 2022 மற்றும் 23 நவம்பர் 2022 இல் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட திருத்தங்கள் உட்பட, 2022 நவம்பர் 23 முதல் நடைமுறைக்கு வரும் புதிய நிலையியற் கட்டளைகளின் 119 அரச கணக்குகள் தொடர்பாக செயற்குழு அமைப்பது மற்றும் அதன் அதிகாரங்கள் மற்றும் பணிகள் தொடர்பாக நெறிமுறைகளை தயாரிப்பது.

அரசக் கணக்குகள் மீதான செயற்குழு முதன்மையாக நிலையியற் கட்டளை எண். 119 மூலமாகவும் மேலும் குழுவின் முறையான செயல்பாடு தொடர்பான விடயங்களை வழங்கும் நிலையியற் கட்டளைகள் எண். 134 மற்றும் 135 மூலமாகவும் செயல்படுத்தப்படுகிறது.

3. அரச நிதி தொடர்பான அரசியலமைப்பு விதிகள்

அரசியலமைப்பு விதிகள்

இலங்கையில், அரச நிதி தொடர்பான முழு அதிகாரங்களும் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. அரசியலமைப்பின் 148 வது பிரிவு பின்வருமாறு விதிகளை வழங்குகிறது.

அரச நிதி தொடர்பாக பாராளுமன்றம் முழுக் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது. பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் அல்லது தற்போதுள்ள சட்டத்தின் அதிகாரத்தின் கீழ் தவிர, எந்த ஒரு உள்ளூராட்சி அமைப்புக்கும் அல்லது பிற பொது அதிகாரத்திற்கும் வரி, மதிப்பீடு அல்லது வேறு எந்த வகையான வரியையும் விதிக்க அதிகாரம் இல்லை.

ஒருங்கிணைந்த நிதியில் பிரிவு 149 மற்றும் பிரிவு 150 மற்றும் நிலையற்ற நிதியில் பிரிவு 151 ஆகியவை பொது நிதியின் மீது பாராளுமன்றத்தின் பிரத்தியேக கட்டுப்பாட்டைக் காட்டுகின்றன.

4. அரச நிதி தொடர்பான பாராளுமன்றத்தின் முக்கிய செயல்பாடுகள்

பாராளுமன்றம் மூன்று நிலைகளில் அரச நிதி மீது அதன் கட்டுப்பாட்டை செயல்படுத்துகிறது.வருவாய் மற்றும் செலவு மதிப்பீடுகளை மதிப்பாய்வு செய்து அங்கீகரித்தல் வரவு செலவு அமுலாக்கத்தை மதிப்பாய்வு செய்து கண்காணித்தல்.அரசாங்கம் மற்றும் அதன் நிறுவனங்களின் பொறுப்புணர்வை மதிப்பாய்வு செய்து விசாரணை செய்தல்.

பாராளுமன்றம் மேற்கொண்ட செயல்பாடுகளை இரண்டு நிலைகளில் செயல்படுத்துகிறது. முழுமையான அளவில் அதன் செயற்குழு மட்டத்தில் இந்த நிலையில் பாராளுமன்றம் அதன் நிதி மேற்பார்வைக் குழுக்களின் மூலம் ஆழமான ஆய்வு செய்யும் சிறப்புரிமையைப் பெறுகிறது.அதன்படி, நிதி மேற்பார்வை செயல்பாடு முக்கியமாக பொதுக் கணக்குக் குழுவால் பொது நிதிக் கட்டுப்பாட்டிற்கு ஆதரவாகச் செய்யப்படுகிறது.பொது நிதிக் கட்டுப்பாட்டில் இந்த மேற்பார்வைக் குழுக்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது.

5. அரச கணக்குகள் தொடர்பான செயற்குழுவின் செயல்பாடுகள்

பொதுச் செலவினங்களுக்காகப் பாராளுமன்றம் வழங்கிய பணத்தைப் பகிர்ந்தளிக்கும் கணக்குகள் மற்றும் அரசாங்கக் கணக்குகளுக்கான குழு பாராளுமன்றத்தில் முன்வைத்துள்ள வேறு ஏதேனும் கணக்குகளை கணக்காய்வாளர் நாயகத்தின் உதவியுடன் ஆராய்வது அரசாங்கக் கணக்குகள் செயற்குழுவின் கடமையாகும். நிலையியற் கட்டளை 119 (2)ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும், அரச கணக்குகளுக்கான செயற்குழு, தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள், நிதிகள், நிதி நடைமுறைகள் மற்றும் ஒரு திணக்களம், உள்ளூராட்சி அமைப்பு மற்றும் அதன் மூலம் எழும் எந்தவொரு விடயத்தின் செயல்திறன் மற்றும் பொது முகாமைத்துவம் குறித்து பாராளுமன்றத்திற்கு அறிக்கை அளிக்கும். இந்த அறிக்கையானது, அரச நிதியை முறையாகப் பயன்படுத்துவதை உறுதிசெய்து, அது தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் குறித்த அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளைக் கொண்டிருக்க வேண்டும். நிலையியற் கட்டளை 119 (3)

1923 தொடக்கம் 1947 வரையான காலப்பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர்களான கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் அரச கணக்குகள் தொடர்பான செயற்குழுவின் தலைமை பதவியை வகித்துள்ளார்கள்.

ஈ.ஜே. ஹேவாட், எச்.ஏ.லுஸ், கே. பி பாலசிங்கம், ஹென்றி எல் .த .மெல், பி எச் அலுவிஹார, டட்லி சேனாநாயக்க, ஜி. ஜி பொன்னம்பலம், எச் .டபிள்யூ .அமரசூரிய, ஜே. தியாகராஜா

(தொடரும்)

ஹற்றன் பஸ் தரிப்பிடம் புனரமைக்கப்பட்டு மக்களிடம் கையளிப்பு

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

ஹற்றன் பஸ் தரிப்பிடம் நவீன வசதிகளுடன் கூடியதாக புனரமைக்கப்பட்டு மக்களின் பாவனைக்காக நேற்று (16) கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில், அமைச்சர் ஜீவன் தொண்டமானின் இணைப்புச் செயலாளர் அர்ஜுன் ஜெயராஜ், மக்கள் தொடர்பு அதிகாரி தயாளன் குமாரசுவாமி, பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரனின் பிரத்யேக செயலாளர் நவரட்ணம், இணைப்பு செயலாளர் ஜெய பிரமதாஸ், ஹற்றன் டிக்கோயா நகர சபையின் செயலாளர், அதிகாரிகள், ஹற்றன் பொலிஸ் நிலைய அத்தியட்சகர் மற்றும் சாரதி சங்கங்களின்

உறுப்பினர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர். இந்த பஸ் தரிப்பிடத்தை நவீனமயப்படுத்துவது குறித்து அம்பகமுவ பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அம்பகமுவ பிரதேச அபிவிருத்திக் குழு தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன்

இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். இதற்கமைய ஹற்றன் டிக்கோயா நகர சபை இந்நடவடிக்கைகளை மேற்கொண்டது. குண்டும், குழியுமாக இருந்த ஹற்றன் பஸ் தரிப்பிடத்தால், மழை காலங்களில் பயணிகள் பெரும் இன்னல்களை எதிர்கொண்டனர்.

இந்நிலையில் பஸ் தரிப்பிடத்தை புனரமைத்து தருமாறு மக்கள், சாரதிகள், நடத்துநர்கள் உள்ளிட்டோர் அமைச்சர் ஜீவன் தொண்டமானிடமும், பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரனிடமும் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

துப்பாக்கிச்சூட்டுடன் இஸ்ரேலுக்குள் இலங்கையர் நுழைந்ததாக தூதரகம் உறுதி

(லோரன்ஸ் செல்வநாயகம்)

காசாவில் நிலவும் யுத்த சூழல் காரணமாக சில தினங்களுக்கு முன்னர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ள நிலையில், இலங்கையரொருவர் இஸ்ரேலுக்குள் பிரவேசித்துள்ளார். இவ்வாறு நுழைந்தமை சட்டவிரோதமானது.சட்டவிரோதமாகவே அவர் இஸ்ரேலுக்குள் பிரவேசித்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளதாகவும் இஸ்ரேலிலுள்ள இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார். மேற்படி இலங்கையர் 40 இலட்சம் ரூபா பணத்தை மனித வர்த்தகத்தில் ஈடுபடுவோருக்கு வழங்கி இவ்வாறு இஸ்ரேலுக்குள் பிரவேசித்துள்ளார். இந்த வகையில் இஸ்ரேலில் தங்கியிருக்க தேவையான வீஸா அவரிடம் கிடையாதென்றும் தூதுவர் தெரிவித்தார்.

மேற்படி நபர் இஸ்ரேலுக்குள் பிரவேசித்துள்ளமை மற்றும் அங்கு தங்கியிருப்பதும் சட்டபூர்வமற்றது என்றும் சட்டபூர்வமாக அவரிடம் காணப்படவேண்டிய எந்த ஆவணங்களும் அவரிடம் கிடையாதென்றும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை, ஜோர்தான் நாட்டின் எல்லையூடாக சட்டவிரோதமாக இஸ்ரேலுக்குள் பிரவேசித்துள்ள இலங்கையரென சந்தேகிக்கப்படும் இரண்டு பெண்களும், கைது செய்யப்பட்டுள்ளதாக தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் அந்த பெண்கள் இருவரினதும் ஆளடையாளங்களை உறுதிப்படுத்தும் வகையில் எந்த தகவலும் இதுவரை தமக்குக் கிடைக்கவில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் இலங்கையர்கள்தானா என்பதை ஆராயும் வகையில், இஸ்ரேல் எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் பின் ஹமூத் அல்கஹ்தானி, கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவை கல்வி அமைச்சில் சந்தித்த போது பிடிக்கப்பட்ட படம். இச்சந்திப்பின் போது இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை மேலும் மேம்படுத்துவது உட்பட பல விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

மாத்தளை பெ.வடிவேலனின் "வல்லமை தாராயோ" எனும் நூல் அறிமுகவிழா கொழும்பு தமிழ் சங்க விநோதன் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் (15) ஞாயிற்றுக் கிழமை மாலை பேராசிரியர். தை.தனராஜ் தலைமையில் நடைபெற்ற போது நூலின் முதல் பிரதியை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் நூலாசிரியரிடமிருந்து பெறுவதையும் அருகில் உடுவை எஸ் தில்லை நடராசா பதிப்பாசிரியர் .எச்.எச்.விக்ரமசிங்க ஆகியோர் உடன் நிற்கின்றனர்.

லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தினமின சிங்கள தினசரிப் பத்திரிகையின் சிரேஷ்ட ஊட கவியலாளர் சந்தன விஜேகோன் 'அலி ஜின்னா ஆசியாவின் கம்பீரக்குரல்' என்ற பெயரில் சிங்கள மொழியில் நூலொன்றை எழுதி வெளிட்டுள்ளார். அந்நூலின் விஷேட பிரதியை தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவருக்கு நூலாசிரியர் வழங்கி வைத்தபோது பிடிக்கப்பட்ட படம். இணையாசிரியர் மர்லின் மரிக்காரும் அருகில் காணப்படுகிறார்.

பலஸ்தீனத்தில் அமைந்துள்ள புனித மஸ்ஜிதுல் அக்ஸா பேஷ் இமாம் அஷ் ஷெய்க் அலி உமர் அப்பாஸ் காத்தான்குடி அக்ஸா மஸ்ஜித் திறப்பு விழாவுக்கு வருகை தந்திருந்தார். இதன்போது BMICH இல் 'பலஸ்தீனுக்கு நீதி' எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹைர் ஹம்தல்லா சய்த்க்கு கலாபூஷணம் பரீட் இக்பால் பொன்னாடை அணிவித்து கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

65,000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் ஏல விற்பனை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல்களை ஏலத்தில் விற்பனை செய்யும் நடவடிக்கையின் கீழ், நாளை 65,000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க 91 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 30,000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள், 182 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட இருபதாயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள்,

364 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 15.000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களுமே ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஒக்டோபர் 17 செவ்வாய்க்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்

சுபஹ்	04.41
லுஹர்	11.57
அஸர்	03.16
மஃரிப்	05.55
இஷா	07.05

இன்றைய சுபதினம்

சோபகிருது வருடம் புரட்டாதி 31

ராகுகாலம் : காலை : 4.32 - 6.02வரை
சுபநேரம் : காலை : 9.02 - 10.32வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

ஆபத்தான முப்பது பாலங்களை புனரமைக்கும் பணிகள் விரைவில்

பம்பலப்பிட்டி தற்காலிக மேம்பாலத்தை பார்வையிட்ட அமைச்சர் பந்துல தெரிவிப்பு

பம்பலப்பிட்டியில் நிர்மாணிக்கப்பட்ட தற்காலிக மேம்பாலத்தை பார்வையிட அமைச்சர் பந்துலகுணவர்தன அப்பகுதிக்கு விஜயம் செய்தார்.

பம்பலப்பிட்டி புகையிரத நிலையத்தின் பழுதடைந்த பயணிகள் மேம்பாலத்தை புனரமைக்கும் வரை தற்காலிக மேம்பாலத்தை நிர்மாணிக்குமாறு அமைச்சர் பந்துலகுணவர்தன அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுதிருந்தார்.இதற்கிணங்க இப்பணியை அரச அபிவிருத்தி மற்றும் வடிவமைப்புச் சட்டக் கூட்டுத்தாபனம் ஆரம்பித்து முடித்துள்ளது.

சில வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட பம்பலப்பிட்டி பயணிகள் மேம்பாலத்தின் தூண்களுக்கு பயன்படுத்தப்பட்ட இரும்பு கம்பி, கடல் அரிப்பு உள்ளிட்ட பல காரணங்களால் பழுதடைந்துள்ளது.புதிய மேம்பாலத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில்,இப்பணிகள் முடிவுறும் வரைக்கும் தற்காலிக பாலம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய நிர்மாணிக்கப்பட்ட இத்தற்காலிக பாலத்தை போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தன அண்மையில் பார்வையிட்டார்.

தற்போதுள்ள பயணிகள் மேம்பாலம் மற்றும் ரயில் நிலையத்தைச் சுற்றியுள்ள வளாகத்தின் நிலைமையையும் அமைச்சர் பார்வையிட்டார். நாட்டில் தற்போது சுமார் 30 ஆபத்தான பாலங்கள் சிதிலமடைந்துள்ளன. பம்பலப்பிட்டி 06

தமிழ்க் கட்சிகள் இணைந்து மீண்டும் மோடிக்குக் கடிதம்!

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிர் வரும் புதன்கிழமை (18) ஏழு தமிழ்க் கட்சிகள் இணைந்து கடிதம் அனுப்பவுள்ளதாக தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமருக்குத் தமிழ்க் கட்சிகளால் அனுப்பப்படவுள்ள கடிதம் தொடர்பாக, யாழ்ப்பாணத்தில் ஊடவியலாளர்கள் (15) எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இந்தியப் பிரதமருக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழ் மக்கள் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகிய ஏழு தமிழ்க் கட்சிகள் இணைந்து கூட்டாகக் கடிதம் அனுப்புவது தொடர்பில் அன்றைய தினம் கலந்துரையாடியிருந்தோம். 06

உரிய காலத்தில் விவசாயத்தை முன்னெடுக்க தவறினால் நட்டஈடு வழங்கப்படாது

(லோரன்ஸ் செல்வநாயகம்)

உரிய காலத்தில் நெற்செய்கையை முன்னெடுக்கத் தவறும் விவசாயிகளுக்கு நட்டஈடுகளை வழங்காமலிருக்க விவசாய அமைச்சு கொள்கை ரீதியான தீர்மானமொன்றை மேற்கொண்டுள்ளது. தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பாரியளவு மழை வீழ்ச்சி ஏற்படுவதைப் போன்றே, கடும் வரட்சி ஏற்படக்கூடிய நிலையும் ஏற்படலாம். அத்தகைய சூழ்நிலையில் நெற் பயிர்ச்செய்கையின் பாதிப்பை தவிர்த்துக்கொள்ளும் வகையில் உரிய காலத்தில் உரிய திகதியில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சு விவசாயிகளைக் கேட்டுடுள்ளது.

இம்முறை பெரும்போகத்தின் போது, எதிர்கொள்ளும் மழை வீழ்ச்சி தொடர்பில் வளிமண்டல வியல் திணைக்களம் இப்போதே எதிர்வுகூறியுள்ளது.

அதற்கிணங்க, இந்த மாதத்தில் மேல் மற்றும் தென் மாகாணங்களிலும் இரத்தினபுரி மாவட்டத்திலும் இயல்பான நிலையில் முந்திய மழை வீழ்ச்சி இடம் பெறலாம். நவம்பர் மாதத்தில் மேல், தென் மாகாணம் உட்பட மேலும் சில பிரதேசங்களில் சாதாரண மழை வீழ்ச்சி இடம் பெறும்.

அதேவேளை, வடக்கு, வடமத்திய, மத்திய மாகாணங்களில் முந்திய மழை வீழ்ச்சி இடம்பெறலாமென்றும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையைக் கருத்திற் கொண்டு விவசாயிகள் உரிய காலத்தில் தமது பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை ஆரம்பிப்பது அவசியமென்றும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

யுத்தம் ஒரு போதும் தீர்வாகாது பலஸ்தீன தூதுவரிடம் மஹிந்த

இஸ்ரேல்,பலஸ்தீனத்துக்கிடையிலான மோதல்கள் அதிகரித்து வரும் நிலையில், பலஸ்தீன மக்களுக்கு ஆதரவு தெரிவிக்க முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று (16) கொழும்பில் உள்ள பலஸ்தீன தூதரகத்திற்கு விஜயம் செய்தார்.

பலஸ்தீன தூதருடன் கலந்துரையாடிய முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ பலஸ்தீனர்களின் ஐக்கியத்தை வலியறுத்தினார். இங்கு கருத்து தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த:

பலஸ்தீன ஒற்றுமைக்கான இலங்கைச் சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர் என்ற முறையில் பலஸ்தீன நோக்கத்தை தொடர்ந்து ஆதரித்து வருகிறேன்.

உலகில் எங்கும் பயங்கரவாதத்திற்கு இடமில்லை.போர் ஒரு தீர்வுமில்லை. சமாதானமே அவசரத் தேவை.போரினால் இலங்கை பெற்ற அனுபவங்களிலிருந்து பெற்ற படிப்பினைகள் பலவற்றையும் அவர் பலஸ்தீன தூதுவரிடம் எடுத்து விளக்கினார்.

இரு நாடுகளிலுமுள்ள பொதுமக்களின் செழிப்பான வாழ்வைக் கருதி சமாதானம் விரும்பப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

காயமடைந்த நிலையிலும் பரீட்சையின் இரண்டாம் பாகத்தை எழுத பொலிஸார் உதவி

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய நிலையில், விபத்துக்குள்ளான மாணவனை பொலிஸார் காப்பாற்றி இரண்டாம் பாகத்தையும் எழுத வைத்துள்ளனர். காயமடைந்த மாணவனை அவசரமாக காரில் அழைத்துச் சென்ற பொலிஸார் சிகிச்சைக்குட்படுத்தியதால், இரண்டாம் பாகத்தையும் எழுத மாணவனுக்கு வாய்ப்பு கிடைத்தது. இச்சம்பவம் கொழும்பின் புறநகர் பகுதியான பொரலஸ்கமுவவில் இடம்பெற்றது.இதுபற்றித் தெரியவருவதாவது:

நிலிஷா தேஷாஞ்சன என்ற மாணவன் பொரலஸ்கமுவ மகா வித்தியாலயத்தில்,தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையின் முதலாவது வினாத்தாளை எழுதி முடித்திருந்தார். இடைவேளையில்,சகமாணவனுடன் கழிவறைக்கு சென்றபோது கால் இடறி விழுந்ததால் இம்மாணவனுக்கு தலையில் காயம் ஏற்பட்டது.இந்நிலையில், பரீட்சை பாதுகாப்பு கடமைகளுக்காக வந்த உப பொலிஸ் பரிசோதகர் தர்மதாச எகொட ஆராச்சி, மாணவனை தனது காரில் சிகிச்சைக்காக அழைத்து சென்றுள்ளார். மருத்துவர்களிடம் நிலைலையை விளக்கியதால், மாணவனுக்கு அவசர சிகிச்சையளிக்கப்பட்டது. மீண்டும் பரீட்சைக்கு வந்த இம்மாணவனுக்கு மேலதிக நேரம் ஒதுக்கப்பட்டு பரீட்சை எழுத சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. பொலிஸாரின் இச்செயலுக்கு சகலரும் நன்றி தெரிவித்தனர்.

இரண்டு வருடங்களுக்கு தேர்தல்களே கிடையாது

முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

இம்முறை வரவு செலவு திட்டத்தின் மூலம் அரசாங்க ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படலாமென பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்துள்ளார். பொது ஜன பெரமுன கட்சி அமைப்பாளர்களின் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

எதிர்வரும் நவம்பர் மாதம் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படலாம். இலங்கை பெற்றுள்ள கடன் தொடர்பில் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக சீனா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் இணக்கப்பாட்டை தெரிவித்துள்ளன. 06

ST&IS SINCE 1892
softlogic Finance

சொப்ட்லொஜிக் பினான்ஸ் பீஎல்சி
மாபெரும் ஏலவிற்பனை

77 டீசல் மற்றும் பெற்றோல் மோட்டார் வாகனங்களும்
முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களும்
2023 ஒக்டோபர் 21 சனிக்கிழமை
இல. 463, கண்டி வீதி, களனி
என்ற முகவரியில்
காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

விபரம்:

மோட்டார் கார்கள்:

CBB-3xxx	சுசுகி வேகன் R	2017
CAW-5xxx	சுசுகி DAA-MH55S வேகன் R	2017
CBA-6xxx	சுசுகி CBA-WB42S பலேனோ	2017
CAR-6xxx	ரெனால்ட் கிவிட்	2016
KV-6xxx	மைக்ரோ பண்டா L.C 1.0	2013
KW-6xxx	மைக்ரோ பண்டா LC 1.0	2013
KR-3xxx	ஸோட்டி நாமோடி II	2011
KH-6xxx	மைக்ரோ ரென்ட்	2008
KM-2xxx	டொயோட்டா DBA-NZT260 எலியன்	2007
HW-4xxx	டாட்டா இன்டிகா LXI	2003
KE-7xxx	சுபாரு TA-RA1	2003
KB-4xxx	ஹைஉண்டய் அசென்ட் GL M	2002
JW-5xxx	கியா ஸ்பெக்ட்ரா 1.6M	2001
HX-6xxx	மஸ்டா பாமிலா	2000
HR-4xxx	டொயோட்டா சொலுனா	2000
HI-4xxx	நிஸான் விங்ரோட்	2000
301-4xxx	டேவூ மெத்திஸ்	1999
GP-5xxx	நிஸான் செபைரோ	1999
65-0xxx	டொயோட்டா	1992
17-0xxx	மஸ்டா E-BFTP	1987

வேன்கள்/பஸ் வண்டிகள்:

PJ-7xxx	சுசுகி எவெரி HBD	2016
PB-8xxx	மைக்ரோ MPV ஜுனியர் 111 D P	2009
PC 0xxx	நிஸான் கெரவன்	2006
PB-3xxx	சுசுகி LE-DA62V	2002
58-6xxx	நிஸான் VRG E 24	1992
57-4xxx	டொயோட்டா ஹைஏஸ் டுவல் பர்பஸ் வாகனம்	1992
NA 8xxx	ஸொண்டா YCK 6107 HP BUS	2010

ஜீப்கள்/டபிள் கெப் வண்டிகள்:

CAG-8xxx	மிட்ஷுபிஷி DLA-GG2W அவுட்லான்டர்	2013
KI-0xxx	மைக்ரோ சன்யொங் கைரோன் 200XDI	2009
PD-0xxx	நிஸான் நவரா	2007
HP- xxx	ஹைஉண்டய் சற்றபியா	2001
GA-3xxx	லேன்ட் ரோவர் பிரீ லான்டர்	2000
28 SRI 6xxx	டட்சன் டிரக்	1982

முச்சக்கர வண்டிகள்:

ABE 1xxx	பஜாஜ் RE	2015
ABB-8xxx	ரீவீஎஸ் கிங்	2015
AAO-7xxx	பஜாஜ் RE	2014
YU-9xxx	பஜாஜ் RE 205	2011
YA-5xxx	பஜாஜ் (M)	2010

லொறிகள்/ டிப்பர்கள்:

LO-4xxx	சோஜன் LF J1040G4	2017
DAE-3xxx	டாட்டா சுப்பர் ஏஸ்	2016
DAE 4xxx	மஹிந்ட்ரா B M T பிளஸ் MDI	2016
LP-0xxx	இசுசு TPG-NPS85AN	2016
JR-9xxx	டொயோட்டா LDF ஹைஏஸ்/ இசுசு டம்ப் டிரக்	2015
DAB 6xxx	டாட்டா சுப்பர் ஏஸ்	2015
DAE 8xxx	கேக்கி SC1021CD11	2014
PX-7xxx	மஹிந்ட்ரா மெக்ஸிமோ பிளஸ்	2014
PX-5xxx	டாட்டா ஏஸ் EX 2	2013
PV-4xxx	மஹிந்ட்ரா மெக்ஸிமோ பிளஸ்	2013
PW-3xxx	டாட்டா ஏஸ் EX 2	2013
PV-1xxx	மஹிந்ட்ரா மெக்ஸிமோ	2012
PU-5xxx	மஹிந்ட்ரா பொலேரோ மெக்ஸி டிரக்	2012
LJ-6xxx	டாட்டா - LPK 909	2012
LL-0xxx	டாட்டா - LPK 1615 (10 w)	2012
PR-9xxx	மஹிந்ட்ரா மெக்ஸிமோ	2011
PQ-5xxx	மஹிந்ட்ரா மெக்ஸிமோ	2011
PS-1xxx	டாட்டா ஏஸ்	2011
PS 1xxx	மஹிந்ட்ரா மெக்ஸிமோ	2011
PR-0xxx	டாட்டா ஏஸ்	2011
LJ-3xxx	லங்கா அசோக் லேலன்ட் கொமெட் டிப்பH 1613	2011
PP-7xxx	டாட்டா ஏஸ்	2010
LD-8xxx	டாட்டா LPK1615	2007
LA-9xxx	டாட்டா - LPT713	2005
LF-7xxx	சுபாரு LE-TT1	2003
LE-2xxx	மிட்ஷுபிஷி LE-U61T	2002
LB-3xxx	மிட்ஷுபிஷி KK-FE51CB	2001
68-4xxx	மிட்ஷுபிஷி	1993
47-8xxx	இசுசு NKR58L	1991

மோட்டார் சைக்கிள்கள்:

BIT-8xxx	ஹீரோ ஹங்	2020
BIT-8xxx	ஹீரோ டெஸ்டினி	2020
BIK-0xxx	சுசுகி கிக்ஸர் SF FI	2019
BHZ 9xxx	ரீவீஎஸ் அபாச்சி	2018
BHL-2xxx	ரீவீஎஸ் அபாச்சி - 150	2018
BHW-9xxx	ஹீரோ மெஸ்ட்ரோ எட்ஜ்	2018
BHY-5xxx	சுசுகி அக்ஸஸ் 125	2018
BHC-5xxx	மஹிந்ட்ரா கஸ்ட்ரோ (M)	2018
BHF-0xxx	ரீவீஎஸ் மெட்ரோ	2017

பார்வையிடல் -
ஏல விற்பனை நடைபெறும் ஸ்தலத்தில்
2023 ஒக்டோபர் 19 வியாழன் மற்றும்
20 வெள்ளி ஆகிய தினங்களில்
(காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை)

விற்பனை நிபந்தனைகள்
- நுழைவு: ஏல விற்பனை நடைபெறும் தினத்தில், ஒவ்வொருவரும் பிரவேசக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 2000/- செலுத்துவதுடன், மீளச் செலுத்தப்படும் ரூபா 25,000/- ஐ வைப்புச் செய்தலும் வேண்டும்.
- கொடுப்பனவுகள்: விற்பனை முடிவின் போது, மொத்தத் தொகையில் மீளளிக்கப்படாத 25% காசாகச் செலுத்தப்படல் வேண்டும். எஞ்சிய 75% ஐயும் 2023 ஒக்டோபர் 25ஆந் திகதி புதன்கிழமை பி.ப 3.00 மணிக்கு முன்னர், இல. 305B, நாவல வீதி, நாவல என்ற முகவரியில் அமைந்துள்ள சொப்ட்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்தில் காசாகச் செலுத்தப்பட வேண்டும்.
- எவ்வித முன்னறிவித்தலுமின்றி எந்தவொரு வாகனத்தையும் ஏல விற்பனையிலிருந்து விடுவித்துக் கொள்ளும் உரிமை முகாமைத்துவத்திற்கு உண்டு.
- ஏலதாரர் / சொப்ட்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி யின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம®
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்
011 2671468
www.sandslanka.com

ஜாதிக லொதரயி மண்டலய
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிறு 2023.10.15
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5268
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 33,308,256.00
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 2 0 8 6 6 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3510
சீட்டிழுப்பு திகதி 2023.10.15
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,951,730.80
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 05 31 34 48
விசேட எழுத்து C
இலட்சாதிபதி டயள் சான்ஸ் வெற்றி இலக்கம் 53667

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1616
2023.10.15
70516
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 410,980,324.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து Y
சுப்பர் இலக்கம் 08
வெற்றி இலக்கங்கள் 27 53 74 75

லக்கி 7
திகதி 2023.10.15
சீட்டிழுப்பு இலக்கம் 0094
வெற்றி இலக்கினம் மீனம்
L7 இலக்கம் 2 4
வெற்றி இலக்கங்கள் 8 4 7 6 8 6
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 11,653,716.72

ராசி சுப மலன்
திகதி 2023.10.15
சீட்டிழுப்பு இலக்கம் 577
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,000,000.00
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 18 19 29 44
விசேட இலக்கினம் மீனம்

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1298
2023.10.15
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 115,591,072.80
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள் 11 41 57 75
விசேட எழுத்து I
இலட்சாதிபதி டயள் சான்ஸ் வெற்றி இலக்கம் 02424

தினகரன்

THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் புரட்டாதி மாதம் 31ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1445 ரபீஉனில் ஆகிர் பிறை 01

குறள் தரும் சிந்தனை

ஊணுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு

உடை போன்ற அனைத்தும் எல்லோருக்கும் பொதுவான தேவைகளாக அமைகின்றன; ஆனால் சிறப்புக்குரிய தேவையாக இருப்பது, பிறரால் பழிக்கப்படும் செயல்களைத் தவிர்த்து வாழும் நாணுடைமைதான்.

மண்சரிவு அனர்த்த விடயத்தில் மக்களிடம் அவதானம் தேவை!

தென்மேல் பருவப்பெயர்ச்சி மழைவீழ்ச்சியைத் தொடர்ந்து நாட்டில் சீரற்ற காலநிலை நிலவி வருகிறது. இக்காலநிலையின் விளைவாக நாட்டின் சில மாகாணங்களில் அடிக்கடி பலத்த மழை பெய்து வருவதோடு, ஏனைய சில மாவட்டங்களிலும் மழை பெய்து வருகின்றது.

இக்காலநிலையின் விளைவாக தாழ்நிலங்கள், குளங்கள், நீர்த்தேக்கங்கள், நீரேந்து பிரதேசங்கள் என்பவற்றில் நீர் நிரம்பியுள்ளது. தெதுறு ஓயா நீர்த்தேக்கத்தின் மேலதிக நீரை வெளியேற்றுவதற்காக அதன் வான்கதவுகளும் திறந்து விடப்பட்டன.

அதேவேளை, இக்காலநிலையின் விளைவாக நில்வளகங்கை கடந்த வாரம் பெருக்கெடுத்தது. அதனால் மாத்தறை மாவட்டத்தின் தாழ்நிலங்களில் வெள்ள நிலைமை ஏற்பட்டது. குறிப்பாக அக்குரஸ்ஸ, மாலிம்பட, திககொட, கம்புறுப்பிட்டிய, திக்வெல்ல போன்ற பிரதேச செயலகப் பிரிவுகளின் பல தாழ்நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கின. அத்தோடு களுகங்கை, அத்தனுகலு ஓயா என்பவற்றின் தாழ்நிலங்களிலும் வெள்ள நிலைமை ஏற்பட்டது. இதன் விளைவாக அந்தந்தப் பிரதேச மக்கள் பலத்த அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்தார்கள்.

இந்நிலையில் கடந்த சில தினங்களாக மலையகத்திலும் அவ்வப்போது கடும்மழை பெய்து வருவதால் பண்டாவளை நகரம் நேற்றுமுன்தினம் வெள்ளத்தில் மூழ்கியது. அதனால் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டது.

இச்சீரற்ற காலநிலையினால் மலையகத்திலும் மலைசார்ந்த பிரதேசங்களிலும் மண்சரிவு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன. இது தொடர்பில் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் கடந்த சில தினங்களாக முன்னெச்சரிக்கை அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றது.

அந்த வகையில் பொகவந்தலாவ, தெரேசியா தோட்டத்திலுள்ள லயன் குடியிருப்பு தொகுதியொன்றின் பின்புலத்தில் மண்மேடொன்று திடீரென சரிந்து விழுந்ததில் 05 குடியிருப்புகள் முற்றாக சேதமடைந்துள்ளன. அதனால் அக்குடியிருப்புக்களில் வசித்த முப்பது பேரும் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் கொஸ்லந்த, மீரியபெத்த பிரதேசத்தில் வசித்து வந்த 248 குடும்பங்களைச் சேர்ந்த 778 பேர் மண்சரிவு அச்சுறுத்தல் காரணமாக பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். இப்பிரதேசத்தில் சில வருடங்களுக்கு முன்னரும் மண்சரிவு ஏற்பட்டதோடு பலர் உயிரிழந்ததும் தெரிந்ததே.

இந்நிலையில் தற்போதைய சீரற்ற காலநிலையின் விளைவாக மீண்டும் அப்பிரதேசத்தில் மண்சரிவு அச்சுறுத்தல் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதனால் இப்பகுதியில் ஏற்கனவே மண்சரிவு ஏற்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த 144 குடும்பங்களும் மஹகந்த பிரதேசத்தைச் சேர்ந்த 23 குடும்பங்களும் திவுல்கஸ்முல்லவைச் சேர்ந்த 81 குடும்பங்களுமென 248 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டு உள்ளன.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சிபாரிசுகளுக்கு அமைய பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ள இம்மக்களுக்குத் தேவையான நிவாரண வசதி ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், கொத்மலை பிரதேசத்திலுள்ள வேத்தலாவ என்ற கிராமத்தின் நிலத்தின் கீழ்ப்பகுதியில் நேற்றுமுன்தினம் முதல் அச்சம் தரக்கூடிய வகையிலான மர்மமான சத்தங்கள் கேட்பதாக மக்கள் தெரித்துள்ளனர். அதனால் அக்கிராமத்தில் வசிக்கும் 50 குடும்பங்களைச் சேர்ந்த மக்களை இரவு வேளையில் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதற்கான ஒழுங்குகளை நுவரெலிய மாவட்ட செயலாளர் நந்தன கலபொட மேற்கொண்டுள்ளார்.

தற்போதைய சீரற்ற காலநிலையினால் இவ்வாறான அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளதோடு அச்சுறுத்தலும் நிலவுகின்றது. இந்நிலையில் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் என்பன மண்சரிவு அச்சுறுத்தல் முன்னெச்சரிக்கைகளை விடுத்து வருகின்றன.

அதனால் மண்சரிவு அச்சுறுத்தல் மிக்க பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் விழிப்புணர்வுடனும் முன்னெச்சரிக்கையுடனும் நடந்து கொள்ள வேண்டும். குறிப்பாக மண்சரிவு அச்சுறுத்தல் மிக்க பிரதேசங்களில் வாழும் மக்கள் சேறுசகதியுடன் திடீரென நீரூற்று ஏற்படல், உயர்ந்த மரங்கள், தொலைபேசி, மின்கம்பங்கள் சரிதல், வீடுகள் உள்ளிட்ட கட்டடங்களிலும் நிலத்திலும் திடீரென வெடிப்புக்கள், பிளவுகள் ஏற்படல், அவை விரிவடைதல், தாழிறக்கங்கள், இயற்கையாகக் காணப்படும் நீரூற்றுக்கள் தடைப்படுதல் அல்லது காணாமல் போதல் போன்றவாறான அறிகுறிகளை அவதானித்தால் தாமதமின்றி விரைவாக அவ்விடங்களை விட்டு அகன்று பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர வேண்டும். அவ்வறிகுறிகள் பெரும்பாலும் மண்சரிவுக்கான முன்னெச்சரிக்கையாகவே இருக்கும் என்பதுதான் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் கருத்தாகும்.

ஆகவே தற்போதைய சீரற்ற காலநிலையினால் ஏற்படக்கூடிய வெள்ளம், மண்சரிவு அனர்த்தங்கள் குறித்தும் அவற்றினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களையும் தேசதங்களையும் தவிர்த்துக் கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். இது தொடர்பில் மக்கள் விழிப்புணர்வுடனும் முன்னெச்சரிக்கையுடனும் செயற்படுவது இன்றியமையாததாகும்.

editor.tkn@lakehouse.lk

மாங்குளம் ரயில்நிலையத்தில் நூலகம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதிகள்

தொண்டு நிறுவனங்கள் உட்பட பலதரப்பினரும் வழங்கும் உதவிகள்

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் நகர்ப் பகுதியில் அமைந்துள்ள புகையிரத நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மற்றும் நூலக வசதிகள் உள்ளிட்ட ஏனைய வசதிகள் இல்லாத நிலைமை தொடர்ச்சியாகக் காணப்பட்டு வந்தது.

இந்நிலையில் பல்வேறு தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடம் மாங்குளம் புகையிரத நிலையத்தினர் தொடர்பு கொண்டு விடுத்த கோரிக்கைக்கு அமைவாக பல்வேறு தரப்பினரிடம் இருந்தும் உதவிகள் கிடைத்துள்ளன. இதற்கமைய பல்வேறு விதமான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் அங்கு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் புகையிரத நிலையத்தைச் சூழவுள்ள பகுதிகளில் துப்புரவுப் பணிகள் இடம்பெற்று அங்கு அழகுபடுத்தல் வேலைகளும் மரநடுகைத் திட்டங்களும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு அங்கமாக நேற்றுமுன்தினம் 15 ஆம் திகதி பல்வேறு நலத்திட்டங்கள் அங்கு முன்னெடுக்கப்பட்டன. அந்த வகையில் B .B .K நிறுவனத்தின் அனுசரணையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதியும் நூலகத்திற்கான அலுமாரி வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட நிலையில், 'சிறகுகள்' அமைப்பினர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரால் இந்த நூலகத்திற்கான நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. அந்த நூலகம் திறந்து வைக்கப்பட்டதோடு, 'கிரீன் லேயர்' அமைப்பினால் புகையிரத நிலைய வளாகத்தில் 50 பயன் தரும் மரக்கன்றுகள் நடுகை செய்யும் நிகழ்வும் இடம்பெற்றிருந்தது.

புகையிரத நிலைய அதிபர் க.கலைவேந்தன் விடுத்த கோரிக்கையின் பேரில் புகையிரத நிலைய அதிபர் க.சுதர்சன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், யாழ் புகையிரத நிலைய அத்தியட்சகர் சுரேந்திரன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கனகேஸ்வரன், மருத்துவர் க. உதயசீலன், B .B .K கணக்காய்வு நிறுவனத்தின் வவுனியா கிளை முகாமையாளர் சஜிந்தன், கிரீன் லேயர் அமைப்பின் பணிப்பாளர் சசிக்குமார், சிறகுகள் அமைப்பின் சார்பில் சஜீவன், புகையிரத நிலைய அதிபர் சி.அனுசியன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

நாகபட்டினம்-காங்கேசன்துறை கப்பல்சேவை ஆரம்பமானதால் லட்சத்தீவு மக்களின் ஏக்கம்!

தமிழ்நாட்டின் நாகபட்டினத்தில் இருந்து இலங்கையின் காங்கேசன்துறைக்கு பயணிகள் கப்பல் சேவை தொடங்கப்பட்டதும், கேரளாவின் லட்சத்தீவுகளில் வாழ்கின்ற மக்களிடம் இருந்து குமுறல்கள் வெடித்துக் கிளம்பி உள்ளன.

தமிழ்நாட்டுக்கும் இலங்கையின் வடக்குக்கும் இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கும் முயற்சிகள் பல்வேறு காலகட்டங்களில் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இந்த பயணிகள் கப்பல் போக்குவரத்து முயற்சிகள் சில காரணங்களால் வெற்றிகரமாக அமையவில்லை. நாகபட்டினம், காங்கேசன்துறை துறைமுகம் இடையே 3 நாட்களுக்கு முன்னர் பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கப்பட்டது. செரியாபாணி என்ற 150 பேருடன் பயணிக்கும் அதிவேக பயணிகள் கப்பல் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டு திரும்பியது.

தமிழ்நாடு_ இலங்கை இடையேயான பயண நேரம் 3.30 மணிநேரம்தான். ஆனால் இக்கப்பல் சேவை இடையிடையே மட்டுமே நடைபெறவுள்ளது. போதுமான பயணிகள் முன்பதிவு செய்யாத நிலையில் வாரம் 3 நாட்கள் மட்டும் இயக்குமெனத் தெரிகின்றது.

இது ஒருபுறமிருக்க, இந்தியாவின் யூனியன் பிரதேசங்களில் ஒன்று லட்சத்தீவுகள். அரபிக் கடலில் பல்வேறு தீவு கூட்டங்களின் ஒருங்கிணைப்பாக லட்சத்தீவுகள் இருக்கின்றன. லட்சத்தீவுகளை இந்தியாவின் தரைநிலப் பகுதிகளுடன் இணைப்பதற்கான பிரதான போக்குவரத்து கப்பல் போக்குவரத்து ஆகும். மற்றொன்று விமானப் போக்குவரத்து.

கொச்சியையும் லட்சத்தீவுகளையும் இணைக்கும் வகையில் தினமும் 4 கப்பல் சேவைகள் இயக்கப்படுகின்றன. இவை 300 முதல் 400 வரை பேர் பயணிக்கக் கூடியவை. லட்சத்தீவு மக்கள் அன்றாடம் பிரதான நிலத்துக்கு வந்து செல்ல பல மணிநேரம் இந்தக் கப்பலில் பயணித்து திரும்ப வேண்டிய சூழ்நிலை உள்ளது.

இந்த நிலையில்தான் தமிழ்நாடு_ இலங்கை இடையேயான அதிவேக கப்பல் போக்குவரத்து சேவை லட்சத்தீவு மக்களையும் பெருமூச்சுவிட வைத்துள்ளது. இத்தகைய அதிவேக பயணிகள் கப்பல் சேவைகளை லட்சத்தீவு மற்றும் கொச்சி இடையே இயக்க வேண்டும் என்பது அவர்களது நீண்டகால கோரிக்கை. அங்கு 3 கப்பல்கள் இயக்கப்பட்டன.

இதில் ஒன்றைத்தான் தமிழ்நாடு இலங்கைக்கு இடையேயான கப்பல் சேவைக்கு பயன்படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இது தங்களுக்கு பெரும் ஏமாற்றம் என்கின்றனர் லட்சத்தீவு மக்கள். அன்றாட வாழ்க்கைப் பயணத்துக்கான அதிவேக கப்பல்களை கூடுதலாக இயக்குவதுதான் தங்களது குமுறல்களுக்கு தீர்வு என்பது லட்சத்தீவு மக்களின் எதிர்பார்ப்பாகும்.

கல்முனை பிரதேசத்தில் பாடசாலை மாணவருக்கு போசாக்கு பிஸ்கட்டுகள்

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் போசணை முகாமைத்துவம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு பாடசாலை மாணவர்களின் போசாக்கினை மேம்படுத்தும் நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் போசாக்கு உணவு வழங்கும் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு போசாக்கு நிறைந்த பிஸ்கட்டுகள் வழங்கி வைக்கப்பட்டன.

கிழக்கு மாகாண ஆளுநரின் வேண்டுகோளுக்கு அமைவாகவும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் வழிகாட்டலுக்கமைவாகவும் அக்கரைப்பற்று ஆயுர்வேத மருந்து உற்பத்தி பிரிவினால் தயாரிக்கப்பட்ட போசாக்கு பிஸ்கட்டுகளை பாடசாலை மாணவர்களுக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல். எம்.றிபாஸ் தலைமையில் சமீபத்தில் இடம் பெற்றது.

கல்முனை பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட அட்டாளைச்சேனை அல்முனீரா பெண்கள் உயர் பாடசாலை, நிந்தவூர் கமு/ ஜெர்மன் நட்புறவு கனிஷ்ட பாடசாலை, அட்டப்பள்ளம் ஸஹிதா வித்தியாலயம் என மூன்று பாடசாலைகளின் மாணவர்களுக்கே மேற்படி போசாக்கு பிஸ்கட்டுகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர் எம்.பீ.அப்துல் வாஜித், தொற்றாநோய்ப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஐ.எம்.எஸ். இர்ஷாத், கல்முனை பிராந்திய ஆயுர்வேத பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம். ஏ.நபீல், அட்டாளைச்சேனை ஆயுர்வேத வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஐ.எல்.அப்துல் ஹை, ஆயுர்வேத வைத்தியர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். ஆயுர்வேத மருந்துப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட பல்வேறு போசாக்குக் கூறுகள் அடங்கிய குறித்த பிஸ்கட்டுக்கள் சுவை மற்றும் தரம் வாய்ந்ததாக உள்ளதாகவும் அவற்றைத் தொடர்ந்தும் வழங்க வேண்டும் எனவும் பாடசாலை மாணவர்கள் இதன்போது குறிப்பிட்டனர்.

ஆதம்லெப்பை றியாஸ்...✍
(பாலமுனை விசேட நிருபர்)

பல்லின சமூகத்தவரையும் ஒன்றிணைத்த கல்முனை வலய சிறுவர் தின நிகழ்வு

சமயப் போதனைகளினூடாக பல்லின சிறுவர்களின் உரிமைகளையும் அரவணைப்பதை நோக்காகக் கொண்டு கல்முனை கல்வி வலயம் ஏற்பாடு செய்த சிறுவர் தின பிரதான நிகழ்வு கல்முனை வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் எம்.எச்.றியாஸா தலைமையில் அலுவலக முன்றலில் அண்மையில் நடைபெற்றது. வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

'திசை திரும்பும் சிறுவர் எதிர்காலம்' எனும் கருப்பொருளில் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி மாணவர்களின் வீதி நாடகம் இடம்பெற்றது. போதைப் பொருள் பவனை, கையடக்கத் தொலைபேசியின் ஆதிக்கம், கல்வியில் அக்கறையற்ற நிலை முதலிய அம்சங்களைப் பிரதிபலிப்பதாக இந்நாடகம் அமைந்ததிருந்தது. உவெஸ்லி உயர்தரப் பாடசாலை முன்றலில் நாடகம் இடம் பெற்றது. நாடகம் நிறைவுற்றதும் அங்கிருந்து மாணவர்களும் அதிதிகளும் நடைபவனியாக வலயக் கல்வி அலுவலக முன்றலுக்கு அழைத்து வரப்பட்டனர். சர்வசமய அனுஷ்டானங்களுடன் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.

உவெஸ்லி உயர்தரப் பாடசாலையின் மாற்றுத் திறனாளிகள் பிரிவைச் சேர்ந்த மாணவர்களின் நடனம் மற்றும் உட்படுத்தல் விளையாட்டு என்பன இடம்பெற்றன. கயிறு இழுத்தல் போட்டியும் நடைபெற்றது. பிரதிக் கல்விப்பணிப்பாளர்களான எம்.எச்.எம்.ஜாபிர், ஜிஹானா ஆலிப், என்.வருண்யா ஆகியோர் நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தனர்.

நிகழ்வுகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வுகளுக்கான அனுசரணையினை Deaf Link நிறுவனம் வழங்கியது. அம்பாறை மாவட்ட திட்ட இணைப்பாளர் ரீ.இளையராஜா விஷேட அதிதியாகக் கலந்து கொணடார். கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள்,வளவாளர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

ஜெஸ்மீ எம்.மூஸா...✍
(பெரியநீலாவணை தினகரன் நிருபர்)

உலகளாவிய சிறாரின் கேள்விகளுக்கு திருத்தந்தையின் பதில்கள்

நம்பிக்கை நிறைந்ததாகவும், வாழ்க்கை குறித்த உலக சிறாரின் பெரிய மற்றும் சிறிய கேள்விகளுக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் நேர்மையான பதில்களை உள்ளடக்கியதாகவும் Cari bambini□ அதாவது, அன்புள்ள குழந்தைகளே என்ற புத்தகம் எலெக்தா கிட்ஸ் என்ற பதிப்பகத்தாரால் வெளிவரவுள்ளது.

இன்று 17 செவ்வாய்க்கிழமை எலெக்தா கிட்ஸ் பதிப்பகத்தாரால் வெளியிடப்படவுள்ள வத்திக்கான் பத்திரிகையாளர் டொமேனிக்கோ அகாசோ

என்பவரின் முயற்சியால் உருவான இப்புத்தகத்தின் முன்னோட்டமானது அக்டோபர் 14 சனிக்கிழமை இத்தாலியின் லாஸ்தாம்பா பத்திரிகையில் வெளியிடப்பட்டது.

சிறு குழந்தைகளுடன் உரையாடுவதை மிகவும் விரும்பும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் எண்ணத்தை அறிந்து உலகெங்கிலும் உள்ள சிறாரின் கேள்விகளை சேகரித்ததாகவும், அதற்கு திருத்தந்தை கூறிய பதில்களை தொகுத்து புத்தகமாக வெளியிடவுள்ளதாகவும் தெரிவித்தார் டொமேனிக்கோ அகாசோ.

ஒரு தாத்தாவைப் போல, தனது குழந்தைப் பருவ நினைவுகளையும் சிறிய அனுபவங்களையும் திருத்தந்தை இக்கேள்விகளுக்கான பதில்களில் பகிர்ந்து கொண்டுள்ளதாகவும், வாழ்க்கையின் அர்த்தம், போரின் உணர்வு, கனவின் மதிப்பு என்பவற்றைப் பற்றியும் எடுத்துரைத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார் அகாசோ.

திருத்தந்தையின் தலைமைத்துவப் பணி வாழ்க்கை எவ்வளவு சிறப்பு வாய்ந்தது மற்றும் இயல்பானது என்று இப்புத்தகத்தில் திருத்தந்தை சிறாருக்கு எடுத்துரைத்துள்ளதாகவும், குடும்பத்துடன் இணைந்து படிக்கும் வகையில் நம்பிக்கை மனித நேயம் பற்றிய செய்திகள் நிறைந்ததாக இப்புத்தகம் வெளிவருகின்றது என்றும் எடுத்துரைத்துள்ளார் அகாசோ.

ஆசிரியர் டொமேனிகோ அகாஸோ

புத்தக ஆசிரியர், அரசியல் அறிவியல் பட்டதாரி, பத்திரிகையாளர் மற்றும் எழுத்தாளர், "லா ஸ்டாம்பா" செய்தித்தாளின் வத்திக்கான் நிருபர் மற்றும் திருப்பீடம் மற்றும் கத்தோலிக்க திருஅவையின் தகவல் தளமான "வத்திக்கான் இன்சைடர்" இன் ஒருங்கிணைப்பாளர் ஆவார். திருத்தந்தையின் திருத்தூதுப் பயணங்களில் பலமுறை உடன் பயணித்தவர். 2019 ஆகஸ்ட், 2020 மார்ச் என இருமுறை தனது செய்தித்தாளுக்கு திருத்தந்தையின் நேர்காணல்களைப் பதிவு செய்துள்ளார்.

மெரினா ராஜ்

தட்டுங்கள் திறக்கப்படும்

கேளுங்கள் தரப்படும். தட்டுங்கள் திறக்கப்படும். தேடுங்கள் கிடைக்கும் என இயேசு பணித்துள்ளார்.

நண்பர்கள், நட்பு வட்டம் என்பது மிகுந்த நம்பிக்கைக்குரியதாகும்.

நண்பர்களுக்கிடையில் நிலவும் உறவுகள் மற்றும் உதவிகள் தொடர்பில் பரிசுத்த வேதாகமம் பல்வேறு நூல்களிலும் சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது. பரிசுத்த வேதாகமத்தில் லூக்கா நற்செய்தி ஒரு சிறந்த உவமையை நமக்கு தெரிவிக்கின்றது.

"இயேசு சீடர்களை நோக்கி கூறியது;

உங்களுள் ஒருவர் தம் நண்பரிடம் நள்ளிரவில் சென்று 'நண்பா மூன்று அப்பங்களை எனக்கு கடனாக கொடு என்னுடைய நண்பர் ஒருவர் பயணம் செய்யும் வழியில் என்னிடம் வந்திருக்கின்றார்.

அவருக்கு கொடுக்க என்னிடம் ஒன்றும் இல்லை' என்று சொல்வதாக வைத்துக் கொள்வோம்.

உள்ளே இருப்பவர் "எனக்குத் தொல்லை கொடுக்காதே ஏற்கனவே கதவு பூட்டியாயிற்று. என் பிள்ளைகளும் என்னோடு படுத்திருக்கிறார்கள் நான் எழுந்திருந்து உனக்கு தர முடியாது" என்பார்.

எனினும் அவர் விடாப்பிடியாக கதவைத் தட்டிக் கொண்டே இருந்தால் அவர் தன் நண்பர் என்பதற்காக எழுந்து கொடுக்காவிட்டாலும் தொல்லையின் பொருட்டாவது எழுந்து அவருக்கு தேவையானதை கொடுப்பார் என நான் உங்களுக்கு சொல்லுகிறேன்.

மேலும் நான் உங்களுக்கு சொல்கிறேன் "கேளுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும். தேடுங்கள் நீங்கள் கண்டறிவீர்கள். தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும். ஏனெனில் கேட்போர் எல்லோரும் பெற்றுக் கொள்கின்றனர். தேடுவோர் கண்டடைகின்றனர்.

பிள்ளை மீனைக் கேட்டால் உங்களில் எந்த தந்தையாவது மீனுக்கு பதிலாக பாம்பை கொடுப்பாளா முட்டையை கேட்டால் அவர் தேளைக் கொடுப்பாரா நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிந்திருக்கிறீர்கள். அப்படியானால் விண்ணகத் தந்தை தன்னிடம் கேட்போருக்கு தூய ஆவியைக் கொடுப்பது எத்துணை உறுதி."என அந்த உவமை சிறந்த படிப்பினையை நமக்கு தருகின்றது.

நண்பர்களுக்கு இடையில் உள்ள அன்பு அபரிமிதமானது. தன் நண்பனுக்காக உயிரையும் கொடுப்பது உயர்ந்த தியாகம் என்பதை வரலாறுகள் வலியுறுத்துகின்றன. நம் வாழ்க்கையில் நம்மோடு கூட பயணிக்கும் ஆண்டவர் இயேசுவும் நமக்கு தக்க சமயத்தில் சிறந்த தியாக மிக்க நண்பராகவே திகழ்கின்றார்.

நமது பாவங்களுக்காக அவர் தம் உயிரையும் ஈந்தார்.

அவருக்கும் நமக்கும் இடையிலான நட்பை மேலும் பலப்படுத்திக் கொள்வதற்காக நாம் செய்ய வேண்டியதெல்லாம் அவர் எமக்கு கூறியது போல "சிறியோர் ஒருவருக்கு நீங்கள் எதையெல்லாம் செய்கின்றீர்களோ அதை எனக்கே செய்கின்றீர்கள். என்ற அவரது அன்பு கட்டளையை நாம் அவ்வாறே கடைப்பிடித்தால் போதுமானது. எமது நண்பர்களுக்கு இடையிலும் நட்பு வட்டத்திலும் அத்தகைய தன்மையை வளர்த்துக் கொள்வதற்கு நாம் முயற்சிப்போம்.

எல்.ஜொனதன்

புனித திரேசாள் ஆலய வட்டாரத் திருப்பலி

கொழும்பு திம்பிரிகஸ்யா புனித தெரேசாள் ஆலய பங்கின் வட்டார திருப்பலி பூசைகள் தற்போது ஒப்புக் கொடுக்கப்பட்டு வருகின்றன. கொழும்பு 7 போல மெஸ் வட்டாரத்தில் இடம்பெற்ற வட்டார மக்கள் கலந்து கொண்ட திருப்பலி பூசையை படத்தில் காணலாம். அருட்தந்தை ஜீட் அடிகளார் மற்றும் அருட் சகோதரர் தரிந்து ருவான் ஆகியோர் இந்த திருப்பலியை நிறைவேற்றியமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள்: சுரேஷ்குமார்)

இறையாட்சிக்குள் பிரவேசிக்கும் தகைமை
இயேசுவின் திருமண விருந்து உவமை

உணவு என்பது உறவின் அடையாளமாகவும் காணப்படுகிறது. உறவின் அடையாளமாகப் பரிமாறப்படும் உணவை நாம் விருந்து என்கிறோம்.

இந்த ஞாயிறு இறைவார்த்தை வழிபாடு விருந்துக்கான அழைப்பு மற்றும் பதிலிறுப்பை மையக்கருத்தாகக் கொண்டுள்ளது. நாம் பலரை அழைத்து விருந்து படைக்கிறோம். மற்றவர்களின் அழைப்புக்கு பதிலிறுப்பு செய்கின்றோம்.

அன்றைய முதல் வாசகத்தில் ஆண்டவராகிய கடவுள் நிறைவுகாலத்தில் இஸ்ரயேல் மக்களுக்கு வைக்கவிருக்கின்ற விருந்து பற்றி முன்னுரைக்கிறார் இறைவாக்கினர் ஏசாயா. (ஏசாயா 25:610),

நிறைவுகாலம் என்பது இஸ்ரயேல் மக்கள் பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வருகிற நிகழ்வைக் குறிப்பதாகவும் பொருள் கொள்ளலாம்.

ஆண்டவராகிய கடவுளின் பெயர் 'படைகளின் ஆண்டவர்' என வழங்கப்பட்டுள்ளது. சீயோன் மலையில் படைகளின் ஆண்டவர் விருந்தினை ஏற்பாடு செய்கிறார். இந்த விருந்தின் மூன்று பண்புகளாக இறைவாக்கினர் குறிப்பிடுபவை:

(அ) விருந்துக்கான அழைப்பு பொதுவானது இஸ்ரயேல் மக்கள் மட்டுமல்லாமல் மக்களினங்கள் அனைவரையும் ஆண்டவராகிய கடவுள் அழைக்கிறார். (ஆ) விருந்து சுவைமிக்கது – பண்டங்களும், பழரசப் பானமும் இறைச்சிகளும் வடிகட்டிப் பக்குவப்படுத்திய திராட்சை இரசம். (இ) விருந்து நிறைந்து பெருகி வழிகிறது வருகிற அனைவரும் உண்ணும் அளவுக்கு அபரிமிதமாக இருக்கிறது.

இந்த விருந்தின் வழியாக துன்பம், சாவு, கண்ணீர், நிந்தை என்னும் நான்கு எதிர்மறையான நிலைகளைக் களைகிறார் கடவுள்.இவற்றையெல்லாம் காண்கிற மக்கள், 'இவரே நம் கடவுள். இவருக்காகவே நாம் காத்திருந்தோம். இவர் தரும் மீட்பில் நாம் மகிழ்ந்து அக்களிப்போம்' என்று பாடுவார்கள்.

ஆண்டவராகிய கடவுள் இந்த உறவின் வழியாக இஸ்ரயேல் மக்களுடன் மீண்டும் உறவைப் புதுப்பித்துக்கொள்கிறார். இஸ்ரயேல் மக்கள் தங்கள் மீட்பரை மீண்டும் கண்டு கொள்கிறார்கள்.

நற்செய்தி வாசகத்தில் திருமண விருந்து உவமையை வாசிக்கின்றோம். இது லூக்கா நற்செய்தியிலும் இந்த உவ மை காணப்படுகிறது. தலைமைக் குருக்களையும் மக்களின் மூப்பர்களையும் பார்த்து இயேசு இந்த உவமையை உரைப்பதாக மத்தேயு பதிவு செய்கிறார்.

அரசர் ஒருவர் தம் மகனுக்குத் திருமணம் நடத்துகிறார். யூத சமூகத்தில் திருமண நிகழ்வு என்பது மிக முக்கியமான ஒன்று. ஏழு நாட்கள் முதல் முப்பது நாட்கள் வரை நடக்கக் கூடியது அந்த நிகழ்வு. இங்கே இளவரசனுக்குத் திருமணம் நடக்கிறது. விருந்துக்கான அழைப்பு முதலில் குறிப்பிட்ட நபர்களுக்கும் குழுவினர்களுக்கும் இரண்டாவதாக ஏனையோருக்கும் வழங்கப்படுகிறது.

முதலில் அழைக்கப்பட்டவர்கள் சாக்குப் போக்குச் சொல்லி அழைப்பை நிராகரிக்கிறார்கள். இரண்டாவது அழைக்கப்பட்டவர்கள் அனைவரும் பங்கேற்றாலும் அவர்களில் ஒருவர் திருமண உடை அணியாமல் வருவதால் நிராகரிக்கப்படுகிறார். 'அழைப்புப் பெற்றவர்கள் பலர், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் சிலர்' என்னும் வாக்கியத்தோடு உவமை நிறைவு பெறுகிறது.

முதலில் அழைக்கப்பட்டவர்கள் நான்கு நிலைகளில் பதிலிறுப்பு செய்கிறார்கள்: (அ) விருப்பம் இல்லாமல் இருந்தார்கள் (மத் 22:3). (ஆ) அழைப்பைப் பொருட்படுத்தவில்லை (22:5). (இ) வேறு முதன்மைகளைக் கொண்டிருந்தார்கள் வயலுக்கும் கடைக்கும் செல்தல் (22:5). (ஈ) பணியாளர்களை இழிவுபடுத்திக் கொலை செய்தார்கள் (22:6). இந்த நான்கு பதிலிறுப்புகளும் எதிர்மறையாக இருக்கின்றன.

இரண்டாவது அழைக்கப்பட்டவர்கள் அனைவரும் நேர்முகமாகப் பதிலிறுப்பு செய்து விருந்தில் பங்கேற்க வந்திருந்தாலும், வந்தவர்களில் ஒருவர் திருமண ஆடையின்றி வருகிறார். திருமண ஆடை என்பது விருந்துக்கான அழைப்பின்போது வழங்கப்படுகிற ஆடை. விருந்துக்குச் செல்பவர்கள் அவ்வாறு வழங்கப்பட்ட ஆடைகளை அணிந்து கொண்டே செல்வர். ஆடையை அணிய மறுப்பதன் வழியாக ஒருவகையில் இந்த நபரும் எதிர்மறையாகவே பதிலிறுப்பு செய்கிறார்.

உவமையின் பொருளைப் பார்க்கும்போது, அரசர் என்பவர் வானகத் தந்தை. மகன் இயேசு கிறிஸ்து, திருமண விருந்து இறையாட்சி. பணியாளர்கள் இறைவாக்கினர்கள். முதலில் அழைக்கப்பட்டவர்கள் யூதர்கள். இரண்டாவது அழைக்கப்பட்டவர்கள் புறவினத்தார்கள் என்று புரிந்துகொள்ளலாம்.

இரண்டாவதாக அழைக்கப்பட்ட புறவினத்தார்கள் அனைவரும் திருமண விருந்துக்குள் நுழையும் தகுதி பெற்றிருந்தாலும் விருந்தில் தொடர்வது என்பது ஒவ்வொருவரும் தம்மையே தகுதியாக்கிக்கொள்வதைப் பொறுத்தே அமைகிறது.

முதல் வாசகத்தில் நாம் காணும் விருந்துக்கான அழைப்பு நேர்முகமான பதிலிறுப்பைப் பெறுகிறது. இரண்டாம் வாசகத்திலோ விருந்துக்கான அழைப்பு நிராகரிக்கப்படுகிறது.

விருந்துக்கான அழைப்பு நிராகரிக்கப்படுவதற்கான காரணம் அரசரின் மேன்மையையும் வல்லமையையும் மக்கள் அறியாததே. இதை வெறும் விருந்து என்று பார்த்தார்களே தவிர, அரசரோடு உறவாடக் கூடிய வாய்ப்பு என்று அவர்கள் பார்க்கவில்லை. மேலும், மேன்மையான விருந்தைத் தெரிவு செய்வதற்குப் பதிலாக தாழ்மையான தங்களுடைய முதன்மைகளைத் தேர்ந்துகொண்டார்கள்.

இந்த இரண்டு விருந்து அழைப்புகளும் நமக்குத் தரும் பாடங்கள் எவை?

முதலில் வாழ்க்கை என்பது ஒரு திருமண விருந்து. இந்த விருந்துக்கான அழைப்பை ஆண்டவராகிய கடவுள் நம் அனைவருக்கும் வழங்குகிறார். அவர்தாமே நமக்கு விருந்து பரிமாறுகிறார். அவர் நமக்கு விருந்து அளித்தாலன்றி நாம் பசியாற முடியாது. ஆனால், பல நேரங்களில் நம் காலிக் கோப்பைகளைத் தூக்கிக்கொண்டு மற்ற காலிக் கோப்பைகளைத் தேடிச் செல்கிறோம். காலிக் கோப்பைகள் ஒருபோதும் மற்ற காலிக் கோப்பைகளை நிரப்ப முயலாது என்பதை அறிந்துகொள்வோம்.

இரண்டாவது அருளடையாளங்கள், குறிப்பாக, நற்கருணை என்பது ஒரு திருமண விருந்து. இந்த விருந்துக்கு நாம் எல்லாரும் அழைப்பு பெற்றிருந்தாலும் திருமண ஆடை அணியாதவர் விருந்திலிருந்து வெளியேற்றப்படுகிறார். திருமண ஆடை என்பது நாம் கொள்ள வேண்டிய தயார்நிலை. விருப்பம் மட்டும் போதாது. தயார்நிலையும் வேண்டும்.

மூன்றாவது, திருமண விருந்தின் நோக்கம் கடவுளோடு உள்ள உறவு. 'இவருக்காகவே நாங்கள் காத்திருந்தோம்' என்று படைகளின் ஆண்டவரைத் தேடி ஓடுகிறார்கள் இஸ்ரயேல் மக்கள். கடவுளோடு நாம் கொள்ள வேண்டிய உறவு அவரோடு நாம் அருந்தும் உணவின் வழியாகவே நிறைவு பெறுகிறது.

உணவும் விருந்தும் விவிலியத்தில் முதன்மையான கருத்துருகளாகத் திகழ்கின்றன. நம் முதற்பெற்றோரின் பாவம் விலக்கப்பட்ட கனியை உண்டதில்தான் தொடங்குகிறது.

இயேசு பல விருந்துகளில் பங்கேற்கிறார். விருந்து பற்றிய எடுத்துக்காட்டுகளையும் தருகிறார். காணாமற்போன மகன் எடுத்துக்காட்டில் (லூக் 15), இளைய மகன் திரும்பிவந்தபோது அனைவருக்கும் விருந்து படைக்கிறார் தந்தை. விருந்தில் கலந்துகொள்ள மணம் இல்லாமல் வெளியே நிற்கிறான் மூத்தமகன். தந்தையின் அழைப்பு அவன் காதுகளில் விழுகிறது. ஆனால், அவனோ மௌனமாக நகர்கிறான்.விருந்துக்கான அழைப்பு நேர்முகமான பதிலிறுப்பு பெறாவிடில் உறவும் முறிந்து விடுகிறது.

அருட்பணி யேசு கருணாநிதி

ஆபத்தான....

03ஆம் பக்கத் தொடர்

புகையிரத நிலையத்தில் தற்போதுள்ள பயணிகள் மேம்பாலத்தின் நிலைமையை இரண்டு வருடங்களுக்கு முன்னர் ரயில்வே திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அரச அபிவிருத்தி மற்றும் வடிவமைப்பு கூட்டுத்தாபன அதிகாரிகள் அடையாளம் கண்டுள்ளனர். சிறிது காலத்திற்கு முன்பே இதனை புனரமைப்பதற்குத் தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. இந்நிலையில், கொவிட் தொற்று நிலைமை மற்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளால் அபிவிருத்திப் பணிகளுக்கும் நிதியை பயன்படுத்த இடமளிக்கப்படவில்லை. இதனால் இந்தப் பாலம் உட்பட இலங்கை முழுவதும் 30 பாலங்களின் பணிகள் முடங்கியுள்ளன. ஆசிய அபிவிருத்தி வங்கி உட்பட ஏனைய நிதி உதவி நிறுவனங்களின் நிதியுதவி நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால், இந்த பாலத்தின் அபாய நிலைமை காரணமாக ஜனாதிபதி இதற்கான விசேட நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார். இரயில்வே திணைக்களம் மற்றும் அரச அபிவிருத்தி மற்றும் வடிவமைப்புச் சட்டக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கிடைக்கக் கூடிய வளங்களைப் பயன்படுத்தி கூடிய விரைவில் தற்காலிக பாலம் ஒன்றை நிர்மாணித்து, அடுத்த வருடத்திற்குள் வெள்ளவத்தை மற்றும் பம்பலப்பிட்டி புகையிரத நிலையங்களுக்கு இரண்டு நிலையான பாலங்களை நிர்மாணிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. கடன் மறுசீரமைப்பின் பின்னர், 2024 ஆம் ஆண்டளவில் நாடு முழுவதுமுள்ள ஆபத்தான பாலங்களை புனரமைக்க திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தமிழ்க் கட்சிகள்...

03ஆம் பக்கத் தொடர்

இந்தியப் பிரதமருக்கு அனுப்பவுள்ள கடிதத்தில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டியுள்ளது. அதனை எதிர்வரும் நாட்களில் மேற்கொள்ளவுள்ளோம். எதிர் வரும் புதன்கிழமையளவில் (18) நரேந்திர மோடிக்கான கடிதத்தை கட்சித் தலைவர்கள் ஒப்பமிட்டு அனுப்பவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வவுனியாவில்...

கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் முயற்சியின் பலனாக விவசாய அமைச்சின் நிதி ஒதுக்கட்டின் மூலம் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கென ஐம்பது மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இளைய தலைமுறையினரை நவீன தொழினுட்பத்துடன் விவசாயத்தில் இணைக்கும் நோக்கில் இத்திட்டம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. அமைச்சர் மஹிந்தஅமரவீர அண்மையில் இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இளம் தலைமுறையினரை நவீன தொழில்நுட்பத்துடன் விவசாயத்தில் இணைத்துக் கொள்வதுடன் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் ,இளைஞர்களின் பிரதான வருமான வழிமுறைகளை மேம்படுத்தல், விவசாய சந்தைப்படுத்தலில் வெற்றிகரமான வலையமைப்பை மேம்படுத்தல் உள்ளிட்டவற்றை இத்திட்டம் அடிப்படையாகக் கொண்டுள்ளது.

இந்நிகழ்வில் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும், வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான குலசிங்கம் திலீபன்,வடமாகாண பிரதம செயலாளர், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர்,மேலதிக அரசாங்க அதிபர்,விவசாய அமைச்சின் உயரதிகாரிகள் செட்டிகுளம் பிரதேசச் செயலாளர்,கமநல சேவைகள் திணைக்கள ஆணையாளர், கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் ஊர் மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு, விவசாய ஊக்குவிப்புக்கென தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு விவசாய ஊக்குவிப்பு காப்புறுதி காசோலைகள்,வளர்ப்புக்கான கால்நடைகள், விவசாய உபகரணங்கள், விதைப்புக்கான விதைகள், பழம் தரும் மரக்கன்றுகள் போன்றன வழங்கப்பட்டன.

தமிழ் மக்களுக்கான...

அரசு மீதும் "தமிழ் அரசியல்வாதிகள் குற்றச்சாட்டுக்களை மாத்திரமே முன் வைத்து வருகின்றனர் . தீர்வுகளைக் காண்பதற்கு அரசுடன் இணைந்து செயற்பட இவர்கள் பின்னடித்தே வருகின்றனர். பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வுகளை முன்வைத்தால், அரசுக்கு ஆதரவு வழங்குவோம் என்று தமிழ் அரசியல்வாதிகள் நிபந்தனையை முன்வைக்கின்றனர். தீர்வுகள் கிடைத்த பின் ஆதரவு எதற்கு? ஆதரவை வழங்கி அரசுடன் இணைந்து பயணித்தால் தானே தீர்வுகளை வென்றெடுக்க முடியும். வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் செயற்பாடுகளில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஈடுபட்டு வருகின்றார். தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அடுத்த வருட ஆரம்பத்தில் தீர்வுகள் கிடைத்தே தீரும். இந்த நம்பிக்கை எனக்குண்டு. வாயால் சொல்வதை விட, செயலில் நடப்பது கடினம்தான். எனினும், இந்த விவகாரத்தில் ஜனாதிபதியும் அரச தரப்பினரும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். தமிழ் அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பு எமக்குக் கிடைத்தால் அது மேலும் பலமாக இருக்கும்; தீர்வுகளை நாம் விரைந்து வென்றெடுக்க முடியும்." எனசும் அவர் தெரிவித்துள்ளார்.

தயாசிறிக்கு உப...

உறுப்பினர்கள் பலர் கட்சித் தலைமையிடம் யோசனைகளை முன் வைத்துள்ளனர்.

அவர் மீண்டும் கட்சியில் இணைவதானால் கட்சியின் தலைவர் பதவி, செயலாளர் பதவி அல்லது தேசிய அமைப்பாளர் பதவி

அன்றி வேறு பதவியொன்றை அவருக்கு வழங்குவதற்கு தயாரென அந்தக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன இதற்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

அந்தவகையில், தயாசிறி ஜயசேகரவுக்கு கட்சியின் உபதலைவர் பதவியை வழங்குவது பொருத்தமாகும் என கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் யோசனைகளை முன் வைத்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் தற்போது ஆறு உபதலைவர்கள் பதவியில் உள்ளனர். இந்நிலையில் தயாசிறி ஜயசேகர அந்தப் பதவியை ஏற்க முன்வந்தால் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர்களின் எண்ணிக்கை ஏழாக உயரும் என்றும் அந்தக் கட்சியில் சிலர் தெரிவித்துள்ளனர். எவ்வாறெனினும் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர குடும்பத்துடன் தற்போது வெளிநாடொன்றுக்கு பயணம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பஸ்ஸில் பயணம் செய்த....

யொருவர், அந்த பஸ் வண்டிக்குள்ளேயே பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

மாணவியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த நபர், அவருக்கு உதவியதாக தெரிவிக்கப்படும் குறித்த பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துநர் ஆகியோரை குருநாகல் கும்புக்கெட்டே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களை குருநாகல் மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதையடுத்து எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு மாணவியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதால் கைதாகி, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நபர் யக்கல பிரதேச நிறுவனமொன்றின் களஞ்சியசாலை கட்டுப்பாட்டாளராக பணிபுரிபவராவார். 23 வயதான இவருக்கு உதவிசெய்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள நபர் கும்புக்வெவ நிககொள்ளவைச் சேர்ந்தவரென்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பஸ்ஸின் சாரதி 34 வயதுடைய வெல்கால பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டவர். பஸ் நடத்துநரான 23 வயதுடைய நபர் பெரிய கடுநெலவ பிரதேசத்தைச் சேர்ந்தவரென்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேற்படி மாணவி கடந்த 11 ஆம் திகதி வழமை போன்று பாடசாலை முடிந்து பஸ்ஸில் வீட்டுக்குச் சென்றுள்ளார். அவர் பஸ்ஸிலிருந்து இறங்க வேண்டிய வடுகம பிரதேசத்தை பஸ் அண்மித்தபோது சாரதியும், நடத்துநரும் அவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்திய நபரும் மாத்திரமே இருந்துள்ளனர்.

அவர் பஸ்ஸிலிருந்து இறங்க முற்படும் போது சந்தேகநபரான இளைஞர் அவரை இறங்கவிடாது தடுத்து பஸ் பின்பகுதி சீற்றுக்கு இழுத்துச்சென்று, பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார். அந்த சமயம் பஸ்ஸின் நடத்துநர் பஸ் கதவுகள் மற்றும் ஜன்னல்களை மூடி ஜன்னல் திரைச்சீலைகளையும் முழுமையாக மூடி குறித்த நபருக்கு உறுதுணையாக செயற்பட்டுள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரிய வருவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அதேவேளை, பஸ் சாரதியான நபர் பஸ்ஸின் வானொலிப்பெட்டியின் சத்தத்தை அதிகரித்து குறித்த நபருக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சமூக ஊடகங்கள்...

உரிமையை உறுதிப்படுத்தி இலங்கையை உலகின் தலைசிறந்த நிலைக்கு உயர்த்த தற்போதைய அரசாங்கம் செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“ஒன்லைன் முறைகளின் பாதுகாப்பு தொடர்பான ஆணைக்குழுவின் நியமனத்தின் ஊடாக, ஆய்வு ரீதியிலான ஊடகவியலாளரும் அதேபோன்று ஆராய்ந்து பார்க்கக்கூடிய பிரஜையும் உருவாக்கப்படுவர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இணையத்தளத்தின் ஊடாக அவதூறான மற்றும் பொய்யான தகவல்களை வழங்குபவர்கள் நீதித்துறை மூலம் தண்டிக்கப்படுவர்.எனினும், ஆணைக்குழுவுக்கு தண்டனை வழங்கும் உரிமை இல்லை. உலகிலும் இலங்கையிலும் தொடர்பாடல் வளர்ச்சியடைந்ததன் மூலம் மக்கள் பல்வேறு அனுகூலங்களைப் பெற்றனர். ஆனால் இறுதியில் மக்களை தவறாக வழிநடத்தவும் அவமானப்படுத்தவும் இந்த தொழினுட்பம் பயன்படுத்தப்படுகின்றமை வருந்தத்தக்கது. எனவே, இந்த சமூக ஊடகங்களை உருவாக்கியவர்களே அதற்கான விதிகளை கொண்டு வந்தனர்.

தற்போது இலங்கையிலும் சமூக ஊடகக் கண்காணிப்பின் அவசியம் குறித்து பல்வேறு கருத்தாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

நாட்டில் அனைத்துத் தொலைக்காட்சி அலைவரிசைகளும் தொலைக்காட்சிச் சட்டத்தால் மாத்திரமே கட்டுப்படுத்தப்படுகின்றன. அது, எவ்வகையிலும் நியாயமான ஊடக வளர்ச்சிக்கு பொருத்தமற்றது.

அந்த வகையில் உலகின் வளர்ச்சியடைந்த நாடுகள் தகவல் தொடர்பாடலை அல்லது ஊடகங்களை ஒழுங்குபடுத்தவும் மக்களுக்கு சரியான தகவல்களை வழங்கவும் சட்ட விதிமுறைகளை தயாரித்துள்ளன.

உதாரணமாக, சிங்கப்பூரின் தகவல் தொடர்பாடல் ஊடக மேம்பாட்டு அதிகார சபைச் சட்டம் சிங்கப்பூரின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானதாக மாறியுள்ளது.

உலகில் உள்ள Facebook உள்ளிட்ட ஏனைய தகவல் பரிமாற்றத் தளங்கள் மக்களுக்கு தீங்கு விளைவிப்பதைக் கட்டுப்படுத்தல், சரியான தகவல்களை சிறந்த முறையில் மக்களுக்கு வழங்கல் மற்றும் தவறான தகவல்களை வழங்குபவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துதல் ஆகியவை கற்ற மற்றும் முன்னேறி வரும் ஒரு சமூகத்துக்கு மிக முக்கியமான விடயம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அப்படியானால், ஆசியாவிலும் உலகிலும் இலங்கை வலுப்பெற ஊடகங்களின் செயற்பாடுகள் பலப்படுத்தப்பட வேண்டும். என்றும் அவர்மேலும்தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல்...

மேற்கொள்வதாக பயங்கரவாத விசாரணைப் பிரிவு நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது.

அதற்கு இணங்கவே மாஜிஸ்திரேட் இச்சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார்.

அந்த வகையில் ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பான சந்தேக நபர்கள் ஆறு பேரில் மூன்று பேரான 11, 12 மற்றும் 15ஆவது சந்தேக நபர்களை 72 மணித்தியாலங்கள், பயங்கரவாத விசாரணைப் பிரிவில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு அந்தப் பிரிவு நீதிமன்றத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்தது. அதனைத் தவிர ஏனைய சந்தேக நபர்களான 18, 19 மற்றும் 20ஆவது சந்தேக நபர்களிடம் விளக்கமறியலுக்குள் வாக்கு மூலங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் பயங்கரவாத விசாரணைப் பிரிவு நீதிமன்றத்தை கேட்டுக் கொண்டிருந்தது.

அல்கைதா பயங்கரவாத அமைப்புக்கு நிதி யுதவி வழங்கியமை தொடர்பில் அஹமட் லுக்மான் தாலிப் 2021 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் கைது செய்யப்பட்டதுடன் அவர் தற்போது அவுஸ்திரேலியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது 700 தொலைபேசி அழைப்புகள் தொடர்பில் ஆராய்ந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள அறிக்கைக்கு இணங்க ஈஸ்டர் குண்டுத்தாக்குதலின் முக்கிய சூத்திரதாரி உள்ளிட்ட ஏனைய சந்தேக நபர்கள் அவருடன் தொடர்புகளை கொண்டிருந்தமை தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளதாக பயங்கரவாத விசாரணைப் பிரிவு நீதிமன்றத்திற்கு தெரிவித்துள்ளது.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் 7 (2) சரத்துக்களுக்கு இணங்க மேற்படி சந்தேக நபர்கள் ஆறு பேர் தொடர்பில், விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அந்த விசாரணைப் பிரிவு நீதிமன்றத்திற்கு தெரிவித்துள்ளது.

இரண்டு...

03ஆம் பக்கத் தொடர்

அந்த வகையில் வெகு விரைவில் சர்வதேச நாணய நிதியத்துடன் நிதி ஒத்துழைப்பு க்கான ஒப்பந்தத்தை அரசாங்கம் மேற்கொள்ள முடியும்.

அவ்வாறு சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட நிதி நாட்டுக்கு கிடைத்ததும், நாட்டில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் மீண்டும் ஆரம்பிக்கப்படும்.

தேர்தல் சம்பந்தமாக பல்வேறு தரப்பிலும் பல தரப்பட்ட கருத்துக்கள் முன் வைக்கப்பட்டு வருகின்றன. மேலும் இரண்டு வருடங்களுக்கு நாட்டில் தேர்தல் நடத்தப்பட மாட்டாது என்றே கூற வேண்டும்.

மக்கள் விடுதலை முன்னணி மக்கள் மத்தியில் பல்வேறு பிரசாரங்களை முன்னெடுத்து வந்தாலும், அந்தக் கட்சி வங்குரோத்து அடைந்துள்ள கட்சி என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஐ.தே.கவின்...

நடைபெறவுள்ளது. கட்சியின் செயற்குழு இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, தற்போது நிலவும் சூழ்நிலையை கருத்திற்கொண்டு இந்த விசேட மாநாட்டை உள்ளரங்கில் நடத்த தீர்மானித்துள்ளதாக தெரிவித்தார்.

மாநாட்டின் போது கட்சியின் அரசியலமைப்பு மாற்றப்படும் என நம்புகிறோம் என்றார். கடந்த ஆண்டு மாற்றத்திற்கு அழைப்பு விடுத்த இளைஞர்களின் கோரிக்கைகளுக்கு செவி சாய்த்து, ஐக்கிய தேசியக் கட்சி புதிய தீர்மானங்களை நிறைவேற்றி புதிய சவால்களை எதிர்கொள்ளும் வகையில் கட்சி கட்டமைப்பில் திருத்தம் மேற்கொள்ளும் என பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார குறிப்பிட்டுள்ளார். இம்மாற்றங்களினூடாக, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் நாட்டின் விடயங்கள் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதில் அதிக இளைஞர்களை ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு...

தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்ணியின் ஹற்றன் பிதேச செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு, கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். "நாட்டில் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. எனவே 15 ஆயிரம் ரூபா போதாது, இம்முறை 20 ஆயிரம் ரூபா கட்டாயம் வழங்கப்பட வேண்டும். அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சஜித் நிச்சயம் போட்டியிடுவார்.

அவரின் வெற்றி உறுதி. அதன்பின்னர் நாட்டுக்கும், மலையக மக்களுக்கும் சிறப்பான சேவைகள் முன்னெடுக்கப்படும். நான் மக்களை ஏமாற்றும் அரசியல்வாதியில்லை . மக்களோடு மக்களாக இருந்து அரசியலுக்கு வந்தால், மக்களின் வலி பற்றி எனக்குத் தெரியும். மக்களை கைவிட்டுவிட்டு அரசியல் நடத்தும் திட்டம் ஒருபோதும் எம்மிடம் இல்லை. நல்லாட்சி

காலத்தில் அமைச்சராக இருந்து என்னால் முடிந்த அனைத்தையும் செய்தேன்.

அடுத்து எங்கள் ஆட்சி வரும். சஜிதின் ஆட்சியில் மலையகம் எழுச்சியுறும் என்றார்.

30 அடி பள்ளத்தில்...

போதே இவ்விபத்து இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெனியாய, ஒலகந்த, தெனியாய தோட்டத்தில் வசிக்கும் கந்தசாமி சந்திரா (47) என்ற திருமணமான பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அம்பியூலன்ஸ் மூலம் தெனியாய ஆதார வைத்தியசாலையில் இவரை அனுமதித்தபோது, ஏற்கனவே அவர் உயிரிழந்திருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சாரதி மற்றும் காயமடைந்த ஏனைய இரு பயணிகளும் மேலதிக சிகிச்சைக்காக மாத்தறை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்படவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தினேஷ் ஷாப்டரின்...

ரஜீந்திர ஜயசூரிய உத்தரவிட்டுள்ளார். தினேஷ் ஷாப்டரின் மரணத்திற்கான காரணத்தைக் கண்டறிய நியமிக்கப்பட்ட ஐவர் அடங்கிய நிபுணர் மருத்துவக் குழு, தகனம் செய்வது பொருத்தமற்றது என முன்வைத்த பரிந்துரைகளை ஆராய்ந்த மாஜிஸ்திரேட் இந்த உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கர்தினால் மல்கம் ...

தீர்ப்பிடுமாறு கோரி பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல்செய்துள்ளார். கர்தினால் ஆண்டகை உச்சநீதிமன்றத்தில் அந்த மனுவை தாக்கல்செய்துள்ளதுடன், அந்த மனுவின் பிரதிவாதியாக சட்டமா அதிபரின் பெயரை குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பஸ்ஸில் பயணம் செய்த....

யொருவர், அந்த பஸ் வண்டிக்குள்ளேயே பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

மாணவியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த நபர், அவருக்கு உதவியதாக தெரிவிக்கப்படும் குறித்த பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துநர் ஆகியோரை குருநாகல் கும்புக்கெட்டே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களை குருநாகல் மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதையடுத்து எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு மாணவியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதால் கைதாகி, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நபர் யக்கல பிரதேச நிறுவனமொன்றின் களஞ்சியசாலை கட்டுப்பாட்டாளராக பணிபுரிபவராவார். 23 வயதான இவருக்கு உதவிசெய்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள நபர் கும்புக்வெவ நிககொள்ளவைச் சேர்ந்தவரென்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பஸ்ஸின் சாரதி 34 வயதுடைய வெல்கால பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டவர். பஸ் நடத்துநரான 23 வயதுடைய நபர் பெரிய கடுநெலவ பிரதேசத்தைச் சேர்ந்தவரென்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேற்படி மாணவி கடந்த 11 ஆம் திகதி வழமை போன்று பாடசாலை முடிந்து பஸ்ஸில் வீட்டுக்குச் சென்றுள்ளார். அவர் பஸ்ஸிலிருந்து இறங்க வேண்டிய வடுகம பிரதேசத்தை பஸ் அண்மித்தபோது சாரதியும், நடத்துநரும் அவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்திய நபரும் மாத்திரமே இருந்துள்ளனர்.

அவர் பஸ்ஸிலிருந்து இறங்க முற்படும் போது சந்தேகநபரான இளைஞர் அவரை இறங்கவிடாது தடுத்து பஸ் பின்பகுதி சீற்றுக்கு இழுத்துச்சென்று, பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார். அந்த சமயம் பஸ்ஸின் நடத்துநர் பஸ் கதவுகள் மற்றும் ஜன்னல்களை மூடி ஜன்னல் திரைச்சீலைகளையும் முழுமையாக மூடி குறித்த நபருக்கு உறுதுணையாக செயற்பட்டுள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரிய வருவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அதேவேளை, பஸ் சாரதியான நபர் பஸ்ஸின் வானொலிப்பெட்டியின் சத்தத்தை அதிகரித்து குறித்த நபருக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இன்றைய பலன்கள்

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலயம் கொழும்பு)

மேஷம்:
உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் ஆதரவு இருந்தாலும் பொறுப்புகளில் கவனமாக நடந்து கொள்வது அவசியம். சக பணியாளர்களை பற்றி விமர்சிக்க வேண்டாம்.

ரிஷபம்:
தொழில் அலச்சல் இருந்தாலும் அதற்கேற்ற முன்னேற்றமும் இருக்கும். உத்தியோகத்தர்கள் பொறுப்புகளில் கவனமாக இருந்தாலும் சிறு சிறு பிரச்சனைகளை சந்திக்க நேரிடும்.

மிதுனம்:
கொடுக்கல் வாங்கல் நாணயத்தை காப்பாற்றுவீர்கள் உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் ஆதரவோடு சில முக்கிய காரியங்களை செய்து முடிப்பீர்கள்.

கடகம்:
மனதில் நிம்மதியும் உற்சாகமும் குடிகொள்ளும். பணம் சம்பந்தமான விஷயங்கள் சாதகமாகும்.

சிம்மம்:
உத்தியோகத்தர்கள் நிர்வாகத்திடம் வைத்த கோரிக்கை நிறைவேறலாம். இடமாற்ற முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படும்.

கன்னி:
உத்தியோகத்தர்கள் பணிகளில் நிதானமாகவும் பொறுமையாகவும் ஈடுபட வேண்டும். பண பொறுப்புகளில் உள்ளவர்கள் கவனமாக செயல்படுங்கள்.

துலாம்:
பெற்றவர்களுக்கான சில பொறுப்புக்களை ஏற்று செய்ய நேரிடலாம். உத்தியோகத்திற்கு நினைத்தது நடைபெறும் எதிர்பாராத தொகை கைக்கு கிடைக்கலாம்.

விருச்சிகம்:
உத்தியோகத்தர்களில் சிலருக்கு சம்பள உயர்வு இடமாற்றமும் ஏற்படலாம். சக பணியாளர்களின் வேலையையும் சேர்த்து செய்ய வேண்டியது இருக்கும்.

தனுசு:
அவசரம் காரணமாக கூடுதல் வேலைப்பளுவை எதிர்கொள்வீர்கள். சொந்த தொழில் செய்பவர்கள் அதிக லாபம் பெற்று மகிழக்கூடும்.

மகரம்:
உத்தியோகத்தில் புதிய திருப்பம் காண்பர். சிலருக்கு பதவி உயர்வோடு வெளியூர் மாற்றம் கிடைக்கக் கூடும் .

கும்பம்:
சக பணியாளர்களிடம் சமூகமாக பழகுவது நன்மை அளிக்கும். சொந்த தொழில் செய்பவர்கள் வியாபாரத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டியது இருக்கும்.

மீனம்:
உத்தியோகத்தர்கள் தங்கள் பணிகளில் கவனமாக செயல்பட வேண்டும். எதிர்பார்த்த காரியங்கள் தள்ளிப் போகலாம். சொந்த தொழிலில் எதிர்பார்க்கும் லாபம் இருக்காது.

தென்னிலங்கை தனியார்...

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கீரிமலை ஆதிசிவன் கோயில், சடையம்மா மடம், உச்சிப்பிள்ளையார் கோயில் போன்றவை இடிக்கப்பட்டே அப்பகுதியில் ஜனாதிபதி மாளிகை நிர்மாணிக்கப்பட்டது.எனவே,இம்மாளிகையை யாழ்ப்பாண பல்கலைக் கழகம் அல்லது இந்து சமயம் சார்ந்த நிறுவனங்களுக்கு வழங்க வேண்டும். ஆதிசிவன் கோயில் மடங்கள் இருந்த இடத்தை உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

இதை விடுத்து, தென்னிலங்கையில் உள்ள தனியார் நிறுவனங்களுக்கு நீண்டகால குத்தகை என்ற பெயரில் இவற்றை ஒப்படைப்பதை ஏற்க முடியாது.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில், பொதுமக்கள் போகமுடியாமல் கடற்படையின்

பொறுப்பில் இப்பகுதி கண்காணிக்கப்பட்டு வருகிறது. இது மிக வேதனையான விடயம்.

இப்பகுதியில் இருந்த சித்தர்களின் சமாதிகள் பல உடைக்கப்பட்டுள்ளன. இது நாட்டுக்கு கெடுதியானவை. எனவே,இவற்றை உடனடியாக உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் தென்னிலங்கை சார்ந்த வாணிப நிறுவனங்களுக்கு கையளிக்க கூடாது.

இது, திட்டமிட்ட அநியாய செயற்பாடு. இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி உடன் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

காங்கேசன்துறை பலாலி வீதியில் சிவபூமி அறக்கட்டளைக்கு உரித்தான சுக்கிரவார திருகோணசத்திரத்தை, இராணுவ நலன்புரிச்சங்க தல்செவன ஹோட்டலின் பயன்பாட்டிற்கு வைத்துள்ளனர். நூற்றியாறு பரப்பு கொண்ட சைவ சமய நிறுவனத்தின் மடத்தை அழித்து ஹோட்டல் பயன்பாட்டுக்கு பயன்படுத்தி வருகிறார்கள். இது நீதியற்ற செயல். உடனடியாக தல்செவன ஹோட்டலின் பயன்பாட்டில் உள்ள சமய நிறுவனத்தின் நிலம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் அகில இலங்கை இந்து மாமன்றம் தெரிவித்துள்ளது.

விசாரணைகளுக்கு...

நியமிக்ககோரும் யோசனை பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆளும்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இன்றைய தினம் இதனை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சில அரசியல்வாதிகள் மற்றும் சிரேஷ்ட புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் மேற்படி தற்கொலைக் குண்டுதாரிகளுடன் தொடர்புகளை மேற்கொண்டிருந்ததாகவும் அந்த குண்டுத்தாக்குதல்களின் பின்னணியில் பாரிய சதித்திட்டம் உள்ளதாகவும் சனல்4 அலைவரிசை

குற்றஞ்சாட்டியுள்ளது. இதுதொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வது அவசியமெனவும் குறித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது யோசனையில் தெரிவித்துள்ளனர். அந்தவகையில் தெரிவுக்குழுவின் அறிக்கையை இரண்டு மாதங்களுக்குள் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிகக வேண்டுமென்றும் அவரக்ள் அந்த யோசனையில் குறிப்பிட்டுள்ளனர்.

மேஜர் பிரதிப் உந்தகொட, வஜிர ஆபேவர்தன, கு

கிழக்கின் குரல்

வாகரையில் நீர்ப்பாசனக் குளங்கள் ரூ.4 கோடி செலவில் புனரமைப்பு

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பிரதேச செயலகத்துக் குட்பட்ட நீர்ப்பாசன குளங்கள் புனரமைக்கப்பட்டு பிரதேச விவசாயிகளிடம் அண்மையில் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், மட்டக்களப்பு மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி ஸ்ரீகாந்த், கொகாகோலா பவுண்டேஷன் அமைப்பின் இலங்கை, மாலைதீவு நாடுகளுக்கான பிராந்திய இணைப்பாளர் லக்ஷான் மதுரசிங்ஹ, சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு (வீ எபெக்ற்) நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் தேவசிகாமணி மயூரன், வாகரைப் பிரதேச செயலாளர் ஜி.அருணன், விவசாய, நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள், இளைஞர் அபிவிருத்தி அகம் அமைப்பின் அலுவலர்கள் உட்பட இன்னும் பல அதிகாரிகளும் பிரதேச மக்களும் கலந்து கொண்டனர்.

'எங்களது செயற்பாடு எங்களது எதிர்காலம் பெண்களையும் விவசாயிகளையும் வலுப்படுத்துவோம்.' எனும் தொனிப்பொருளில் ஆரம்பிக்கப்பட்ட இச்செயற்றிட்டத்தின் கீழ் வாகரைப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள திக்கனைக்குளம், மாணிக்கம் குளம், பனிச்சங்கேணிக் குளம் ஆகிய மூன்று குளங்களும் புனரமைக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு (வீ எபெக்ற்), கொகாகோலா பவுண்டேஷன், இளைஞர் அபிவிருத்தி சங்கம் ஆகியவை கூட்டிணைந்து இந்த அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுத்துள்ளன. பெண்கள், சிறுவர்கள் உட்பட 1.772 வறுமைக்குட்பட்ட குடும்பங்களை நேரடி இலக்காகவும் 2043 குடும்பங்களை மறைமுக இலக்காகவும் கொண்டு நன்மை பெறும் வகையில் அவர்களது மேம்பட்ட வாழ்க்கையை உறுதி செய்வது இத்திட்டத்தின் இலக்காகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இப்பிரதேசத்திலுள்ள 1000 குடும்பங்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்குவதும் இதன் பிரதான நோக்கங்களில் ஒன்றாகும்.

இந்தக் குளங்களில் தேக்கும் நீர் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ்வாண்டுக்கான பெரும்போக நெற்செய்கைக்கு விவசாயிகளால் பயன்படுத்தப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கருத்து தெரிவித்த சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு (வீ எபெக்ற்) நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் தேவசிகாமணி மயூரன், எல்லா அபிவிருத்தித் திட்டங்களை விடவும் குளங்களைப் புனரமைப்புச் செய்தல் என்பது அதிக சிரத்தை எடுத்துச் செய்ய வேண்டியதாகும்.

இப்பிரதேச விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் இவ்வேலைத் திட்டத்தை செய்து முடிக்கக் கூடியதாகவிருந்தது.

அத்தோடு பெண்கள் அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, வாழ்வாதாரம், மனைப் பொருளாதார தொழிலுற்பத்தித் திறன்கள் உள்ளிட்ட ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டத்துக்காக மேலும் 21 மில்லியன் ரூபா செலவில் வாகரையில் அபிவிருத்தித் திட்டங்கள் அமுலாகிறது" என்றார்.

ஏறாவூர் சவுக்கடி கடற்கரைப் பூங்கா புனர்நிர்மாணம்

(ஏறாவூர் சுழற்சி நிருபர்)

ஏறாவூர் சவுக்கடி கடற்கரை பிரதேசத்தில் 2018ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட சிறுவர் பூங்காவானது மீண்டும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு தற்பொழுது மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

இப்பூங்காவானது பகுதியளவில் சேதமடைந்து பாவனைக்கு உதவாத நிலையில் காணப்பட்டது. இதனையடுத்து வர்த்தக வாணிப இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் வேண்டுகோளுக்கிணங்க ஏறாவூர் பற்று பிரதேச சபையின் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் மேற்பார்வையின் கீழ் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

சிறுவர்களின் நலன்கருதி கடந்த 2018ஆம் ஆண்டு முன்னாள் இராஜாங்க அமைச்சரும் தற்போதைய மட்டு.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அலிசாஹிர் மௌலானாவின் நிதிஒதுக்கீட்டில் கடற்கரைப் பூங்கா அமைக்கப்பட்டிருந்தது. எனினும் காலப்போக்கில் உரிய பராமரிப்பின்றி இப்பூங்காவானது சேதமடைந்தது.

எனவே பொதுமக்கள் இதனை சுத்தமாக வைத்திருப்பதோடு நீண்ட நாட்களுக்கு பயன்படுத்தும் வகையில் பேணி பாதுகாக்குமாறு பிரதேசசபை தெரிவித்துள்ளது.

தனக்குத்தானே தீ வைத்துக் கொண்டு பொலிஸாரை கட்டிப்பிடித்த நபர்!

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் சம்பவம்

(காரைதீவு குறூப் நிருபர்)

போதைப்பொருள் பாவனையாளர் ஒருவர் தனக்குத்தானே தீ வைத்துக் கொண்டு பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை கட்டிப்பிடித்ததில் இருவரும் தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாஞ்சோலை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டு வந்த நபரொருவர் தனது குழந்தையை தாக்கியுள்ளார். இதனையடுத்து இதை தடுக்கச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் இச்சம்பவத்தில் சிக்கியுள்ளார்.

போதைப்பொருளுக்கு அடிமையான நபர் இதன்போது தனது உடம்பில் பெற்றோலை ஊற்றிக் கொண்டு தீ வைக்க முற்பட்டதுடன், அதை தடுக்கச் சென்ற வேளையில் பொலிஸ் உத்தியோகத்தரை கட்டிப் பிடித்துள்ளார்.

இதனால் தீக்காயங்களுக்குள்ளான நபரும் பொலிஸ் உத்தியோகத்தரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதில், தனக்குத்தானே தீ வைத்துக் கொண்ட நபர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதுடன், பொலிஸ் உத்தியோகத்தர் தீக்காயங்களுடன் கால் ஒன்று உடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இறக்காமத்தில் அரச உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் இரத்ததான முகாம்

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

'உதிரம் கொடுப்போம், உயிர் காப்போம்' எனும் தொனிப்பொருளின் கீழ் இறக்காமம் பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டிலும் இறக்காமம் இளைஞர்கள் அமைப்பின் உதவியுடனும் இறக்காமம் பிரதேச செயலகத்தில் இரத்ததான நிகழ்வு வெற்றிகரமாக நிறைவுபெற்றது. பிரதேச செயலாளர் அஷ்ஷேய்க் எம்.எஸ்.எம்.றஸ்ஸான் (நளீமி) வழிகாட்டலின் கீழ், உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.ஸி. அஹமட் நசீல் தலைமையில் இரத்ததான முகாம் நடைபெற்றது. அம்பாறை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியில் குருதி தட்டுப்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து இரத்த வங்கியின் அவசர வேண்டுகோளுக்கமைவாக இரத்தான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது.

அவசர குருதித் தேவையினை நிவர்த்தி செய்யும் வகையில் இறக்காமம் பிரதேச செயலக உத்தியோகத்தர்களில் அதிகளவானோர் குருதி நன்கொடை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், கணக்காளர் திருமதி றிம்சியா அர்சாட், நிர்வாக உத்தியோகத்தர் எம்.எம்.எம். தௌபீக், இறக்காமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மஹிந்த சேனாரட்ன உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் இறக்காமம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள், இளைஞர்கள், யுவதிகள் மற்றும் பொது மக்கள் என அதிகளவானோர் குருதி நன்கொடை வழங்கி உயிர் காக்கும் உன்னத பணியில் இணைந்து கொண்டனர்.

முருங்கைக்காய் பறிக்கச் சென்ற அபிவிருத்தி உத்தியோகத்தர் மின்சாரம் தாக்கி மரணம்

(மண்டூர் தினகரன் நிருபர்)

களுவாஞ்சிகுடி பிரதேசத்தில் குடும்பப் பெண் ஒருவர் முருங்கை மரத்தில் முருங்கைக்காய் பறிக்கச் சென்று மின்சாரம் தாக்கி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களுவாஞ்சிகுடி குமாரதம்பிரான் வீதி 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தாயான 51 வயதான நவநீதன் சசிகலா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவர் இப்பிரதேசத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமை புரிபவர் என தெரியவருகின்றது.

சமையலுக்காக தனது வீட்டின் வீதியோரத்தின் அருகிலுள்ள முருங்கைமரத்தில் முருங்கைக்காய் பறிக்க முற்பட்டபோது அதன் அருகிலிருந்த மின்சாரக்கம்பியில் பட்டு மின்சாரம் இவரை தாக்கியுள்ளது.

இதனால் உடனடியாக அவர் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களுவாஞ்சிகுடி நீதிமன்ற நீதவான் ஜே.வி.ஏ. ரஞ்சித்குமாரின் உத்தரவுக்கமைவாக சம்பவ இடத்திற்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சென்று சடலத்தை பார்வையிட்ட பின்னர் உடற்கூற்று பரிசோதனைக்குட்படுத்துமாறு சட்ட வைத்திய அதிகாரிக்கு பணிப்புரை வழங்கியுள்ளார். அதற்கமைய விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

பல்கலை மாணவர்கள் பகிடிவதை என்ற போர்வையில் கல்வியை சீரழிக்கக் கூடாது

தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர்

(ஒலுவில் விசேட நிருபர்)

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பகிடிவதையில் ஈடுபடும் மாணவர்களுக்கெதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென, தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

2021/2022ம் கல்வியாண்டிற்கு தென்கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீடத்திற்கு அனுமதி பெற்ற புதிய மாணவர்களுக்கான கல்வி ஆரம்ப நிகழ்வு நேற்று திங்கட்கிழமை (16) பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் நடைபெற்றது. இதில் அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

பல்கலைக்கழகங்களில் இடம் பெறும் பகிடிவதை விடயத்தில் அரசு மிகுந்த இறுக்கமான தண்டனைகளை அறிமுகம் செய்துள்ளது.

பகிடிவதையினால் நாட்டில் உயர்கல்வியில் பாரிய வீழ்ச்சியை எதிர்நோக்க வேண்டியுள்ளது. பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவர்கள்

கனிஷ்ட மாணவர்களுக்கு அவர்களின் கல்வி தொடர்பாக நல்ல அறிவுரைகளையும், வழிகாட்டல்களையும் வழங்க வேண்டுமே தவிர வெறுமனே பகிடிவதை என்ற போர்வையில் கல்வியை சீரழிக்கக் கூடாது.

ஆயிரக்கணக்கான மாணவர்கள் உயர்தர பரீட்சை எழுதுகின்ற போதிலும் குறைவானவர்களே பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாவதாகவும் அவ்வாறு தெரிவுசெய்யப்படும் மாணவர்கள் அவர்களுக்குக் கிடைத்துள்ள வரப்பிரசாதத்தை சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும்.

ஒரு பட்டதாரியை உருவாக்குவதற்கு அரசாங்கம் மில்லியன் கணக்கில் செலவிடுவதாகவும் மக்களின் வரிப்பணத்தில் கல்வியைத் தொடர்கின்ற மாணவர்கள் கல்வி என்ற இலக்கை அடைந்துகொள்வதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும்.

நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு ஒரு முன்மாதிரியாக தென்கிழக்கு பல்கலைக்கழகம் திகழ்கின்றது. பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்கள் பல கனவுகளுடன் இங்கு வந்துள்ளனர். எனவே பல்கலைக்கழக வளங்களைப் பயன்படுத்தி நாட்டிற்கும் சமூகத்திற்கும் பெரும் பங்காற்ற வேண்டுமென்றார்.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு இரண்டு சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர் எம்.பி. தௌசீதினால் சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரங்கள் உட்பட பல உபகரணங்கள் வைத்தியசாலைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டன. சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரங்கள் அன்பளிப்பு செய்ததை முன்னிட்டு வைத்திய குழுமத்தினால் தொழிலதிபர் ஞாபகச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். (படம் திராய்க்கேனி தினகரன் நிருபர்)

அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலையில் 120 பேருக்கு இலவச சத்திரசிகிச்சை

அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலையில் கண் பார்வை குன்றிய 120 பேருக்கு இலவச சத்திரசிகிச்சைகள் அண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளரின் வேண்டுகோளுக்கிணங்க புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பின் அனுசரணையுடன் இலவச சத்திரசிகிச்சைகள் அம்பாறை பொது வைத்தியசாலையில் இடம்பெற்றன. கொழும்பு தேசிய வைத்தியசாலையின் கண் சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர் வைத்தியர் ஜயசிரி டயஸ் தலைமையிலான குழுவினர் சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டனர். இதன்போது லண்டன் புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பின் தலைவர் பொறியியலாளர் கலாநிதி வேலாயுதம் சர்வேஸ்வரன், இலங்கைக்கான தலைவர் பொறியியலாளர் ஹென்ஹி அமல்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அம்பாறை பிரதேசத்தில் நான்கு வருடங்களுக்கு மேல் கண் சத்திரசிகிச்சைக்காக காத்திருந்த கண் பார்வை குன்றிய 120பேர் இதன்மூலம் பயனடைந்தனர்.

(இக்பால் அலி)

மலையகத்துக்கு சேவை செய்ய முன்வருபவர்கள் இருந்தால் நாம் நிச்சயம் வரவேற்போம்

எம்.ராமேஷ்வரன் எம்.பி

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

"மலையகத்தில் சேவைகளை முன்னெடுப்பதற்கு அரசியல் வாதிகள் தடையாக உள்ளனர் என ஒருவர் கூறியுள்ளார். அவரை வர வேண்டாம் என சொன்னது யார்? மக்களுக்கு சேவை செய்ய முன்வாருங்கள், நாங்களே மாலைபோட்டு வரவேற்பளிக்கின்றோம்." என்று இ.தொ.காவின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

ஆனால் தேர்தல் காலத்தில் வாக்குக்காக மட்டும் தானே எவரையாவது அழைத்துக்கொண்டு வருகின்றீர்கள், தேர்தல் முடிந்ததும் எங்களையும் கஷ்டத்தில் தள்ளிவிட்டு, காணாமல் போய் விடுகின்றீர்கள் எனவும் அவர் கூறினார்.

"சிறுவர்களுக்கான கனவுகள்" என்ற வேலை திட்டத்தின் கீழ் அவர்களின் நலன் கருதி பூண்டுலோயா பேர்லன்ஸ் தோட்டம் ஹெரோ பிரிவில், தலவாக்கலை லோகி தோட்டம், அக்கரகந்தை பெசிபன் தோட்டம், இராகலை பிரம்லி தோட்டம், இராகலை தோட்டம் மத்திய பிரிவு, இராகலை லிடஸ்டேல் தோட்டம் ஆகிய பகுதிகளில் நவீன தொழில்நுட்பம் கொண்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டன. இவை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் வழிகாட்டலின் கீழ் அமைக்கப்பட்டன. இவை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ராமேஷ்வரனின் பங்கேற்புடன் திறந்து வைக்கப்பட்டு மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டன.

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் ஊடாக உலக வங்கியின் அனுசரனையுடனும், பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் நெறிப்படுத்தலின் கீழ் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் மேற்பார்வையில் இவை நிறுவப்பட்டன. நவீன தொழில்நுட்பம் கொண்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள், குழந்தைகளின் சுகாதாரம், கல்வி அபிவிருத்தி மற்றும் அவர்களுடைய ஆக்கத் திறன்களை விருத்தி செய்தல் போன்றவற்றை இலக்காகக் கொண்டு இவை உருவாக்கப்பட்டுள்ளன.

இந் நிகழ்வில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் ஏ.பி.சக்திவேல், உப தலைவர் பிலிப், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதி செயலாளர் எம்.எஸ்.செல்லமுத்து, நுவரெலியா பிரதேச சபை முன்னாள் தலைவர் வேலு யோகராஜ், பிரதேச சபை உறுப்பினர்கள், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் நுவரெலியா மாவட்ட பணிப்பளார் ரஞ்சன் என பலரும் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, இந்த நிலையத்தை நிர்மாணிக்க அடிக்கல் நாட்டப்பட்டபோது ஒரு கோடி ரூபா மதிப்பிடப்பட்டது, ஆனால் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நிலைமையால் ஏற்பட்ட மாற்றங்களால் அதனை முன்னெடுக்க இரண்டரை கோடி ரூபா தேவைப்பட்டது, அமைச்சு பதவியை ஏற்ற பின்னர் அதற்கான ஒதுக்கீடுகளை எமது அமைச்சர் ஜீவன் தொண்டமான் வழங்கியுள்ளார். விலை அதிகரிப்பு என்பதற்காக நாம் திட்டங்களை கைவிடவில்லை. அதேபோல இந்தியா வழங்கவுள்ள 10 ஆயிரம் வீட்டு திட்டமும் முன்னெடுக்கப்பட்டது. அத்திட்டத்துக்கும் ஆரம்பத்தில் 9 லட்சம் ரூபா மதிப்பிட்டப்பட்டது. பின்னர் 28 லட்சம் ரூபா தேவைப்பட்டது. அதற்கான ஒப்பந்தமும் அண்மையில் கைச்சாத்திடப்பட்டது. மேலும் பல திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடுகளை வழங்க எமது அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கொத்மலையில் அமானுஷ்யமான சத்தத்தினால் அச்சம்

மக்கள் இரவு வேளைகளில் பாதுகாப்பான இடத்திற்கு இடம்பெயர்வு

நுவரெலியா மாவட்டத்திலுள்ள கொத்மலை வேத்தலாவ எனும் கிராமத்தில் நிலத்தின் கீழ் இருந்து நீர் செல்வது போலும் பல்வேறு விதமான அமானுஷ்யமான சத்தங்கள் கேட்பதாக கிராம மக்கள் அளித்துள்ள தகவலுக்கு அமைய 15) ஞாயிற்றுக் கிழமை முதல் அக்கிராமத்தில் வசிக்கும் 50 குடும்பங்களை இரவு நேரத்தில் மட்டும் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனை நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட தெரிவித்துள்ளார். அவர் இவ்விடயம் தொடர்பாக கருத்து தெரிவிக்கையில், கொத்மலை வேத்தலாவ கிராமத்தில் வாழும் மக்கள் வழங்கப்பட்டுள்ள முறைப்பாட்டுக்கு அமைய இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலாளர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இந்த கிராமமானது மலைகள் அற்ற ஒரு சமவெளிப் பகுதியில் கொத்மலை நீர்தேக்கத்திற்கு அருகில் அமைந்துள்ளதாகவும் தெரிவித்த நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட, அங்கு வழமையாக நிலத்துக்கு கீழ் இருந்து பல்வேறு சத்தங்கள் கேட்பதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதாகவும், அதன் அடிப்படையிலேயே அவர்களை பாதுகாப்பான இடங்களில் இரவு வேளையில் தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இங்கு அச்சப்படுவதற்கான காரணியாக இதுவரை அடையாளம் எதுவும் காணப்படவில்லை எனவும், எனினும் நுவரெலியா மாவட்ட கட்டடம் மற்றும் நிலம் ஆய்வு மைய அதிகாரிகளின் உதவியோடு குறித்த கிராமம் தொடர்பில் ஆய்வுகளை முன்னெடுக்க நடவடிக்க எடுக்கப்படவுள்ளதாகவும் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட மேலும் தெரிவித்தார்.

சீரற்ற காலநிலையால் இறப்பர் பால் சேகரிப்பு பாதிப்பு

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

பலாங்கொடைப் பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் சீரற்ற காலநிலை காரணமாக இறப்பர் பால் சேகரிக்கும் பணிக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக இறப்பர் தோட்ட உரிமையாளர்கள் மற்றும் இறப்பர் தோட்டத்தில் பணிபுரியும் ஊழியர்களும் தெரிவிக்கின்றனர்.

பலாங்கொடைகரவனல்ல ஒப்பனஆயக்க ஹஉனஉவல தன்தஎனஇய மஎடஇஹக்வல ரன்வல தெல்கஸ்ஹன்திய மாதொல ஆகிய பிரதேசங்களில் இறப்பர் தோட்ட உரிமையாளர்களும் அதேபோன்று நாளாந்தம் சம்பளத்திற்கு பணியாற்றும் தொழிலாளர்களும் பொருளாதார கஷ்டங்களுக்கு இதன் காரணமாக ஆளாகியுள்ளதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

இறப்பர் பால் வெட்டுவதற்கு வரட்சியான காலநிலை இருக்க வேண்டிய நிலையில் மழை காரணமாக இறப்பர் மரங்களில் ஈரத்தன்மை மற்றும் அதிகாலைப் பொழுதில் நிலவுகின்ற குளிர் நிலைமை காரணமாகவும் இறப்பர் உற்பத்திக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பன்றிக்கு வைத்த வெடியில் சிக்கிய பெண் தொழிலாளிக்கு காயம்

ஆ.ரமேஸ்.

கந்தப்பளை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பூப்பனை தோட்டத்தில் தேயிலை மலையில் பன்றிக்கு வைக்கப்பட்டிருந்த "அக்குபட்டாஸ்" வெடித்து (52) வயது பெண் தொழிலாளி ஒருவர் காயங்களுக்கு உள்ளான நிலையில் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பூப்பனை தோட்ட விளையாட்டு மைதானத்திற்கு அருகில் நூறு மீட்டர் தூரத்தில் காணப்படும் வீதியின் மேற்பகுதியில் உள்ள தேயிலை மலையில் இந்த வெடிப்பு சம்பவம் (16) காலை இடம்பெற்றுள்ளதாக கந்தப்பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கோகில ஆரியதாஸ தெரிவித்தார்.

இந்த சம்பவத்தில் தேயிலை மலையில் தொழில் செய்து கொண்டிருந்த (52) வயதுடைய பெண் தொழிலாளி தனக்கு ஒதுக்கப்பட்ட தேனீர் இடைவேளையின் போது தேனீர் அருந்திவிட்டு வெற்றிலை போடுவதற்கு தேயிலை மலையில் உள்ள கல் ஒன்றில் பாக்கு உடைக்க முற்பட்டபோது அக் கல்லுக்கு கீழ் இருந்ததாக கூறப்படும் "அக்குபட்டாஸ்" வெடித்து காயங்கள் ஏற்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இருப்பினும் இவ்வாறு வெடித்த வெடி "அக்குப்பட்டாஸ்" என்று சொன்னாலும் இதில் சந்தேகம் உள்ளதாக தெரிவித்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இது தொடர்பாக பரிசோதனையும், விசாரணையையும் மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

மாவனல்லை கல்வி வலயத்திற்கு உட்பட்ட முறைசாரா கல்விப்பிரிவு நடத்திய ஆறு மாத கால அழகுக்கலை பயிற்சி பாசறையை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மாவனல்லை பிரதேச சபை கேட்போர் கூடத்தில் பொறுப்பாசிரியை எம். ஐ.எஸ். கவ்சதா தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதில் அதிதிகளாக மாவனல்லை வலயக் கல்வி அதிகாரி எம். ஏ.பி.பிரியதர்சினியும் அழகுக் கலை நிபுணர் ஹசீனா மற்றும் நலன் விரும்பிகளும் கலந்து சிறப்பித்தனர். (அரநாயக்க செய்தியாளர்)

பஸ் நிலையத்தில் மாணவிகள் பெண்களுக்கு தொந்தரவு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி நகரப் பிரதான பஸ் நிலையம் மற்றும் பஸ் நிலைய நுழைவாயில்களில் பஸ் பயணங்களுக்காகக் காத்திருக்கும் பெண்கள் மீது இடம் பெற்று வரும் பாலியல் தொந்தரவுகள் குறித்துக் கணிசமான முறைப்பாடுகள் கிடைத்து வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பாடசாலை மாணவிகள் இளம் யுவதிகள் குடும்ப வயோதிப் பெண்கள் என இங்கு பஸ் பயணத்துக்காக காத்திருப்போர் பல வழிகளிலும் தொந்தரவுகளுக்கு உள்ளாக்கப்படுவதா க தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை மற்றும் பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்லும் மாணவிகள் தொழில் வாய்ப்புக்களுக்குச் செல்லும் இளம் யுவதிகள் குடும்பப்பெண்கள், அரச தனியார் நிறுவனங்களில் கடமையாற்றும் கௌரவமான குடும்பப் பெண்கள் என பலரும் இவர்களது தொந்தரவுகளுக்கு இலக்காகி வருவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. இவர்களது தனிமைத் துணைக்காக வரும் சில வயோதிபப் பெண்களும் இந்நிலைகளால் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. வீடுகளில் பெற்றோருக்கு தொந்தரவாக இருக்கும் இளைஞர்களே இவ்விடங்களில் நின்று இவ்வாறு நடந்து கொள்வதாகவும் இவர்களில் பலர் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. கேலி செய்தல், விளையாட்டு பொருட்களால் வீசியடித்தல், பாலியல் வார்த்தைப் பிரயோகங்கள் பாடசாலை மாணவிகள் இளம் யுவதிகளின் பின்னால் சென்று தொந்தரவு செய்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

சுண்ணாம்புக்கல் நீரூற்று குளத்தை மக்கள் பார்வைக்கு விடுமாறு வேண்டுகோள்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடை ரஜவக பிரதேசத்தி ல் அமைந்துள்ள சுண்ணாம்புக்கல் இயற்கை நீரூற்றுப் வலயத்தினுள் பொது மக்கள் உல்லாசப் பயணிகளுக்குச் செல்ல அனுமதிக்குமாறு பொதுமக்கள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புகள் வேண்டுகோள் விடுத்து வருகின்றன.

இப்பிரதேசத்தில் உல்லாசப் பொழுதைக் கழிக்க வரும் சில இளைஞர்கள் மற்றும் குழுக்களால் இந்த இயற்கை வளங்களுக்கு ஏற்படுத்தப்படும் பாதிப்புக்கள் காரணமாக இப் பிரதேசத்தில் பொது மக்கள் நுழைவதை பலாங்கொட பிரதேச சபை தடை செய்துள்ளது. இந்த இயற்கை வளம் மிக்க நீரூற்றை கண்டு கழிக்க பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் உல்லாசப் பயணிகள் ஆர்வம் காட்டி வருகின்ற இப்பகுதி பலாங்கொடைப் பிரதேச சபையினால் தொடர்ந்தும் மூடப்பட்டு வருகிறது.

இந்த இயற்கை வளம் மிக்க பிரதேசத்தை மீண்டும் திறப்பதன் மூலம் உல்லாசப்பயணிகளை கவரவும் பலாங்கொட பிரதேச சபைக்கு வருமானத்தைப் பெற்றுக் கொள்ளும் மூலமாகவும் இவ்வளத்தை பயன்படுத்தலாம் எனவும் இவர்கள் சுட்டி க் காட்டுகின்றனர்.

வத்துகாமம் பாரதி தமிழ் மகா வித்தியாலயத்தில் நேற்று காலை நவராத்திரியை முன்னிட்டு அதிபர் எஸ். செல்வராஜ் தலைமையில் பிரதம குருக்கள் எஸ். பி.சிவஸ்ரீ பவித்திரன் சர்மா விஷேட பூஜையினை நடத்துவதையும் அதில் கலந்து கொண்ட மாணவர்களையும் ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

படப்பிடிப்பு
எஸ். ராமதாஸ்

வடக்கின் உதயம்

மன்னார் தென்கடலில் இறந்து கரை ஒதுங்கும் கடலாமைகள்

(தலைமன்னார் விஷேட நிருபர்)

மன்னார் தென் கடற்பிராந்தியத்தில் அதிகமான கடலாமைகள்

இறந்து கரை ஒதுங்கி வருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். இதனையடுத்து இச்சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்காக வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வருகை தந்து விசாரணை நடவடிக்கையில் நேற்று ஈடுபட்டனர்.

கடந்த மூன்று தினங்களாக மன்னார் தென் கடல் பிராந்தியத்தில் அதிகமான கடலாமைகள் இறந்து கடலில் மிதந்து வருவதுடன் இறந்த நிலையில் அதிகமான கடலாமைகள் மன்னார் சிலாவத்துறை பகுதி கடற்கரைப் பகுதிகளில் கரையொதுங்கி வருவதாகவும் சிலாவத்துறை கிராமிய மீனவ சமாசத் தலைவர் அனாப்தீன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் துரித விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் இறந்த கடலாமைகளையும் மீட்டுள்ளனர்.

தொடர்ந்து கடந்த மூன்று தினங்களாக கடலாமைகள் இறந்த நிலையில் கரை ஒதுங்கி வருவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

காக்கைதீவு - சாவக்காடு கடற்றொழிலாளர் விவகாரத்திற்கு சுமுகமான தீர்வு

அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

(கரவெட்டி தினகரன் ,யாழ். விசேட நிருபர்கள்)

யாழ்ப்பாணம், சாவக்காடு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் காக்கைதீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றுக்கிடையில் ஏற்பட்டிருந்த தொழில்சார் முரண்பாடுகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலையீட்டின் காரணமாக சுமுகமாக தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. சம்மந்தப்பட்ட இரண்டு கடற்றொழில் சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் பொதுவான இறங்குதுறை மற்றும் மீன் சந்தை போன்றவற்றை பகிர்ந்து கொள்வது தொடர்பில் ஏற்பட்டிருந்த முரண்பாட்டை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலையீட்டு சுமுகமாக தீர்த்து வைத்துள்ளார்.

குறித்த விவகாரம் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் சம்மந்தப்பட்ட காக்கைதீவு பகுதிக்கு நேரடியாக சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இரண்டு தரப்பு கடற்றொழிலாளர்களினது கருத்துக்களையும் கேட்டறிந்தார்.

பின்னர், இரண்டு கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகளையும் தனது யாழ். அலுவலகத்திற்கு வரவழைத்து கலந்துரையாடலிலும் ஈடுபட்டார். அதற்கமைய கடற்றொழில் அமைச்சரின் ஆலோசனையின்படி இரண்டு தரப்பினரும் விட்டுக்கொடுப்புக்களை மேற்கொண்டு இறங்குதுறையையும் மீன்சந்தை பிரதேசத்தினையும் சுமுகமாக பகிர்ந்து கொண்டு தொழிலை முன்னெடுக்க சம்மதம் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாண சிறைச்சாலையில் கண் நோய் பாதிப்பு

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாண சிறைச்சாலையில் 100ற்கும் மேற்பட்டவர்களுக்கு கண் நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. யாழ்ப்பாண சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விளக்கமறியல் கைதிகள் மற்றும் தண்டனை கைதிகள் உள்ளிட்ட 100ற்கும் மேற்பட்டவர்களுக்கு கண் நோய் பரவியுள்ளதாக தெரியவருகின்றன. கண் நோய் பாதிப்புக்குள்ளானவர்களை தனிமைப்படுத்தி, நோய் பரவலை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மனைவியை கொலை செய்து விட்டு கணவன் தப்பியோட்டம்

(கோப்பாய் குறூப் நிருபர்)

யாழ்ப்பாணம் நாவற்குழி பகுதியில் மனைவியை கொலை செய்து விட்டு தப்பிச் செல்ல முற்பட்ட கணவன் பொலிஸாரால் நேற்று (16)கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய இக்கைது நடவடிக்கை அதிரடியாக முன்னெடுக்கப்பட்டது.

நாவற்குழி ஐயனார் கோயிலடியில் வசிக்கும் அஜந்தன் யமுனா என்கிற 23 வயதான இரண்டு பிள்ளைகளின் தாய் பலத்த காயங்களுடன் உயிரிழந்த நிலையில் நேற்று (16) காலை சடலமாக மீட்கப்பட்டார்.

குடும்ப தகராறு காரணமாக கணவரால் பெண் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகித்தமையால் கணவரை பொலிஸார் தேடிவந்தனர். இதன்போதே யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அண்மையில் முச்சக்கரவண்டியில் சந்தேகநபர் தப்பிக்க முற்பட்ட வேளையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். சந்தேகநபரை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து தீவிர விசாரணைகளை மேற்கொண்ட போது தான் மனைவியை தாக்கியதாகவும் அவர் இறந்துவிட்டதாக அறியவில்லையெனவும் என சந்தேக நபர் தெரிவித்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். கைதான சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

வீதி விபத்தில் படுகாயமடைந்த இளம் குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சி வேரவில் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் படுகாயமடைந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான இளம் குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பூநகரி வலைப்பாட்டைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான சிதம்பரநாதன் வர்மகுமார் (வயது 32) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்துக்குட்பட்ட வேரவில் பிரதான வீதியின் வேரவில் மருத்துவமனைக்கு அண்மித்த பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 7:30 மணியளவில் உழவு இயந்திரமொன்று மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான இளம் குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் ஜெயாபுரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் உரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்

அமைச்சர் மஹிந்த அமரவீர

(கோப்பாய் குறூப் நிருபர்)

வடமாகாணத்தில் இவ்வருடம் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் உரிய நேரத்தில் உரங்களை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம்(15) இடம்பெற்ற விவசாயக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் நெற்செய்கைக்கு மட்டுமின்றி மரக்கறி, பழங்கள் உள்ளிட்ட பயிர்களுக்கும் விவசாய திணைக்களம் அதிகூடிய ஆதரவை வழங்கும் எனவும் விவசாய அமைச்சர் கூறினார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ்,

நாட்டின் உள்நாட்டு உற்பத்திக்கு வடமாகாணத்தின் விவசாய செயற்பாடுகள் பெருமளவு பங்களிப்பதாகவும், வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், உடனடியாக தீர்க்கப்படக்கூடிய விடயங்கள் தொடர்பிலும் உரிய அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை வழங்கியதுடன் ஏனைய பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட வரட்சியால் பயிர் சேதமடைந்த விவசாயிகளுக்கு இழப்பீடு, விவசாய பாதுகாப்பு நிதி, உழவர் ஓய்வூதியம் ஆகியனவும் இந்நிகழ்வில் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மக்கள் பிரதிநிதிகள், வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ் மாவட்ட அரசாங்க அதிபர், மற்றும் விவசாய அமைப்பின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

தலைமன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

(மன்னார் குறூப் நிருபர்)

தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கடந்த சனிக்கிழமை மாலை இரண்டு படகுகளுடன் கைது செய்யப்பட்ட 15 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் நேற்று திங்கட்கிழமை (16) மாலை உத்தரவிட்டார்.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 15 இந்திய மீனவர்கள் கடந்த சனிக்கிழமை (14) மாலை தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் கடந்த சனிக்கிழமை(14) இரண்டு ரோலர் படகுகளில் எல்லைத் தாண்டி இலங்கை கடற்பரப்பில் நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட போது கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 15 இந்திய மீனவர்களும் தலைமன்னார் கடற்படை முகாமிற்கு கொண்டு வரப்பட்டு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை மலேரியா பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அதனைதொடர்ந்து கடற்படையின் ஆரம்பகட்ட விசாரணைகளின் பின்னர் மீனவர்கள் அனைவரும் மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளினால் பதிவுகள் மேற் கொள்ளப்பட்டதை தொடர்ந்து கைது செய்யப்பட்ட மீனவர்கள் அனைவரும் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் 15 மீனவர்களும் நேற்று திங்கட்கிழமை (16) மாலை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர். இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் மீனவர்களை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

பிரான்ஸுக்கு முகவரால் அழைத்துச் செல்லப்பட்டவர் பெலராஸ் எல்லையில் சடலமாக மீட்பு

(கிளிநொச்சி குறூப் நிருபர்)

பிரான்ஸுக்கு செல்வதற்கு சட்டவிரோத முகவர் ஒருவரை நம்பி சென்ற கிளிநொச்சி வட்டக்கச்சி பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் பெலாரஸ் நாட்டின் எல்லையில்சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக அவர்களது உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வட்டக்கச்சி மாயவனூர் பகுதியைச் சேர்ந்த பாலசிங்கம் யுகதீபன் என்ற 40 வயது மதிக்கத்தக்க ஐந்து பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவரது சடலம் அந்நாட்டு இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளதாகவும் சடலத்திற்கு அருகில் அவரது இலங்கை சாரதி அனுமதிப்பத்திரமும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பிரான்ஸ் நாட்டுக்கு செல்வதற்கு சட்டவிரோத முகவர் ஒருவரை நம்பி விமானம் மூலம் ரஷ்யா சென்று அங்கிருந்து பெலராஸ், போலந்து, ஜேர்மன் ஊடாக பிரான்ஸ் செல்வதற்காக பெலராஸிலிருந்து போலந்துக்கு சுமார் 700 கிலோமீற்றர் தூரத்தை நடந்து கடப்பதற்காக ஏழு பேர் கொண்ட குழுவுடன் சென்ற போது உடல்நிலை பாதிக்கப்பட்டு பெலராஸ் எல்லையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஏனையவர்கள் இவரை விட்டு சென்றுவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ். போதனா நிர்வாகம் - பாதுகாப்பு சேவை நிறுவனத்திற்கு இடையில் சந்திப்பு

(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நிர்வாகத்துக்கும் வைத்தியசாலையில் பாதுகாப்பு சேவையை மேற்கொள்ளும் தனியார் நிறுவன நிர்வாகத்தினருக்கும் இடையிலான கலந்துரையாடல் வைத்தியசாலையில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவர்,நோயாளியை பார்வையிட வந்தவரை வைத்தியசாலை வாயிலில் வைத்து தாக்கியமை தொடர்பாகவும், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வேறு சில சந்தர்ப்பங்களில் பொதுமக்களுடன் ஏற்பட்ட முரண்பாடுகள் தொடர்பாகவும் கொழும்பில் உள்ள LRDC பாதுகாப்பு தலைமை நிறுவனத்தில்(தனியார் பாதுகாப்பு நிறுவனம்) இருந்து உயர் அதிகாரிகள் வரவழைக்கப்பட்டு நேற்று வைத்தியசாலையில் முக்கிய கலந்துரையாடல் நடைபெற்றது.

இக்கலந்தரையாடலில் வைத்தியசாலை நிர்வாகத்தினால் LRDC தலைமை உத்தியோகத்தர்களுக்கு சில ஆலோசனைகளும் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

ஆசிரியர் தின விழா

(சாவகச்சேரி விசேட நிருபர்)

தென்மராட்சி கல்வி வலயத்தின் ஆசிரியர் தின விழா கடந்த 13ஆம் திகதி பிற்பகல் 1.30 மணியளவில் கொடிகாமம் ஏ9 வீதியில் அமைந்துள்ள நட்சத்திரமஹால் மண்டபத்தில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் இடம்பெற்றது .

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் க.மகேசன் கலந்து சிறப்பித்திருந்தார். மேலும் சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி நிர்வாக மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி பிரதீபா காயத்திரி கஜபதி கலந்து சிறப்பித்திருந்தார். அத்துடன் அதிபர்கள் ,ஓய்வு நிலை அதிபர்கள், ஆசிரியர்கள் ,ஓய்வு நிலை ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது ஆசிரியர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன்ஓய்வு நிலை அதிபர் ,ஆசிரியர்களுக்கு மாலை அணிவித்து நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. மேலும் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற அதிபர், ஆசிரியர்களுக்கு பதக்கம் அணிவித்து சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

தலைமன்னாரில் ரூ.94 மில்லியன் பெறுமதியான போதைப் பொருள் மீட்பு

(மன்னார் குறூப் நிருபர்)

இலங்கை கடற்படையினரால் நேற்று (16) தலைமன்னார் உறுமலை கடற்கரைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் மூலம் 04 கிலோவுக்கும் அதிகமான Crystal Methamphetamine (ICE), சுமார் 01 கிலோ ஹெரோயின் மற்றும் 05 கிலோவுக்கும் அதிகமான ஐஸ் போதைப்பொருள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

கடற்படையினர் நேற்று (16) அதிகாலை தலைமன்னார் கிராம பகுதி கடற்கரை பகுதியில் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டதோடு கடற்கரையில் சந்தேகத்திற்கிடமான படகு ஒன்றையும் சோதனை செய்தனர்.

இதன்போது சுமார் 04 கிலோ மற்றும் 194 கிராம் எடையுள்ள கிரிஸ்டல் மெத்தம் பெட்டமைன் நான்கு பொதிகளும்,01 கிலோ மற்றும் 034 கிராம் எடையுள்ள ஹெரோயின் ஒருபொதி ,சுமார் 05 கிலோ மற்றும் 254 கிராம் எடையுள்ள ஹாஷிஸ் 5 பொதிகளும் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மீட்கப்பட்ட போதைப்பொருளின் சர்வதேச மதிப்பு 94 மில்லியன் என கடற்படை தெரிவித்துள்ளது.

கடற் படையினரால் கைப்பற்றப்பட்ட போதைப் பொருள் மற்றும் படகு என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

மேலதிக விசாரணைகளை தலைமன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

மக்கா புனிதத்தலங்களில் சவூதி அரேபியா மேற்கொள்ளும் அபிவிருத்திப் பணிகள்

சுமார் 100 வருடங்களுக்கு முன்னர் மக்கா ஹரம் ஷரீபின் நிலையும், அக்காலத்தில் நடைபெற்ற ஹஜ் நிகழ்வுகளில் காணப்பட்ட நடைமுறையும் மிகவும் கவலைக்குரியவை. அக்காலத்தில் பெரிய வசதிகள் இருக்கவில்லை.

கடினமான நீண்ட தூரப் பயணங்கள், கடுமையான பாலைவன வெயில், உஷ்ணம், ஹஜ்ஜுக்காக வருபவர்கள் தமக்கு முடியுமான கூடாரங்களை தாமே அமைத்துக் கொள்ளுதல் போன்ற நிலைமையே காணப்பட்டன.

அத்துடன் ஹஜ்ஜாஜிகளின் அதிகரிப்பு, சனநெரிசலால் ஏற்படும் மரணங்கள், கூடாரங்கள் தீப்பிடிக்கும் அபாயம் என்பன பெரும் சவாலாகவே விளங்கின.

ஆகவே மக்கா ஹரம் ஷரீபையும், ஹஜ்ஜோடு தொடர்பான புனிதத்தலங்களையும் மிகவிரைவாக அபிவிருத்தி செய்ய வேண்டிய நிர்ப்பந்த நிலைமை உருவானது.

இதனால் குறித்த பகுதிகளில் சவூதி அரேபியாவின் காலம் சென்ற முன்னாள் மன்னர்களது காலத்திலும் தற்போதைய மன்னர் சல்மான் அவர்களது காலத்திலும் பாரிய அபிவிருத்திப் பணிகளும் வசதிகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டன; இன்றும் மேற்கோள்ளப்பட்டு வருகின்றன.

அந்த அபிவிருத்திப் பணிகளுள் மிக முக்கியமாக ஜமராத் கல் எறியும் இடங்கள் பாலங்கள் மற்றும் தீ தடுப்புக் கூடாரங்கள், விசாலமான வீதிகள், போக்குவரத்து வசதிகள், தகவல் தொடர்பு, பள்ளிகளின் கட்டுமானம் மற்றும் விரிவாக்கம் , சுகாதார சேவைகள், நீர், மின்சாரம், பாதுகாப்புத் திட்டங்கள் என பலதரப்பட்ட வசதிகளும் அபிவிருத்திப் பணிகளும் வாரலாறு காணாத வகையில் பாரிய அளவில் மிகத் துல்லியமாக மேற்கோள்ளப்பட்டுள்ளன.

உண்மையில் இவை சிறப்பான சேவைகளாகும்.

ரமழான் மாதங்களில் உம்ராவுக்காக வருகை தரும் நோயாளிகள், வயோதிபர்களுக்கு தவாப், சஃயு செய்தல் போன்றவற்றை இலகுபடுத்தும் வகையில் 3000 இற்கும் அதிகமான தானியங்கி மின்சார வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன.

ஒவ்வொரு முறையும் ஹஜ்ஜு, உம்ராவுக்குச் செல்பவர் மக்கா, மதீனா ஆகிய இரு புனிதத் தலங்களிலும் ஏதோ ஒரு வகையில்

சிறப்பான சேவையொன்று மேலதிகமாக செய்யப்பட்டுள்ளதை கண்டுகொள்வார்.

இதனால்தான் தற்போதைய சவூதி அரேபிய மன்னர்களின் பெயர்களுக்கு முன்னால் 'இரு புனிதத் தலங்களின் சேவகர்' என்ற பதம் பயன்படுத்தப்படுகின்றதாம்.

தற்போதைய புனித மக்கா ஹரமின் வசதிகள், சேவைகள் சிலவற்றை இங்கு அவதானிக்கலாம்.

பரப்பளவு: ஒரு மில்லியன் சதுர மீட்டர். 2 மில்லியன் மக்கள் தங்க முடியும். 24 மணி நேரமும் திறந்திருக்கும். ஒருபோதும் மூடப்படுவதில்லை.

1800 துப்புரவு செய்யும் தொழிலாளிகள் பணியாற்றுகின்றனர். துப்புரவு செய்வதற்காக 40 மின்சார வாகனங்கள்.

வெளிமுற்றத்தை சுத்தம் செய்ய 60 அதிநவீன இயந்திரங்கள். 2000 சுகாதார கொள்கலன்கள். உள்ளே 40000 ஆயிரம் பெரும் விரிப்புகள் விரிக்கப்பட்டுள்ளன. 13,000 மலசலகூடங்கள், குளியலறைகள் உள்ளன. ஒரு நாளைக்கு 4 முறை சுத்தம் செய்யப்படுகின்றன.

25,000 ஆயிரம் தண்ணீர் கொள்கலன்கள் உள்ளன. இது உலகின் மிகப்பெரிய நீர் விநியோக திட்டங்களுள் ஒன்று. அல்

ஹரமைன் அல்குர்ஆன் இலவச சேவை 24 மணி நேரமும் உள்ளது. இதன் மூலம் 180 இற்கும் மேற்பட்ட நாடுகள் பயனடைகின்றன. பொருட்களைப் பாதுகாக்க 2000 இற்கும் மேற்பட்ட பாதுகாப்பு பெட்டிகள்.

ஒலி, ஒடியோ சிஸ்டம்ஸ் வருமாறு: பிழை வீதம் 0%

6000 ஒடியோ ஸ்பீக்கர்கள், 4 வெவ்வேறு ஒலி அமைப்புகள், ஒடியோ முறைமையை சீர் செய்ய 50 பொறியியலாளர்கள் தயார் நிலையில்.

விஷேட தேவையுடையோருக்கான சேவைகள். 400 மின்சார கார்கள், நோன்பாளிகளுக்கான இப்தார் ஏற்பாடு. இப்தாருக்குப் பிறகு இரண்டே நிமிடங்களில் சுத்தம் செய்யப்படும். ஸம்ஸம் தண்ணீர் இலவசமாக விநியோகம்.

எந்தவொரு இடத்திலும் இல்லாத பிரமாண்டமான ஏற்பாடுகள். இவ்வளவு வசதிகளுடன்தான் மக்கா ஹரம் ஷரீபுக்கு அழகான, ஆன்மீகமான சூழலை தருகின்றது.

உலகெங்கிலும் இருந்து வருகை தரும் மக்கள் ஆன்மீகம் நிறைந்த இந்த அழகான சூழலில் தமது ஹஜ், உம்ரா கிரியைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதற்கான கீழ்வரும் பாதுகாப்பான, சுகாதார ரீதியான ஏற்பாடுகள் சவூதி அரசாங்கத்தினால் மிகத்துல்லியமாக செய்யப்படுகின்றன.

அனுபவமும் ஆற்றலும் கொண்ட உல

மாக்களால் மார்க்க வழிகாட்டல்கள். ஹஜ்ஜோடு தொடர்பான பல்வேறு புனிதத் தலங்களிலும் பல மருத்துவ முகாம்கள் தயார் நிலையில், சத்திர சிகிச்சைகள் கூட தேவையேற்படின் இலவசமான முறையில். ஹாஜிகளை வரவேற்பதற்காக விமான நிலையத்திலிருந்து அன்பளிப்புகள்.

மக்கா ஹரம், மதீனா ஹரம், மினா, அரபாத், முஸ்தலிபா போன்ற புனிதத் தலங்களில் சிறப்பான ஏற்பாடுகள்.

இஹ்ராம் அணிந்த ஒருவர் தனது தங்குமிடத்தில் இருந்து ஹரம் ஷரீபுக்கு செல்வதற்கான இலவச பஸ் சேவை.

இத்தனை சேவைகளுக்கு மத்தியில்தான் ஹஜ், உம்ரா போன்ற கடமைகளை மக்களால் இலகுவாக நிறைவேற்ற முடிகின்றது. அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

அஷ்ஷைக் பாஹிர் சுபைர் கபூரி ரியாதி
உப அதிபர் சுமையா அரபுக் கல்லூரி
கிண்ணியா

அரசின் கலாபூஷணம் விருது பெற்றார் தினகரன் பிரதேச ஊடகவியலாளர் தஸ்தகீர்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பு மஹர கமவில் நடைபெற்ற அரச கலாபூசண விருது வழங்கும் நிகழ்வில் இலங்கையில் தெரிவான 10 முஸ்லிம்களில் ஒருவராக ஒய்வுபெற்ற உணவு மற்றும் மருந்து பரிசோதகர் எஸ்.தஸ்தகீர் கலாபூஷணம் பட்டம் பெற்றார்.இவர் தினகரன் பிரதேச ஊடகவியலாளர் ஆவார்.

கிழக்கு மாகாணத்தில் சாய்ந்தமருது பிரதேசத்தில் இலக்கியம் ஊற்றெடுத்த ஒரு ப ழைமை வாய்ந்த குடும்பமாக மருதூர் குடும்பத்தைக் குறிப்பிடலாம். இக்குடும்பத்தில் பன்னூலாசிரியர், பிரபல இலக்கியவாதி மர்ஹூம் மணிப்புலவர் மருதூர் ஏ.ம ஜீத் மற்றும் கலாபூசணம் ஏ.பீர்முஹம்மது, மர்ஹூம் மருதூர் அலிகான், மருதூர் அக்பரலி, மருதூர் ஏ. ஹசன் ஆகியோர் தத்தமது ஆளுமைக்கேற்ப இலக்கியத்தை வளர்த்து நாடறியச் செய்தனர்.

இ வர்களின் ஒன்றுவிட்ட சகோதரரான கல்முனை தஸ்தகீர் இக்குடும்ப இலக்கியத்தில் இரண்டறக் கலந்து இப்பாசறையில் பயிற்றுவிக்கப்பட்டு தன்னையும் ஓர் கவிஞராக, கலைஞராக, எழுத்தாளராக அறிமுகம் செய்யப்பட்டார்.

இவரது பாடசாலைக் காலத்தில் மறைந்த பிரபல இலக்கியவாதி தெணியானின் சகோதரரான க.நவம் எழுதிய 'இந்த தேசத்துக்காக' எனும் நாடகம் தேசிய மட்ட தமிழ்த்தின விழா போட்டி_1973 இல் தங்கப்பதக்கம் வென்றது. இந்நாடகக் குழுவில் தஸ்தகீர் அவர்களும் ஒருவராக இருந்தார்.

இவரது முதலாவது கவிதை அவர் கல்விகற்ற கல்முனை சாகிறாவினால் வெளியிடப்பட்ட 'சாஹிறா' சஞ்சிகையில் 1978 ஆம் ஆண்டு' நோன்பாமே நோன்பு' என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்டது.

1982 ஆம் ஆண்டு களுத்துறை தேசிய சுகாதார விஞ்ஞான நிறுவனத்தில் முழு நேர டிப்ளோமா பயிற்சி நெறியை பூர்த்தி செய்த பின் சுகாதாரத் திணைக்களத்தின் பொதுசுகாதாரப் பரிசோதகராகவும் பின்னர் மேற்பார்வை பொதுசுகாதாரப் பரிசோதகராகவும் பல வருடங்கள் கடமையாற்றி

னார். பின்னர் சுகாதாரத் திணைக்களத்தின் உணவு மருந்துகள் பரிசோதகர் பதவிக்கான போட்டிப் பரீட்சையில் சித்தி அடைந்து விசேட பயிற்சியின் பின்னர் பிராந்திய உணவு மருந்துகள் பரிசோதராக நியமிக்கப்பட்டார். இப்பதவிகளின் மேலதிக நிபுணத்துவப் பயிற்சிகளை ஜப்பான், தாய்லாந்து, புதுடில்லி போன்ற நாடுகளில் பெற்றுக் கொண்டார். இவருடைய கடமைக் காலத்தில் பல்லின சமூகங்களுடன் சுகாதார சேவை செய்த சந்தர்ப்பங்களில் பொதுமக்களுடன் நெருங்கிப் பழகியமையால் சமூகத்தில் உள்ள சுகாதாரக் குறைபாடுகளையும்,

சுகாதாரத் தேவைகளையும் இனம் கண்டு சுகாதாரப் பரப்பில் சமூகங்கள் விழிப்படைய வேண்டும் என்பதையும், எதிர்காலத்தில் திடகாத்திரமான சமூகம் உருவாக வேண்டும் என்பதையும் நோக்காகவும் கருப்பொருளாகவும் கொண்டு தனது கவிதைகளையும் கட்டுரைகளையும் வரைந்துள்ளார்.

சுகந்தப் பூக்கள், இன்று தான் திருமணம், நான் ஒரு உயிர்கொல்லி, முனையின் மகுடம், நோய்களின் கேடயம் நோன்பு, சமநிலை, துஆ செய்வோம், மாசடைந்த மானுடம், சுகப்பிரசவம், தாய், சமாதான ஒளியேற்ற, சமிபாடு, யார் ஓவியன்?, கொவிட் பிண வாடை, அதிவலு, காகம், உலக கிட்லர் கொரோனாவே, தாயின் பிம்பம், நடமாடும் கைதிகள் நாம், என்றும் வாழும் ஜிப்ரி, பாவிகள் யார்?, செருப்புச் சோடி, முகக்கவசம் போன்ற கவிதைகளை எழுதியுள்ளார்.

கவிதைகள் தவிர்ந்த ஏனைய பல்வேறு ஆக்கங்களை அவர் எழுதியுள்ளார். 1977 ஆம் ஆண்டில் 'கல்முனை இளைஞர் கலை வட்டம்' எனும் அமைப்பை உருவாக்கி அதன் பதில் தலைவராக செயல்பட்டார். இம்மன்றத்தினால் பல நாடகங்கள், கவியரங்குகள், பேச்சுப்போட்டிகள் போன்றவைகளும் நடத்தப்பட்டன.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனம், ஊவா வானொலி போன்ற அமைப்புக்களினால் இவருடன் நடத்தப்பட்ட நேர்காணல் நிகழ்வுகளில் பங்குகொண்டு பொதுமக்களுக்கு பல பிரயோசமிக்க கருத்துகுகளை வழங்கினார்.

இவரது சொந்த கற்பனையில் எழுதப்பட்டு நெறிப்படுத்தப்பட்ட சிலைகளும் சிரிக்க வைக்கும், வைத்தியம், பள்ளிக்கூடம் போன்ற நாடகங்கள் மிகவும் பிரபல்ய மிக்கவை.

இவரது கட்டுரைகள்,கவிதைகள் அனைத்தும் தேசிய பத்திரிகைகளான தினகரன், வீரகேசரி, நவமணி, டெய்லி நியூஸ் போன்ற தேசியப் பத்திரிகைகளிலும் சுகி, அரண்,சுகமஞ்சரி, ஸாஹிறா போன்ற சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன.

இவர் கல்முனை பிரதேச செயலகத்தின் கலாசார அதிகார சபையின் செயற்குழு உறுப்பினராக செயற்பட்டு இச்சபையினால் நடாத்தப்படும் சகல கலாச்சார நிகழ்வுகளுக்கும் கூடிய ஒத்துழைப்பு வழங்கி வருகின்றார். மேலும் இலங்கை தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் உறுப்பினராகவும், கண்டி மலையக கலை கலாச்சார சங்கத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளராகவும், இந்திய தமிழ் பட்டறை இலக்கியப் பேரவையின் இலங்கைக்கான கிளையின் அங்கத்தவராகவும், இந்திய திருவள்ளுவர் பத்திரிகையாளர் சங்கத்தின் இலங்கை நாட்டுக்கான இணைப்பாளராகவும் செயற்பட்டு வருகிறார்.

இவரின் இலக்கிய செயற்பாடுகளைக் கௌரவித்து இலங்கை கலாசார அதிகார சபை இவருக்கு 'கலைஞர் சுவதம்' விருதினை கடந்த 2022 ஆம் ஆண்டு வழங்கி கௌரவித்தது.

இவரின் கவிதைகளுக்கு இலங்கை மற்றும் இந்தியா நாடுகளினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்று பல வாழ்த்துக்களும் பட்டங்களும் கிடைத்துள்ளன. அவை சிந்தனைச் சிற்பி, கவி மாமணி, பாவலர், சமூக சிந்தனையாளர், கவிச்செம்மல், கவிப் புயல், கவிச்சித்தர், காதல் கவிநிலவு என்பனவாகும்.

பிரதேச மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம்_ தேசிய மட்டம், சர்வதேச மட்டங்களில் இவருக்கு பல கௌரவ விருதுகள் கிடைத்துள்ளன. தஸ்தகீர் அவர்களின் தனிப்பட்ட குடும்பம் ஒரு இலக்கிய குடும்பமாகும். மூத்த சகோதரர் மர்ஹூம் செய்யது முஹம்மது (அதிபர்) தனது சொந்த ஆர்மோனியத்தினால் பாடல்களுக்கு இசையமைப்பவர். இவரது இரண்டாவது சகோதரர் மர்ஹூம் எஸ்.அப்துல் ஜப்பார் இவர் பாடல்களை தானே இயற்றி இசையமைத்து பாடுபவர். இவரது மூத்த புதல்வன் ரி. முஹம்மத் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றவர். இவரது கனிஷ்ட புதல்வி ரி. பாத்திமா ஹப்ஷா இவர் பாடசாலை மட்டத்தில் 'எதிர்நீச்சல்' எனும் நாடகத்தில் தாயாக நடித்தார். 'முன்னேற்றம்' எனும் மேடை நாடகத்திலும் மகளாக நடித்து பலரின் பாராட்டுக்களைப்பெற்றார். இவரது மருமகன் எஸ். அஷ்ரப்கான் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஆவார்.

– எஸ்.அஷ்ரப்கான்
(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

உள்ளங்களை பண்படுத்தும் வல்லமை வாய்ந்தது வாசிப்பு

வாசிப்பு ஒரு மனிதனை முழுமையாக்குகின்றது என்பர். இது பழைய வாசகம் என்றாலும் ஆழமான அர்த்தங்களை தாங்கிய வாசகமாக இருக்கின்றது. மனிதனுக்கு போதிய அறிவு இல்லையென்றால் அவனால் ஒரு காரியத்தை முழுமையாக்க முடியாது.

வாசிப்பு இல்லாதவன் அறிவைப் பெற முடியாது. வாசிப்பில்லாத மனிதனின் பேச்சுகள் தெளிவற்றதாகவே காணப்படும். வாசிப்பின் உருசியை உணர்ந்தவன் வாசிப்பால் உயர்ந்தவனாக காணப்படுவான். மனிதனை மனிதனாக்குவது கல்வியும் அதனோடிணைந்த வாசிப்பும்தான். இதனையே "நீரளவே ஆகுமாம் நீராம்பல், தான் கற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு" என ஔவையார் நாலடியார் நூலில் பாடியுள்ளார்.

தனக்கு மரணம் நிச்சயம் எனத் தெரிந்தும் தன்னை தூக்கிலிடுவதற்கு ஒரு நிமிடம் முன்பு வரை புத்தகத்தை வாசித்துக் கொண்டே இருந்தாராம் பகத்சிங்.

ஒரு கோடீஸ்வராக இருந்தாலும் அவன் வீட்டில் வாசிப்பிற்காக ஓரிடமோ அல்லது சில புத்தகங்களோ இல்லையெனில் அவன் சொத்துக்களற்ற ஏழைக்கு சமனாவான்.

'எட்டானல் வெலோசிற்றி' எனும் நூல்தான் டொக்டர் அப்துல் கலாமை அணு விஞ்ஞானியாக மாற்றியது என அவரே குறிப்பிட்டுள்ளார்.

மகாத்மாகாந்தியின் சத்தியசோதனை புத்தகம்தான் மார்ட்டின் லூதர் கிங்கை உருவாக்கியது.

இறுகிய தரிசு நிலங்களை உழுது பண்படுத்துவது போல் வாசிப்பும் மனித மனங்களை பண்படுத்தி நல்ல பண்புள்ளவனாக மாற்றிவிடும் சக்தி கொண்டதாக இருக்கின்றது. வாசித்துக் கொண்டிருப்பவர்களைப் பார்த்து "எப்போது பார்த்தாலும் வாசிப்பும் நூலகமும்" என கிண்டல் செய்பவர்களும் எம்மில் இருக்கத்தான் செய்கின்றனர்.

ஒரு எழுத்தாளனுக்கு சொற்பிரயோகங்கள், தமிழ் இலக்கண வழுக்களற்ற நடை, சமூகமயமாகுதல், உலக நடத்தைகள் மற்றும் நாளாந்த, வாராந்த, மாதாந்த நடப்புகள் என பல விடயங்கள் தேவையாக இருக்கின்றன.

வாழ்க்கைக்குத் தேவையான நடைமுறை பற்றிய ஒவ்வொரு தலைப்புக்களிலான நூல்கள் ஆயிரமாயிரம் வெளிவந்துகொண்டுதானிருக்கின்றன.

அதேபோன்று அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான, அறிவு சார்ந்த இன்னும் பல வகையான எத்தனையோ நூல்கள் வெளிவந்துள்ளன. வாசிப்பை வாழ்க்கையில் ஒரு பகுதியாகக் கொண்டவர்கள் வாழ்க்கையை வென்றுவிடுவார்கள்.

நாளாந்த பத்திரிகை வாசிப்பு எம்மில் மிகவும் குறைந்து விட்டது. பத்திரிகைகள், சஞ்சிகைகளின் வெளியீடுகளும் குறைந்து

விட்டன. வாசிப்பு மீதான நாட்டம் மக்கள் மத்தியில் குறைந்ததே இதற்குக் காரணம். பத்திரிகைகளை சமூக ஊடகங்கள் ஆக்கிரமித்து விட்டன.

தன் கையடக்கத்தில் 'ஸ்மார்ட் போன்' இருந்தால் உலகே கையில் வந்தது போன்ற உணர்வில் வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகம் வாசிப்பின் பயனை இன்னும் உணரவில்லை. சமூக ஊடகங்களில் வீண்வாதங்களும் புரளிகளும் போர்களுமே இன்று பரவலாய் பொழுதுபோக்காக மாறியுள்ளன.

"ஒருகோடி ரூபாய் கிடைத்தால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டபோது, "ஒரு நூலகம் கட்டுவேன்" என்று பதிலளித்தாராம் மகாத்மா காந்தி. வாசிப்பைத் தூண்டக்கூடிய வகையில், வாசிப்பை ஊக்கப்படுத்தக் கூடிய வகையில் குழந்தைகளுக்கு அதற்கான வழிகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டியது பெற்றோரின் கடமை. பரீட்சை வினாத்தாள்களை சரளமாக வாசித்து விடை எழுத எத்தனை மாணவர்களால் இன்று முடியுமாக இருக்கிறது என்றால் அது குறைவு தான்.

ஏனென்றால் அவர்கள் பிறந்து நடைபயில முன்பதாகவே அவர்களின் தொல்லை தாங்க முடியாமல் கையில் ஸ்மார்ட் போன் கொடுக்கப்படுகிறது.

அங்கேயே அவர்களது மூளை சோர்வடைய ஆரம்பித்து விடுகிறது. வகுப்பில் உள் நுழைந்து ஆராய்ந்து பார்த்தால் எத்தனையோ மாணவர்கள் வாசிப்பில் சரளம் இல்லை என்பது தெரிந்து விடும். மாணவர்கள் மத்தியில் உச்சரிப்பு, எழுத்துக்களை அடையாளம் காண்பது போன்றவற்றில் பல பிரச்சினைகள் நிலவுகின்றன.

"ஒரு குழந்தைக்கு நீங்கள் வாங்கித்தரும் ஆகச் சிறந்த பரிசு ஒரு புத்தகம்தான்" என்றாராம் வின்ஸ்டன் சேர்ச்சில்.

வாழ்க்கையில் வெற்றி பெற்று உயர் இடங்களில் உள்ளவர்கள் அனைவரின் பின்புலத்தை ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் நல்ல வாசிப்பாளனாகத் தான் இருந்திருக்கின்றார்கள்.

முஹம்மது இஸ்மாயீல் ஹைறுன்னிஸா
(Diploma in Journalism SEUSL)

நுண்நிதித் துறையின் முன்னோடி நாங்கள் முன்னரைவிட இப்போது பலமாக உள்ளோம்...!

சமுர்த்தி வங்கி

இலங்கையின் நுண்நிதித் துறையில் சுமார் மூன்று தசாப்த கால அனுபவம் மற்றும் நிபுணத்துவம் கொண்ட நாம் இன்று நுண்நிதித் துறையில் முன்னணியில் உள்ளோம். உங்களை வெற்றி பெறச்செய்து அந்த வெற்றியை நாங்களும் அடைந்து விட்டால் அது உங்களுக்கும் எங்களுக்கும் பெருமையாக அமையும். தற்போது 1089 சமுர்த்தி வங்கிகளும் 335 வங்கிச் சங்கங்களும் இயங்கி வருகின்றன. சமுர்த்தி வங்கி வலை யமைப்பிற்கு சொந்தமான மொத்தச் சொத்துக்களின் தொகை ரூபா. 255 பில்லியனைத் தாண்டியுள்ளது. இதில் நிதிச் சொத்து க்கள் மாத்திரம் ரூபா. 220 பில்லியனாகும். சமுர்த்தி வங்கியின் நிதி நிலைமை முன்னரைவிட தற்போது மிகவும் பலமாகவுள் ளது. இதனாலேயே ஏனைய நுண்நிதி நிறுவனங்கள் சமுர்த்தி வங்கிகளுக்கு சவால் விட முடியாத நிலை காணப் படுகின்றது.

சமுர்த்தி வங்கியின் அங்கத்துவம்

மிகக் குறைந்த எண்ணிக்கையிலான அங்கத்தவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி வங்கிகள் தற்போது 42 இலட்சம் அங்கத்தவர்களை தாண்டியுள்ளது. இதில் பெண்களின் பங்கேற்பு சுமார் 68% அளவில் காணப்படுகின்றது. சமுர்த்தி வங்கிகள் பெண்களின் பங்களிப்புடன் உருவாக்கப் பட்ட சமுதாய அடிப்படையிலான வங்கிகள் என நாம் பெருமையுடன் கூறிக்கொள்ள முடியும். இதுவரைக் குமான பங்கு மூலதனத்தின் பெறுமதி 2170 கோடி ரூபாவினை தாண்டி யுள்ளது. இது ஒரு மாபெரும் சக்தியாகும். சேமிப்பு வைப்புகள் ஒட்டு மொத்த வங்கி வலையமைப்பிலும் மொத்த சேமிப்புத் தொகை பங்கு வைப்புத் தொகையுடன் சேர்த்து 17,100 கோடி ரூபாவாகக் காணப்படுகின்றது. இது வங்கி வலையமைப்பின் நிதி ஸ்திரத்தன்மையினை தெளிவாக விளக்குகிறது. தற் போது ஏனைய தனது வைப்புகளுக்கான வட்டி வீதங்களை மிக வேகமாக குறைத்து வரும் நிலையில் சமுர்த்தி வங்கிகள் தனது நிலையான வைப்புகளுக்கு 13% வட்டியினை செலுத்தி வருகின்றது. ஏனைய வைப்புகளுக்கும் சமுர்த்தி வங்கி யினால் அதிக வட்டிகள் வழங்கப்படுகின்றது.

சமுர்த்தி வங்கிக் கடன் திட்டம்

ஆரம்ப காலத்தில் மிகக் குறைந்த தொகையான 5000 ரூபாவில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட கடன் திட்டங்கள் இன்று 20 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இதனை 50 இலட்சம் வரை உயர்த்துவதற்கு திட்டமிட்டுள்ளோம். தற் போது நாட்டில் உள்ள ஏனைய வங்கியின் கடன் வட்டி வீதம் 20%க்கு மேல் காணப்படும் நிலையில் சமுர்த்தி வங்கிகள் ஒவ்வொரு கடன் வகைகளின் தன்மைக்கு ஏற்ற விதத்தில் 4% தொடக்கம் 15% வரை கடன் வட்டியினை வசூலித்து வரு கின்றது. இது ஒரு தனித்துவமான நிலையாகும். தற்போது 19 வகையான கடன் திட்டங்கள் செயற்பாட்டில் உள்ளன. வங்கி வலையமைப்பில் வருடத்திற்கு 450,000 500,000 வரையான குடும்பங்களுக்கு 4,000 கோடி ரூபாவிற்கு மேல் (40,000 மில்லியன்) கடனாக வழங்கப்படுகிறது. வருடாந்தம் கடன் பெறும் குடும்பங்களில் 150,000 இற்கும் அதிகமான குடும்பங்கள் பொருளாதார ரீதியாக வலுப் பெற்று வருவதாக ஆய்வுகள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

சமுர்த்தி வங்கி திட்டத்தின் சிறப்பம்சங்கள்

- வருடாந்த வட்டி வீதம் 4% முதல் 15% வரையாகும்.
- குழுப்பிணையுடன் 5 இலட்சம் வரை கடன்கள் பெற முடியும்.
- கூடியது இரண்டு வாரங்களுக்குள் கடனை பெற முடியும்.
- ஆரம்பக் கடன் தொகையாக ஒரு இலட்சத்துடன் ஆரம்பித்தல்.

- உங்கள் கிராமத்திலே வங்கிகள் அமைந்துள்ளதனால் கடனை பெற்றுக்கொள்வதற்கான செலவுகள் மிகக் குறைவு.
- கடன் காப்பீடு, கூட்டுக் காப்பீட்டு முறைகள் செயற்படுத்தப்படுகின்றது.
- கருத்திட்டத்தின் தனித்துவமான தன்மையைப் பொறுத்து கூடிய கடன் தொகையினை பெற்று கடன் நிதியிலிருந்தே திட்டங்களை ஆரம்பிக்க முடியும்.
- மக்களை அநியாய வட்டிக்காரர்கள் மற்றும் நுண் நிதிக் கடன் பொறிகளில் இருந்து மீட்டெடுக்க பங்களிப்பு செய்தல்.
- கிராமத்திற்கு மொபைல் அப் (Mobile App) முறையினை அறிமுகம் செய்தல்.
- சமுதாய அடிப்டை அமைப்பின் ஊடாக துரித கடன் திட்டமான அருணலு கடன் முறையினை கிராமத்திற்கு அறிமுகம் செய்தல். இணைய வங்கி வலையமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது (வங்கிகள் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளன).
- 20 இலட்சம் வரை கடன் வசதியினை பெற்றுக் கொள்ள முடியும் போன்ற விசேட வசதிகள் சமுர்த்தி வங்கியில் உள்ளன.

2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சமுர்த்தி சட்டத்திற்கு அமைய தற்போது சமுர்த்தி வங்கி வலையமைப்பு செயற்பட்டு வருவதுடன் இது ஒரு சட்டபூர்வமான நுண்நிதி நிறுவனமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மத்திய வங்கியின் தலையீட்டுடன் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்க முகாமைத்துவ சபையின் மூலம் நிருவகிக்கப்படுகின்றது.

சமுர்த்தி திட்டம் மற்றும் அஸ்வசும திட்டம்

சமூக நலன்புரி நன்மைகள் சபையினூடாக மேற்கொள்ளப் பட்ட ஆய்வுத் தரவுகளின் அடிப்படையில் தற்போதைய அரசு அஸ்வசும எனும் புதிய நலனுதவித் திட்டத்தை செயற்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதுவும் இதுவரை நடைமுறைப் படுத்தப்பட்ட சமுர்த்தி நலனுதவி திட்டத்திற்கு நிகரான ஒரு நலனுதவித் திட்ட மாகும்.

இதுவரை சமுர்த்தி வங்கிகளினூடாக வழங்கப்பட்டு வந்த சமுர்த்தி நலனுதவி கொடுப்பனவுகள் உட்பட சமூக நலக் கொடுப்பனவுகள் அனைத்தும் அஸ்வசும திட்டத்தின் கீழ் அரச வங்கிகள் மற்றும் அபிவிருத்தி வங்கிகளினூடாக கொடுப் பனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப காலத்தில் சமுர்த்தி நலனுதவிக் கொடுப்பனவுகள் சமுர்த்தி வங்கிகளினூடாக கொடுப்பனவு செய்யப்படவில்லை என்பது உங்களுக்கு நினைவிருக்கும். சமுர்த்தி வங்கியின் பணிகள் நலனுதவி கொடுப்பனவுகள் வழங்குவதல்ல. வங்கி அங்கத்த வர்களின் நிதித் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான கடன் வசதிகளை வழங்குதல், அவர்களின் சேமிப்பு பழக்கத்தை விருத்தி செய்தல் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டல் என்பனவாகும்.

கடந்த 1 1/2 வருட காலப்பகுதியினுள் சமுர்த்தி நலனுதவி உட் பட இதர கொடுப்பனவுகள் அனைத்தும் சமுர்த்தி வங்கி யினால் கொடுப்பனவு செய்யப்பட்டமையினால் வங்கிப்பணிக் குழுவினருக்கும் மற்றும் களப்பணியாளர்களுக்கும் வங்கியின் பல்வேறு கடமைகளை நிறைவேற்ற முடியாத நிலமை காணப்பட்டது. அதனால் வங்கிகளில் கடன் வழங்குதல், கடன் அறவீடுகள், வைப்புகளின் வளர்ச்சி என்பன வீழ்ச்சியடைந் துள்ளன. இது வங்கி வலையமைப்பின் வளர்ச்சிக்கு தடையாக உள்ளது என்பது உங்களுக்கு தெளிவாக விளங்கியிருக்கும். சமுர்த்தி வங்கிகள் நலனுதவிகளை மாத்திரம் வழங்கும் நிலையம் அல்ல என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். அஸ்வசும திட்டமானது சமுர்த்தி நலனுதவித் திட்டம் போன்ற மற்றுமொரு நலனுதவித் திட்டமாகும். இது சமுர்த்தி திட்டத்தில் எந்தவித பாதிப்புக்களையும் ஏற்படுத்தாது என்பதுடன் வங்கிகளுக்கு சொந்தமான நிதியங்களில் எந்த வகை யிலும் பாதிப்புக்களை ஏற்படுத்தாது என்பதை மிகவும் பொறுப்புடன் கூறிக் கொள்கின்றோம். அஸ்வசும திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களில் 12 இலட்சம் குடும்பங்களை பலப்படுத்துவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதுடன் அக் குடும்பங்களை பலப்படுத்துவதற்கான பொறுப்புகளை 2023/04 /12 ஆம் திகதிய அ.ப/23/0730/604/073 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தினூடாக அனுமதி அளித்து உத்தியோகபூர்வமாக சமுர்த்தி திணைக்களத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த 12 இலட்சம் குடும்பங்களுக்கும் நிதி வசதி களை வழங்குவது சமுர்த்தி வங்கிகளின் கடமையாகும். எனவே அஸ்வசும பயனாளிகள் சமுர்த்தி வங்கியின் அங்கத்தவராக இருக்க வேண்டும் என்பதை தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். மேலும் ஏனைய வங்கிகள் நீங்கள் எதிர்பார்கின்ற விதத்தில் உங்களுக்கு கடன்களை வழங்கு வதில்லை. அவர்கள் பல்வேறு நிபந்தனைகளை முன்வைக் கின்றார்கள். பெரும்பாலான வங்கிகள் பெரும் பெரும் தொழில் அதிபர்களுக்கே கடன்கள் வழங்க தயாராக உள்ளனர்.

ஆனால் உங்களுக்கு பிணைகள் எதுவும் இல்லாமல் குழுப் பிணைகளுடன் கடன் வழங்கும் உங்களது கிராமத்தில் உள்ள உங்களுக்கு நம்பகமான ஒரே வங்கி வங்கி சமுர்த்தி வங்கி என்பதை நினைவில் கொள்ளுங்கள். அஸ்வசும திட்டம் ஒரு நலனுதவித் திட்டம் மாத்திரமே ஆகும். இது சமுர்த்தி அபிவிருத்தி திட்டத்திற்கு எந்த விதத்திலும் இடையூறாக அமையவில்லை. அஸ்வசும பயனாளிகளை பலப்படுத்தும் நடவடிக்கைகள் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணியாகும் என அரசாங்கம் அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது.

அதற்கமைய, அஸ்வசும திட்டம் சமுர்த்தி திட்டத்திற்கு சவாலாக அமையாது. இது சமுர்த்தி திட்டத்தின் ஒரு திருப்பு முனையாகும்.

தற்போது சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புகள் மற்றும் சிறு குழுக்களை பலப்படுத்துகின்ற வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இது உத்தியோகத்தர்களினதும் அதேபோல் சமூக தலைவர்களினதும் பொறுப் பாகும்.

பாதுகாப்பற்ற மக்களுக்கு குழு அமைப்பு பெரும் உதவியாக உள்ளது. மேலும் பிணை வழங்கக்கூடியவர்களுக்கும் வங்கிச் சேவைகளை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அஸ்வசும செயற்படுத்தப்படுவதனால் இழக்கப்படுகின்ற சமூகப் பாதுகாப்பு நன்மைகள், வீடற்றவர்களுக்கான வீடமைப்பு உதவிகள் உள்ளிட்ட பல நன்மைகள் சமுர்த்தி வங்கிகளினூடாக பெற்றுக் கொள்வதற்கான விசேட வேலைத் திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் புதிய பிரவேசம்

- கடன் பெற்றுக் கொள்வதற்கான நிபந்தனைகள் மேலும் இலகுவாக்கப்படல்.
- அனைத்து வங்கிகளுக்கும் ரண்சுரக்கும் அடகுக்கடன் சேவையினை அறிமுகம் செய்தல்.
- எதிர்காலத்தில் கடனுக்கான வட்டி வீதத்தை மேலும் குறைத்தல்.
- புதிய சேமிப்பு வகைகளை அறிமுகம் செய்தல்.
- பிணைப் பாதுகாப்புடன் தனி நபர் கடன் திட்டங்களை அறிமுகம் செய்தல். இதனை 2023 ஒக்டோபர் 01 ஆம் திகதியில் இருந்து செயற்படுத்தல்.
- இளைஞர் சமூகத்திற்கு தேவையான கடன் திட்டங்களை அறிமுகம் செய்து செயற்படுத்தல்.
- தனிநபர் கடனாளிகளுக்கு அவர்களின் கடன் பிணை மற்றும் தொழில் பாதுகாப்பின் பொருட்டு 'சமுர்த்தி தனசக்தி' எனும் பெயரில் விசேட கணக்கொன்றை அறிமுகம் செய்தல்.
- கடன்களின் பொருட்டு முறையான காப்புறுதித் திட்டம் ஒன்றை அறிமுகம் செய்தல். இதனை தேசிய சமாசத்தின் மூலம் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதனூடாக கடனாளிகளுக்கு பாதுகாப்பினை ஏற்படுத்தல்.
- சமுர்த்தி வங்கிகளில் கடனைப் பெற்று வெற்றிகரமாக தொழிலை மேற்கொள்ளும் தொழில் முயற்சியாளர்களின் பொருட்டு விசேட ஓய்வூதிய திட்டத்தை அறிமுகம் செய்தல்.
- எதிர்காலத்தில் அரச மற்றும் தனியார் துறைகளில் சேவையாற்றுபவர்களுக்கும் வங்கிச் சேவையினை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனூடாக வங்கிகளின் நிதி ஸ்திரத் தன்மையினை அதிகரிப்பதற்கான சேவைகளை பரவலாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.
- வெளிநாட்டு வேலை வாய்ப்பில் ஈடுபட்டுள்ள இலங்கையர்கள் அனுப்பும் பணத்தினை சமுர்த்தி வங்கிக் கணக்கினூடாக அனுப்புவதற்குரிய வசதிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. சமுர்த்தி வங்கி அங்கத்தவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சமுர்த்தி வங்கியில் கடன் பெற்று வெளிநாடு சென்றுள்ளவர்களுக்கு முதலில் இச்சேவை வழங்கப்படும்.
- உங்கள் இன்பத்திலும் துன்பத்திலும் உங்களுடன் இருக்கும் ஒரே வங்கி சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.
- 2030இல் வறுமையற்ற இலங்கையை உருவாக்கி ஆசியாவின் சிறந்த நுண்நிதி வழங்குநராக சமுர்த்தி வங்கியையும் உருவாக்குவோம்.

நுண்நிதிப் பிரிவு ஃ சமுர்த்தி சமாசம்,
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்,
4வது மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல,
தொ. இலக்கம் 0112 887 469,
0112 887 489, 0112 889 003

நுண் நிதியின் சிறந்த நண்பன்!

உங்கள் ஊருக்கு
சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி

நாடு முழுவதும்
25 மாவட்டங்களில் 1089 வங்கிக் கிளைகள் மற்றும் 335 சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்கள் உங்களுக்காக தற்போது திறக்கப்பட்டுள்ளன.

- உங்களது பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு
- உங்களது பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு
- நீங்கள் வசிக்கும் பகுதியில் இருந்தே
- குறைந்த வட்டிக்கு, குறுகிய காலத்தில்
- குறைந்தபட்ச பிணையுடன்

நுண் நிதி கடன் வசதி சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியில் இருந்து
நீங்களும் இன்றே எங்களுடன் இணையுங்கள்

உங்களின் எதிர்கால பயணத்திற்காக சமுர்த்தி வங்கியுடன் இணையுங்கள்.

சமுர்த்தி வங்கி
2023 இன் 01 ஆம் இலக்கம் கொண்ட சமுர்த்தி சட்டத்திற்கு அமைய சமுர்த்தி வங்கி நிறுவப்பட்டுள்ளது

சமுர்த்தி நிதிப் பிரிவு/ பொதுச் சபை
சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்
மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு

4ஆவது மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை.
தொ. இலக்கம்: 0112 887 469, 0112 887 489, 0112 88 9003

நுண் நிதியின் முன்னோடி
சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி

உங்களது வைப்புக்கு
அதிக வட்டி
சமுர்த்தி வங்கியிடம் இருந்து

நாடு முழுவதும் 1089 சமுர்த்தி வங்கிகள் மற்றும் 335 சமுர்த்தி வங்கிச் சங்கங்கள்

குறைந்த வட்டிக்கு குறுகிய காலத்தில்
குறைந்தபட்ச பிணையுடன் பல கடன் வகைகள்

தற்போது உங்களது ஊரில் உள்ள சமுர்த்தி வங்கியில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

வங்கியின் அதிகார எல்லைக்குள் வசிக்கும் எந்த ஒருவருக்கும் சமுர்த்தி வங்கியுடன் இணைந்து கடன் வசதி உட்பட அனைத்து நன்மைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

2023 ஒக்டோபர் 01 திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரையான காலத்தில் சமுர்த்தி வங்கி திட்டத்தில் சேமிப்பு மாதமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலத்தில் உங்களது பிள்ளைகளுக்கு சிறுவர் சேமிப்புக் கணக்கு ஒன்றை ஆரம்பித்து பல நன்மைகளையும் பெறுங்கள்.

உங்கள் எதிர்காலத்திற்காக "சமுர்த்தி தன சக்தி" என்ற பெயரில் தற்போது விசேட கணக்கு ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அருகில் இருக்கும் சமுர்த்தி வங்கிக்கு நீங்கள் இன்றே செல்லுங்கள்

சமுர்த்தி வங்கி
2023 இன் 01 ஆம் இலக்கம் கொண்ட சமுர்த்தி சட்டத்திற்கு அமைய சமுர்த்தி வங்கி நிறுவப்பட்டுள்ளது

சமுர்த்தி நிதிப் பிரிவு/ பொதுச் சபை
சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்
மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு

4ஆவது மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை.
தொ. இலக்கம்: 0112 887 469, 0112 887 489, 0112 88 9003

அறிவித்தல்

மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
கிழக்கு மாகாணம்

கிழக்கு மாகாண, மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவை 3-I(அ) தரத்துக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை – 2023

கிழக்கு மாகாண, மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவை 3-I(அ) தரத்துக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சைக்காக தகைமைகளை பூர்த்தி செய்துள்ள கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாக கொண்ட பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 06.11.2023 ஆகும்.

அனைத்து விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு முன்னர் கீழ் குறிப்பிட்டுள்ள கிழக்கு மாகாண சபையின் இணையத் தளத்தில் மேலதிக தகவல்கள் மற்றும் தகைமைகளை பரீட்சீலித்து, அதில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய விண்ணப்பப் படிவங்களை தயாரித்து அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். முறையாக சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

www.ep.gov.lk → Exams & Results → Recruitment Exams

ஆ. மன்சூர்,
செயலாளர் (பதில்),
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்,

17.10.2023

கமத்தொழில் வியாபார விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK

கமத்தொழில் அமைச்சு
கமத்தொழில் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம்
பணியாட் தொகுதியினரை ஆட்சேர்த்தல்
(வட மாகாணம்)

உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி முகவரகத்தின் (IDA) கடன் உதவியின் மூலம் கமத்தொழில் அமைச்சினால் சிறிய அளவிலான கமத்தொழிலாளர்களுக்கு போட்டி ரீதியிலான மற்றும் விற்பனை செய்யக்கூடிய விற்பனைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக, சந்தைத் தேவைப்பாடுகள், வழங்குவதற்கு மற்றும் மேம்படுத்துவதற்கான வர்த்தகத்தை நோக்கிச் செல்வதற்கு அவர்களின் முயற்சிகளுக்கு உதவி செய்வதற்காக தேசிய பங்குபற்றுதலுடன் மூலோபாயத்திற்குச் சமமாக கமத்தொழில் துறையை நவீனமயப்படுத்தும் செயற்றிட்டம் (ASMP) செயற்படுத்தப்படுகின்றது. செயற்றிட்டத்தைச் செயற்படுத்துவதற்காக எஞ்சிய காலம் சுமார் 15 மாதங்களாகும் என்பதுடன், செயற்றிட்டத்தின் மதிப்பீட்டுக் கிரயம் 90.23 அமெரிக்க டொலர்களாகும். (உலக வங்கியின் கடனுதவித் தொகை 64.23 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் மானியம் 26.0 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.)

வட மாகாணத்திலுள்ள (NP) மாகாண செயற்றிட்ட முகாமைத்துவ அலகிற்கான (PPMU) பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக, பின்வரும் தகைமைகள் மற்றும் அனுபவத்தைக் கொண்ட இலங்கைப் பிரஜைகளிடமிருந்து 2019-03-05ஆம் திகதிய 01/2019ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. மாகாண கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நிபுணர் **(PS-3)** 01 பதவி
    01. மாகாண கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நிபுணர்
    - **தேவையான தகைமைகள்:**

i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் இயைபுடைய துறையில் இளமாணிப் பட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் இயைபுடைய துறையில் பட்டத்திற்குச் சமனானதாக ஏற்றுக்கொள்ளப்படும் தகைமை

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட இயைபுடைய துறை சார்ந்த அங்கத்துவம் / சமமான தொழில்சார் தகைமை

அத்துடன்

குறைந்தபட்சம் 10 வருட காலம் முகாமைத்துவ மட்டத்தில் தகைமைக்குப் பின்னரான அனுபவம்.

ii. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் இயைபுடைய துறையில் இளமாணிப் பட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் இயைபுடைய துறையில் பட்டத்திற்குச் சமனானதாக ஏற்றுக்கொள்ளப்படும் தகைமை

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட இயைபுடைய துறை சார்ந்த அங்கத்துவம் / சமமான தொழில்சார் தகைமை

அத்துடன்

இயைபுடைய துறையில் பட்டப் பின்படிப்பு அல்லது நிறுவன / பட்டய அங்கத்துவம் அல்லது இயைபுடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட சமமான தொழில்சார் தகைமை

அத்துடன்

குறைந்தபட்சம் 08 வருட காலம் முகாமைத்துவ மட்டத்தில் தகைமைக்குப் பின்னரான அனுபவம்

iii. நாடு முழுவதற்குமான அரசாங்க சேவையில் 1ஆம் வகுப்பு அதிகாரியாகவிருத்தல் அல்லது இயைபுடைய துறையில் சமமான நிலையை வகித்தல்.

அத்துடன்

1ஆம் வகுப்புப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 03 வருடகால தகைமைக்குப் பின்னரான அனுபவம்.

- விண்ணப்பதாரருக்கு விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் நாளில் 64 வயதிற்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யும் முறை:

தகைமை மற்றும் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு குறும்பட்டியல்படுத்தப்படும் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

சம்பளம்: 2019-03-05ஆம் திகதிய 01/2019ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் அடிப்படையிலாகும்.

பணிக்கமர்த்தும் நிபந்தனை: சகல நியமனங்களும் 2019-03-05ஆம் திகதிய 01/2019ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

விண்ணப்பப்படிவங்கள்:

தமது சுயதரவுகளை உள்ளடக்கிய விண்ணப்பப் படிவங்கள், சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் உறவினரல்லாத சிபாரிசு செய்யக்கூடிய இருவரின் பெயர் மற்றும் முகவரிகள் சகிதம் 2023 ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அரச / அரை அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது அமைச்சு அல்லது திணைக்களத்தின் தலைமையின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

- விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

செயலாளர்,
கமத்தொழில் அமைச்சு,
கமத்தொழில் துறையை நவீனமயப்படுத்தும் செயற்றிட்டம்,
இல. 123/2, பன்னிபிட்டிய வீதி,
பத்தரமுல்ல.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்

லிபர்ட்டி பிளாஸாவில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு இல்லத்தை குத்தகைக்கு வழங்குதல்
பெறுகை இலக்கம்: S/654/23

லிபர்ட்டி பிளாஸாவிலுள்ள கூட்டாதன அடுக்குமாடி இல்லத்தை குத்தகைக்கு வழங்குவதற்காக இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழுத் தலைவர் விலைக்கோரல்களை அழைக்கின்றார்.

கடல் காட்சியுடன் அடுக்குமாடியின் 5ஆம் தளத்தில் வளிச் சீராக்கம் செய்யப்பட்ட 3 படுக்கை அறைகளைக் கொண்ட இல்லம் உள்ளது.

தரைப் பரப்பு - 1.410 சதுர அடி

குளியலறைகள் - 02

வேலையாள் மலசலகூடம்/குளியலறை - 01

கடல் காட்சியுடனான பெல்கனி

வசிக்கும் பிரதேசம், பென்ட்ரி கப்போர்டுகளுடனான சமையலறை

தளபாடங்கள், குளிர்சாதனப்பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் ஏனைய வசதிகள்

தரைத் தளம் மற்றும் மேல் தளங்களில் பொருட்கள் வாங்கும் வசதி

மீளளிக்கப்படாத 6,000.00 ரூபாவை (SSCL + VAT உட்பட) ரொக்கப் பணமாக செலுத்தியதன் பின் 2023-10-17ஆம் திகதி முதல் 2023-11-06ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் வழங்கல் பிரிவிலிருந்து முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட முத்திரைக் குறி பொறித்த நகல் பிரதிகளுடனான விலைமனுக்களுடன் விலைக் கோரல் பிணை முறையை இணைத்து 2023-11-07ஆம் திகதி பி.ப. 1.30 மணி அல்லது அதற்கு முன் கீழ்க் குறிப்பிடப்பட்டவருக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும் அல்லது இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தயவு செய்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பெறுகை இலக்கம்: S/654/23 - லிபர்ட்டி பிளாஸாவில் உள்ள தொடர்மாடி கூட்டாதன இல்லத்தின் குத்தகைக்கான கேள்வி'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து பிரதிப் பொது முகாமையாளர் (காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல்) அவர்களைத் தொடர்புகொள்ளவும்.

தொலைபேசி: +94 11 2862152

தலைவர்,
பெறுகைக் குழு,
இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்,
இல. 03, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, வெலிக்கட, ராஜகிரிய.
தொலைபேசி: 011 2867369, 011 2889485
தொலைநகல்: 011 2862457

பெறுகை அறிவித்தல்

டவர் மண்டப அரங்க மன்றத்தினால் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வாகனத்தை விற்பனை செய்தல்

டவர் மண்டப அரங்க மன்றத்திற்குச் சொந்தமான பின்வருமாறு விபரிக்கப்பட்ட வாகனத்தை விற்பனை செய்வதற்காக 2023-10-18ஆம் திகதி முதல் 2023-11-07ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

வாகன இலக்கம்	வகை	உற்பத்தி வருடம்
WPKI-2359	கார் (MICRO - TREND)	2009

வாகனத்திற்காக விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு இயைபான விலைக்கோரல் ஆவணங்களை 2023-10-18ஆம் திகதி முதல் 2023-11-08ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரையான வாரத்தின் வேலை நாட்களில் இல. 123, விஜேராம மாவத்தை, சவ்சிறிபாய, டவர் மண்டப அரங்க மன்றத்தின் பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்களுக்காக 1000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்ததன் பின் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது 20,000.00 ரூபா மீளளிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறியொன்றை செலுத்தும் கிளைக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விலைக்கோரல் ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

குறித்த விலைமனுக்களை 2023-11-08ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு மேற்கூறிய டவர் மண்டப அரங்க மன்றத்தின் பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது நிறைவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களினால் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

வாகனத்தை விற்பனை செய்தல் தொடர்பான இறுதித் தீர்மானத்தை கேள்விக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் மோட்டார் வாகனத்தை மேற்கூறிய முகவரியில் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.00 மணிமுதல் பி.ப.3.00 மணிவரையில் பரீட்சித:துப் பார்க்கலாம்.

(விசாரணை: 0112-682324)

பணிப்பாளர் நாயகம்,
டவர் மண்டப அரங்க மன்றம்,
123, சவ்சிறிபாய,
விஜேராம மாவத்தை,
கொழும்பு 07.

கேள்வி அறிவித்தல்

சுகாதார சேவை திணைக்களம் – கொழும்பு மாவட்டம்

அழுக்குத் துணிகளைச் சலவை செய்தல் – 2024

எமது கொழும்பு பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகப் பிரிவிற்குரித்தான ஹோமாகம வைத்தியசாலையின் அழுக்குத் துணிகளைச் சலவை செய்வதற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

லொட் இல.	நிறுவனத்தின் பெயர்	கேள்விப் படிவக் கட்டணம்
1	ஹோமாகம ஆதார வைத்தியசாலை	1,500.00

கேள்வி ஆவணங்களை 2023-10-17ஆம் திகதி முதல் 2023-11-07ஆம் திகதி வரை வாரத்தின் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணத்தை மேற்குறிப்பிடப்பட்ட வகையில் இயைபுடைய லொட் இலக்கத்திற்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தை கொழும்புப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

தேவையாயின் கேள்வி ஆவணங்களை இந்த அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். மேலதிக விபரங்களை 0112326248 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்திய இரு நகல்களிலான கேள்வி ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியாக) வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரைக்குறி பொறித்து இந்த அலுவலகத்தின் கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது பதிவுத் தபாலில் தவிசாளர், பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், த.பெ. 1287, புதிய செயலகக் கட்டிடம், மாளிகாவத்தை, கொழும்பு-10 எனும் முகவரிக்கு கிடைக்கச் செய்யலாம்.

கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''அழுக்குத் துணிகளை சலவை செய்தல் - லொட் இல. (.....) வழங்கலுக்கான விலைகள் - 2024'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

2023-11-08ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவுறும் என்பதுடன் அவைகள் 2023-11-08ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இவ்வலுவலகத்தில் திறக்கப்படும் என்பதுடன் இந்நேரத்திற்குப் பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நேரத்தில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

தலைவர்,
பெறுகைக் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,
த.பெ. இல. 1287, புதிய செயலகக் கட்டிடம்,
மாளிகாவத்தை, கொழும்பு-10

அறிவித்தல்

பண்டாரவளை பிரதேச சபை

2023 செப்டெம்பர் மாதம் 18ஆம் திகதிய தினகரன், தினமின மற்றும் டெய்லி நியூஸ் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் அந்த விலைக்கோரல் அறிவித்தல் பின்வரும் திருத்தங்களுடன் மீண்டும் கோரப்படுகின்றன.

1. கடை அறைகள் 10 வருடங்களுக்காக குத்தகைக்கு வழங்கப்படும்.
2. மீளளிக்கப்படாத ஒரே தடவையில் செலுத்த வேண்டிய தொகை (ஆகக்குறைந்த விலைக்கோரல் பெறுமதி) 500,000.00 ரூபாவாகும்.
3. மீளளிக்கப்படும் பிணை வைப்புத் தொகை 20,000.00 ரூபாவாகும்.
4. விலைமனுக்கள் 2023-10-17ஆம் திகதி முதல் 2023-11-06ஆம் திகதி வரை வழங்கப்படும்.
5. விலைமனுக்கள் 2023-11-07ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு இந்த விபரமான விளம்பரத்தை உள்ளூராட்சித் திணைக்களத்தின் (ஊவா) https://mail.lgd.up.gov.lk/mis/web/newsevents.php எனும் இணையதளத்தின் நீட்சிப்பு மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
பெறுகைக் குழு,
பண்டாரவளை பிரதேச சபை,
ஹெலமுதுன, பண்டாரவளை.

Marriage Proposals in the Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

122
மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு
QG-3897 BAJAJ 2006, THREEWHEEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே 0714542 958 . 066171

Repeat Your Ad For Better Offers

அறிவித்தல்

தெஹிவளை, முஹந்திரம் லேன், இல. 12 ஐச் சேர்ந்த "டிரான்ஸ் ஏசியா செக்யூரிட்டி சிஸ்டம்ஸ்" 2022 பெப்ரவரி 28ம் திகதி முதல் அமுலுக்கு வருமாறு மூடப்படுவதாக சகலருக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது. இதன் பிறகு வர்த்தக நடவடிக்கைகள் அல்லது வர்த்தக செயற்பாடுகளில் இந்த கம்பனி ஈடுபடமாட்டாது என இலங்கை மக்களுக்கு மேலும் தெரிவித்துக் கொள்கிறது. அத்துடன் இந்த கம்பனியுடன் மேற்கொள்ளப்படும் எந்த வர்த்தக நடவடிக்கைகளுக்கும் நாம் பொறுப்பாகமாட்டோம்.

A.L.S. தஸாநாயக்க

பிழைதிருத்தம்

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

பெறுகை அறிவித்தல்

விவசாய விஞ்ஞானங்கள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் கணனியாக்கம் பீடம் ஆகியவற்றிற்கு கேட்போர்கூட கதிரைகள் மற்றும் அலுவலக தளபாடம் ஆகியவற்றை வழங்கல், ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதல்
(SUSL/SU/NCB/2023/002)

மேற்படி தலைப்பில் கடந்த 2023.09.27ம் திகதி தினகரன் நாளிதழில் பிரசுரமான விளம்பரத்தில் 3 ஆம் பந்தி பின்வருமாறு திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக வழங்கலுக்கான சிரேஷ்ட உதவி நிதியாளரிடமிருந்து பெற்று (தொடர்பிலக்கம் 045-2280311) பல்கலைக்கழக வழங்கல் கிளையில் 2023.10.02 மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பரீட்சிக்கலாம்.

அத்துடன் 4ம் பந்தியில் மின்னஞ்சல் முகவரி suslsupplies@gmail.com எனத் திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

ஏனைய விடயங்களில் மாற்றங்கள் இல்லை
தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு
இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

அக்கரைப்பற்று பிரதேசத்தில் காட்டு யானைகளால் பொதுமக்கள் அசௌகரியம்

(அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட மக்கள் குடியிருப்பு பிரதேசங்களில் காட்டுயானைகள் புகுந்து பெரும் அட்டகாசம் புரிவதாக தெரிவிக்கின்றனர். நேற்றுமுன்தினம் அதிகாலை 4.30 மணியளவில் அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரியை அண்டிய மக்கள் குடியிருப்புக்குள் உட்புகுந்த காட்டு யானைகள் வீடுகள் மற்றும் அக்கரைப்பற்று தேசிய பாடசாலை என்பவற்றின் சுற்று மதிற்சுவர்களை உடைத்து சேதப்படுத்தியுள்ளதுடன் பயன்தரும் பல மரங்களையும் நாசம் செய்துள்ளதாக பிரதேசமக்கள் தெரிவிக்கின்றனர்.

அதுமட்டுமின்றி, இரவு வேளைகளில் காட்டுயானைகள் இப்பிரதேசத்தில் நடமாடுவதால் பல்வேறு இன்னல்களுக்கு தாம் தினமும் முகம் கொடுத்து வருவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதுதொடர்பில் பல்வேறு தரப்பினருக்கு அறிவித்தும் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர்.

கால்நடைகளுக்காக களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பெறுமதிமிக்க உணவுப் பைகளை காட்டு யானைகள் கட்டடங்களின் சுவர்களை உடைத்து நாசப்படுத்தியுள்ளதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அக்கரைப்பற்று பட்டியடிப்பிட்டி மற்றும் அட்டாளைச்சேனை சம்புக்களப்பு போன்ற மக்கள் குடியிருப்புப் பகுதிகளை அண்டிய பகுதி நீரேந்து பிரதேசமாகவும் நீர்த்தாவரங்கள் மற்றும் சிறிய பற்றைக்காடுகள் நிறைந்ததாகவும் காணப்படுகின்றன. இப்பகுதியில் பகல் வேளைகளில் நிற்கும் காட்டு யானைகள் இரவு வேளைகளில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்குள் உட்புகுந்து சேதங்களை எற்படுத்திவருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு காட்டு யானைகளின் வருகையை தடுப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வே ண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

எதிர்காலத்தில் அரசியலில் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்

தேசிய ஒற்றுமைக்கான அபிவிருத்தி மன்றம் கோரிக்கை

(ரொட்டவெவ குறூப் நிருபர்)

அரசியலில் பாலியல் இலஞ்சம் கோருபவர்களே அதிகம் காணப்படுவதாக கணபதி பிள்ளையை சூரியகுமாரி தெரிவித்தார்.

பெண்களின் அரசியலுக்கான தடைகளை கலைத்தெறிவோம் என்ற தொனிப்பொருளில் தேசிய ஒற்றுமைக்கான அபிவிருத்தி மன்றத்தினால் வெகுஜன ஊடக ஒத்துழைப்பு செயற்றிட்டம் மற்றும் ஊடக கலந்துரையாடல் திருகோணமலை மல்லிகா ஹோட்டலில் நடைபெற்றது. இதன்போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

அரசியலுக்கு கிராமப்புறங்களிலிருந்து வரும் பெண்கள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். பெண்களை வித்தியாசமான கண்ணோட்டத்தில் பார்ப்பதாகவும், பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்குள்ளாகின்றனர். வேறு நாடுகளில் பெண்களின் விகிதாசாரம் அதிகளவில் இருப்பதாகவும் இலங்கையில் 40ற்கும் மேற்பட்ட விகிதாசாரத்தில் பெண்கள் இருக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்காலத்தில் தேர்தலின் போது பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். எப்போதும் பெண்கள் சமையலறையில் இருப்பதை மட்டும் விரும்பவில்லை. அவர்கள் அரசியலிலும் பங்கேற்ற வேண்டும்.

அட்டாளைச்சேனை வழலவாய் நீர் பாய்ச்சல் வடிச்சலை சீர்செய்யுமாறு கோரி மகஜர் கையளிப்பு

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அட்டாளைச்சேனை வழலவாய் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுத்தருமாறு கோரி பிரதேச விவசாயிகள் அக்கரைப்பற்று பிராந்திய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்கு மகஜரொன்றை அனுப்பிவைத்துள்ளனர். 40 பிரதேச விவசாயிகள் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரில் கையெழுத்திட்டுள்ளனர். இதில் பிரதானமாக நெற்காணிகளுக்கான நீர் பாய்ச்சல் வடிச்சலை சீர் செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. வழலவாய் விவசாய அமைப்பின் வருடாந்த பொதுக் கூட்டமும் கடந்த மூன்று வருடங்களாக நடைபெறவில்லையென பிரதேச விவசாயிகள் இதில் குற்றம் சாட்டியுள்ளனர். ஆகையால், இப்பிரச்சினைகளை நிவர்த்திசெய்து தருமாறு விவசாயிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

ரம்புக்கனை பிரதேச சபை

2024ஆம் வருடத்திற்காக வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்

2024ஆம் வருடத்திற்கு ரம்புக்கனைப் பிரதேச சபைக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக பதிவு செய்து கொள்ள விரும்பம் உள்ள அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2023.11.30ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன் 'தவைர், ரம்புக்கனை பிரதேச சபை, ரம்புக்கனை' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக ஒப்படைக்கலாம்.

விண்ணப்பப் படிவத்தை இடுகின்ற காகித உறையின் இடப்பக்க மேல் மூலையில் '2024ஆம் வருடத்திற்கு வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

பொருட்கள் மற்றும் சரக்குகள்

வகை இலக்கம்	வழங்க வேண்டிய பொருட்கள்/ சரக்குகள்
01	அனைத்து காகிதாதிகள் (CR புத்தகம், பேனைகள், பென்சில், காகித வகைகள், கோவைகள், கணனி (Calculator) ஆகியன உள்ளடங்கலாக)
02	அலுவலகத் தளபாடங்கள் (மரம்/பிலாஸ்டிக்/உருக்கு)
03	வீதி வெளிச்சமூட்டும் நடவடிக்கைகளுக்குத் தேவையான வீதி விளக்குகள் உட்பட அனைத்து மின் துணைப் பொருட்கள்
04	மின் உபகரணங்கள் (மின்விசிறிகள், மின் கேத்தல், குளிர்சாதனப் பெட்டி)
05	அச்சு இயந்திரங்கள் (நிழற் பிரதி இயந்திரம், தொலைநகல் இயந்திரம், பிரதி எடுத்தல் இயந்திரம், தட்டச்சு இயந்திரம், டுப்ளோ இயந்திரம் என்பனவை உள்ளடங்கலாக)
06	அனைத்து வகையான அச்சு இயந்திரங்களுக்குமான டோனர், உதிரிப்பாகங்கள் மற்றும் காட்ரிஜ்
07	கணனி இயந்திரங்கள் மற்றும் அதற்கான துணைப் பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் (கணனி வன்பொருள், கணனி மென்பொருள் உள்ளடங்கலாக)
08	அனைத்து கட்டட நிர்மாணப் பொருட்கள் மற்றும் நிர்மாணங்களுக்குத் தேவையான பொருட்கள் (செங்கல், சீமெந்து, ஆற்று மணல், மெட்டல், கருங்கல், எஸ்பெஸ்டஸ் தகடுகள், ஓடு, சீமெந்துக் கற்கள், சரளைக்கல் என்பன உள்ளடங்கலாக)
09	வீதிப் பராமரிப்பிற்குத் தேவையான பொருட்கள் (தார் மற்றும் பிறீ மிக்ஸ்)
10	மரங்கள் (பலகை, சட்டரின் பலகை, தளக் குறுக்குக் கட்டை (பரால) அடங்கலாக)
11	பாதணிகள், சப்பாத்துக்கள் தோற் பொருட்கள் மற்றும் அலுவலக தோற் பைகள்
12	மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்து வகைகள் (தடுப்பூசிகள், சிறிஞ்சர், அளவைச் சாடி, ஆயுர்வேத மருந்துகள் என்பன உள்ளடங்கலாக)
13	இரும்புக் கடைப் பொருட்கள் மற்றும் வர்ணப் பொருட்கள்
14	இலக்கத் தகடுகள் மற்றும் பட்டி வகைகள் (ஆதனவரி, மிதி வண்டி, மிருகங்கள்)
15	வீதிப் பராமரிப்பிற்குத் தேவையான உபகரணங்கள் (நீளமாக கத்திகள், கத்தி, மண்வெட்டி, முள் கரண்டி, வாரிகள், அறிவாள் என்பன உள்ளடங்கலாக)
16	வீதிச் சுகாதார தொழிலாளர்களுக்குத் தேவையான உபகரணங்கள் (மழைக் கவசம், கையுறைகள், முகக் கவசங்கள், தலைக் கவசம், பிளாஸ்டிக் கண்ணாடி என்பன உள்ளடங்கலாக)
17	சுகாதார மற்றும் துப்புரவாக்கல் பொருட்கள் மற்றும் உபகரணங்கள், (தும்புத்தடி, கூட்டுமாறு, சவர்க்காரம், மலசலகூடத் தூரிகைகள், துடைப்பான், தொற்று நீக்கிகள், தூய்மைப்படுத்தும் மருந்துகள், நறுமணத் திரவியங்கள் என்பன உள்ளடங்கலாக)
18	PVC பொருத்துக் கலங்கள், DI குழாய் பொருத்துக் கலங்கள், GI குழாய் பொருத்துக்கலங்கள், பிலாஸ்டிக் நீர்த்தாங்கி, குப்பைத் தொட்டிகள், கொம்போஸ்ட் தொட்டிகள்
19	தரை ஓட்டு வகைகள், மலசலகூட சிறுநீர் கழிக்குமிட கொமட் ஆகியன உட்பட அனைத்து பீங்கான்/மட்பாண்ட/மட்பாண்ட உற்பத்திகள்
20	விழாக்களிற்காக உணவு வகைகள் (பகல் உணவு/சிறு உணவுகள்)
21	சங்கீத உபகரணங்கள், முன் பள்ளி உபகரணங்கள், முன் பள்ளி விளையாட்டு உபகரணங்கள் மற்றும் சிறுவர் விளையாட்டு மைதான உபகரணங்கள்
22	குளிரூட்டல் இயந்திரம் மற்றும் மின்பிறப்பாக்கி
23	அனைத்து வழுப்படுத்தப்பட்ட குழாய்கள் உட்பட கொங்கிரீட் உட்பத்திகள்
24	பூச்சிக் கொல்லிகள், கிருமி நாசினிகள் உட்பட அனைத்து இரசாயன உற்பத்திகள்
25	சீருடைகளுக்கான பிடவை, சாரிகள் மற்றும் திரைச் சேலை வகைகள்
26	தகன அறைக்கு எரிவாயு வழங்கல்
27	உரப் பைகள் மற்றும் பொலிதின் பைகள்
28	வாசிகசாலை புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் செய்தித் தாள்கள்
29	ஹட் வகைகள் (கெனப்பி, தகர ஹட்)
30	கற் பெயர்ப் பலகைகள் மற்றும் ஞாபகார்த்த பெயர்ப் பலகைகள்
31	கண்ணாடி உற்பத்திகள் மற்றும் கண்ணாடி தகடுகள்
32	தொலைபேசி முறைமை இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ஒலி, ஒளிப் பதிவு உபகரணங்கள் மற்றும் பாதுகாப்புப் புகைப்படக் கருவி முறைமைகள், விரல் அடையாள இயந்திரங்கள்
33	தீயணைப்பு உபகரணத் தொகுதிகள் மற்றும் பாதுகாப்பு அங்கிகள்
34	அலுவலக உள்ளக தொலைபேசி முறைமைகள்
35	(கெப் வண்டி, உழவு இயந்திரம், கை உழவு இயந்திரம், முச்சக்கர வண்டி, குரு கெப் வண்டி, பெகோ இயந்திரம், டிப்பர் இயந்திரம்) உட்பட அனைத்து வகையான வாகனங்களுக்கான டயர், டியுப், பட்டரி உட்பட அனைத்து உதிரிப் பாகங்களும்)
சேவைகள்	
வகை இலக்கம்	**வழங்கக் கூடிய சேவைகள்**
36	ஆவணங்கள், பத்திரங்களின் அச்சு நடவடிக்கைகள்
37	பொலித்தின் பைகள், உரப் பைகள் அச்சு நடவடிக்கைகள்
38	டிஜிட்டல் பதாகைகள், அறிவித்தல் பலகைகள், பெயர்ப் பலகைகள், கட்அவுட் பதாகைகள், ஸ்டிகர் போன்றவை உள்ளடங்கலான அச்சு நடவடிக்கைகள்
39	நில அளவை சேவைகள்
40	வழக்கறிஞர் சேவைகள்
41	திறமை பெற்ற திறமை பெறாத தொழிலாளர்களை வழங்குதல்
42	அலுவலகத் தளபாடங்களை திருத்தம் செய்தல் மற்றும் பிரம்பினால் கதிரைகளை முடைதல்
43	அனைத்து வகையான குஷன் வேலைகள் மற்றும் அலுவலகத்திற்கு திரைச் சேலை வழங்குதல்
44	திரைச் சேலைகள் கழுவும் நடவடிக்கைகள் மற்றும் சலவைச் சேவைகள்
45	கட்டடத் திருத்தம் மற்றும் வண்ணம் பூசுதல்
46	மொழி பெயர்ப்பு நடவடிக்கைகள்
47	கணனி, நிலற் பிரதி இயந்திரம், அச்சு இயந்திரம் உட்பட அலுவலக இயந்திரங்கள், உபகரணங்களை திருத்தம் செய்தல் மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள்
48	வாகனங்கள் மற்றும் இயந்திராதிகளை வாடகைக்கு வழங்குதல் (பெகோ இயந்திரம், சாலை உருளை, மளத்தாங்கி, அறவை இயந்திரம், கொம்பெக்டர் உள்ளடங்கலாக)
49	உள்ளக தொலைபேசி மற்றும் தொலைபேசி பிணைப்புத் திருத்தம் மற்றும் உள்ளக உரையாடல் முறைமை, ஒலிபெருக்கி முறைமைகளின் பராமரிப்பு
50	ஒட்டு வேலைகள், கட்டுமான வேலைகள், மர வேலை, குழாய்ப் பணியாளர் தொழில் நுட்ப சேவைகள்
51	வாகனங்கள் மற்றும் இயந்திராதிகளின் திருத்தம்
52	அனைத்து வாகனங்களையும் பழுதுபார்த்தல்
53	உத்தியோகபூர்வ அடையாள அட்டைகளைத் தயாரித்தல்
54	புகைப்படம் எடுத்தல்
55	குப்பைகளை கொட்டுவதற்காக காணிகளை குத்தகைக்கு வழங்குதல்
56	பதாகைகள் மற்றும் பெயர்ப் பலகைகள் வரைதல்
57	அபாயகரமான மரங்களை வெட்டி அகற்றுதல்
58	டயர்களை மீள நிரப்புதல், கல்வனைஸ் வேலை, டியுப்களை ஒட்டுதல்
59	வெற்றுப் போத்தல்கள், பழைய இரும்பு, உற்றுப்போகாத குப்பைகள், பழைய செய்தித் தாள்கள் உட்பட பழுதடைந்த பொருட்களின் கொள்வனவு
60	தகனசாலையின் திருத்தம் மற்றும் பராமரிப்பு
61	ஒலி பெருக்கி இயந்திரங்கள் மற்றும் விழாக்களிற்காக மேடைக்குத் தேவையான பொருட்களை வழங்குதல்
62	அலுமினியம் பொருத்துக் கலங்களின் உபயோகத்தோடு ஜன்னல் கதவுகளை தயாரித்தல் நிர்மாணம் மற்றும் தடுப்புச் சுவர் வேலைகள் செய்தல்
ஒப்பந்தங்கள்	
வகை இலக்கம்	**ஒப்பந்த வகை**
63	கட்டட நிர்மாண மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தக்காரர்கள்
64	வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தக்காரர்கள்

ரம்புக்கனை பிரதேச சபை

2024ஆம் வருடத்திற்காக வழங்குநர் ஒருவராக பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பதாரியின் பெயர் :
2. விண்ணப்பதாரியின் முகவரி :
3. வியாபரத்தின் பெயர் :
4. வியாபாரத்தின் முகவரி :
5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :
   (தேசிய அடையாள அட்டையின் பிரதி ஒன்றையும் இதனுடன் இணைக்கவும்)
6. வியாபாரப் பெயர் பதிவுச் சான்றிதழ் இலக்கம் :
   (பிரதியை கட்டாயம் இணைக்கவும்)
7. வியாபாரத்தின் தன்மை :
8. பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கின்ற வகை இலக்கம் :
9. செலுத்திய தொகை :
10. காசோலை இலக்கம் :
11. சொத்துக்களின் விபரம் (வழங்குநர்களுக்கு தொடர்புடையதல்ல)
12 சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் :
13. தொலைபேசி இலக்கம் :
14. தொலை நகல் இலக்கம் :
15. பெறுமதி சேர்ப்பு வரி (VAT) பதிவு இலக்கம் :
16. கடன் வசதி வழங்கக் கூடிய கால எல்லைகள் :
17. போக்குவரத்து வசதிகள் வழங்க முடியுமா என்பது பற்றி :
18. ஏனைய தகுதிகள் :

விண்ணப்பதாரியின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை

பொது நிபந்தனைகள்

1. பதிவு செய்யப்படுகின்ற அனைத்து வழங்குநர்களும் ஒவ்வொரு வகைக்கும் வெவ்வேறாக விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் அதனுடன் வியாபார பெயர் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றும் கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும். ஒரு வகைக்கு பதிவு செய்து கொள்வதற்கு ரூபா 1500.00 கட்டணமொன்றைச் செலுத்துதல் வேண்டும்.
2. தபால் மூலம் விண்ணப்பிப்பதாயின் **'தவிசாளர் ரம்புக்கனை பிரதேச சபை'** எனும் பெயருக்கு எழுதப்பட்ட காசோலையொன்றின் மூலம் மாத்திரம் செலுத்தலாம். காசுக்கட்டளைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
3. தேவையான சந்தர்ப்பங்களில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலை மனுக்கள் கோரலாம் என்பதுடன் அதற்குப் புறம்பான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலை மனுக்கோரல் மற்றும் கொள்வனவு செய்யும் உரிமையும் பிரிதொரு பெறுகை முறையை நடைமுறைப்படுத்தும் உரிமையும் சபைக்கு உரியது.
4. இச்சபையினால் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட வழங்குநர் ஒருவர் குறித்த திகதிக்கு உரிய நேரத்திற்கு முன் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கத் தவறும் பட்சத்தில் மறு அறிவித்தலின்றி இச்சபை ஏற்றுக்கொண்ட அடுத்த வழங்குநருக்கு குறித்தொதுக்கப்படும் என்பதையும் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.
5. உரிய நேரத்திற்கு விலை மனுக்களை சமர்ப்பிக்காத மற்றும் குறித்த நேரத்திற்கு தரமான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கத் தவறும் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்ட பெயர் இடாப்பிலிருந்து அகற்றப்பட்டு கறுப்புப் பட்டியல் படுத்தப்படும்.
6. எவையேனும் பொருட்கள், சேவைகள் அல்லது ஒப்பந்தங்களை வழங்குவதற்குத் தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர் ஒருவருக்கு முற்பணக் கொடுப்பனவொன்று செலுத்தப்படாததுடன் பொருட்கள் சேவைகளை வழங்கிய திகதியிலிருந்து குறைந்த பட்சம் 45 நாள் சலுகைக் கால கடன் வசதி வழங்குநர்களினால் வழங்கப்படுதல் வேண்டும்.
7. சேவை ஒப்பந்தங்களை வழங்குவதற்காக ஒப்பந்தங்களில் கைச்சாத்திடும் சந்தர்ப்பத்தில் சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற தொகையொன்றை முறியாக/பிணையாக வைப்புச் செய்தல் வேண்டும். ஒப்பந்தக் காலம் முடிவடைந்ததன் பின் இவ்வைப்புத் தொகையை மீளப் பெற்றுக் கொள்ளலாம். உங்களால் வழங்கப்படுகின்ற சேவையில் ஏதேனும் குறைபாடுகள் காணப்பட்டால் நட்டத்தினை வைப்புத் தொகையிலிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
8. பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களினால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின் குறித்த விலைகளுக்கு ஏற்ப குறைந்த பட்சம் 06 மாத காலத்திற்காவது பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக சம்பந்தப்பட்ட விலைகளில் மாற்றங்கள் ஏற்படும்போது ஒரு மாதத்திற்கு முன் அது விடயமாக ரம்புக்கனை பிரதேச சபைக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.
9. உரிய முறையில் தகவல்களை வழங்காத பூரணமற்ற விண்ணப்பங்கள் மற்றும் 2023.11.30ஆம் திகதிக்குப் பின் கிடைக்கின்ற அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பதாரரிற்காக இருக்க வேண்டிய அளவு கோல்கள்

1. கூட்டுத்தாபனமொன்றெனின் கூட்டுத்தாபனமொன்றாக இணைக்கப்பட்டதற்காக வழங்கப்படுகின்ற சான்றிதழ்
2. தனிநபர் வியாபாரமொன்றின் பதிவுச் சான்றிதழ்
3. கம்பனியொன்றெனின் கம்பனிகள் சட்டத்தின் படியான பதிவுச் சான்றிதழ்
4. ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்வதற்கான நிர்மாணங்கள் மற்றும் அபிவிருத்தி (ஐCTAD) சான்றிதழ் மற்றும் புத்தகம் (தேவைக்கேற்றவாறு சமர்ப்பித்தல் வேண்டும்)
5. இதற்கு முன் ஐந்து அரச நிறுவனங்களிற்காவது பண்டங்கள் சேவைகளை வழங்கியிருப்பது ஒரு விஷேட தகுதியாகும்.
6. வாகனத் திருத்தங்கள் தொடர்பாக சப்ரகமுவ மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மோட்டார் வாகனத் திருத்துமிடமொன்றாக இருத்தல் மற்றும் ஐந்து அரச நிறுவனங்களிற்காவது சேவைகளை வழங்கிய அனுபவமுள்ள நிறுவனமாக காணப்படுதல் ஒரு விஷேட தகுதியாகும்.
7. உத்தரவாதக் காலம் வழங்கப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளிற்கான உத்தரவாதக் காலம் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
8. மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளுக்கு மேலதிகமாக விஷேட தகுதிகள் இருப்பின் விண்ணப்பப்படிவத்தில் ஏனைய விடயங்கள் எனும் பகுதியின் கீழ் குறிப்பிடவும்.

ஆர்.எம்.பி. ரத்நாயக்க
செயலாளர்,
ரம்புக்கனை பிரதேச சபை.

2023.10.10ஆம் திகதி
ரம்புக்கனை பிரதேச சபையில்

தேசிய உப்பு நிறுவனம்
(அரசுக்குச் சொந்தமான நிறுவனம்)

விலைமனுக்களுக்கான அழைப்பு

உண்ணக்கூடிய உப்பை பொதி செய்வதற்காக மேற்படி உருப்படிகளைக் கொள்வனவு செய்வதற்கு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நிறுவனம் அழைக்கின்றது. தயவு செய்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023-11-07ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது பின்வரும் முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

லெமினேட் செய்யப்பட்ட பைகள்

தயாரிப்பு : இரு பக்கங்களிலும் அச்சிடப்பட்ட 5 வர்ண LLDPE பைகள் (Centre sealed pouch)

அளவு : உயரம் 250 மி.மி. மற்றும் அகலம் 150 மி.மி. (1 கிலோவுக்கு)

எண்ணிக்கை : 2,000,000

விநியோகம் : மன்னார், மன்னார் உப்பளத்திற்கு

Artwork : தேசிய உப்பு நிறுவனத்தினால் வழங்கப்படும்.

Cylinder Cost : வழங்குநர் ஏற்க வேண்டும்.

விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளல்: மீளளிக்கப்படாத 1,500.00 ரூபா கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களுடன் விலைமனு தரவுத் தாளில் தரப்பட்டுள்ள வகையில் விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட வழங்குநர் பொருட்களுக்கான உணவுத் தரச் சான்றிதழைச் (**Food Grade Certificate**) சமர்ப்பித்தல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விலைக்கோரலின் பெயரைக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
தேசிய உப்பு நிறுவனம்,
இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு-05.

தொலைபேசி: 0112368964
தொலைநகல்: 0112368974

இலங்கை வங்கி

ஏல விற்பனை அறிவித்தல்

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க 200ஆம் ஆண்டு 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.

கடன் தொடர்பு இல.87643498 & 87643568

கொத்தட்டுவ புதிய நகரம், போகஹசந்தி வீதி, இல.614 ஐச் சேர்ந்த திரு. மாலபகே சந்திரா குமார பெரேரா (M/s MK மோட்டர்ஸ் அன்ட் எஞ்சினியர்ஸ் ஏக உரிமையாளர்) ஈடு வைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர் சபை மேற்கொண்ட தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2023.08.18 ஆம் திகதி 2346 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.08.16 ஆம் திகதி தினகரன், தினமின, மற்றும் டேய்லிநியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. M.H.T. கருணாரத்ன அவர்கள் 16.11.2023 திகதி மு.ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற் குறிப்பிடப்பட்ட அட்டவணை

"பிட்டவகுற" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் கே.ஏ. கப்புகீகியன்ன தயாரித்த 2002.03.03ஆம் திகதிய 3162ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு A2 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி அதன்கண் காணப்படும் மண், மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்துடனும் மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், அம்பட்டலன் பஹல அளுத் குரு கோரளை கொலன்னாவை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைகட்குட்பட்ட 513C, கஜுகஹவத்த கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள பஹல கொத்தட்டுவ கிராமத்தில் அமைந்துள்ளது. வடக்கில் பி.எம். கூரேயின் காணியையும் கிழக்கில் 2828ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டு Aஐயும் தெற்கில் இதே காணியின் மீதிப் பாகத்தையும் மேற்கில் எல்லையையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணியானது இரண்டு ரூட்கள் (ஏ0-ரூ2-பே0) பரப்பளவைக் கொண்டுள்ளதோடு கொழும்பு காணிப் பதிவகத்தில் F12/136 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

M/S MK மோட்டர்ஸ் அன்ட் எஞ்சினியர்ஸ் ஏக உரிமையாளர் திரு.மாலபகே சந்ரகுமார பெரேரா அவர்களின் ரூ.3,135,400.00 (மூன்று மில்லியன் நூற்று முப்பத்தைந்து ஆயிரத்து நாநூறு ரூபா) வைப்பிலிடப்பட்டுள்ளது.

"ஏலவிலை கூறுவோர் தொலைபேசி இல. 0112572265 ஊடாக கொலன்னாவக் கிளை முகாமையாளருடன் தொடர்பு கொண்டு மேற்குறிப்பிட்ட ஆதனம் சம்பந்தமான உரித்துரிமை உறுதிகளையும் சம்பந்தப்பட்ட ஏனைய ஆவணங்களையும் இலவசமாகப் பார்வையிடலாம்.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி

திருமதி டபிள்யு.டி.ஏ.யு வட்டுவகே
முகாமையாளர்

இலங்கை வங்கி
கொலன்னாவைக் கிளை

கெஸ்பேவ நகர சபை

2024ஆம் வருடத்திற்காக வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

கெஸ்பேவ நகர சபைக்கு பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குதல் மற்றும் ஒப்பந்தங்களுக்காக பதிவு செய்து கொள்ளும் பொருட்டு மேல் மாகாணத்தினுள் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2023-10-17ஆம் திகதி முதல் 2023-11-17ஆம் திகதி பி.ப. 03.00 மணி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01 பொருட்கள்

01. வீட்டுத்தளபாடங்கள் மற்றும் அலுவலக மரத்தளபாடங்கள் உருக்கு உபகரணங்கள்
02 காகிதாதிகள், அப்பியாசப்புத்தகங்கள், அச்சிடப்பட்ட படிவங்கள் மற்றும் ஆவணங்கள்
03. கிருமிநாசினிப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் (கம்பூட்ஸ், கையுறைகள், தும்புத்தடி, ஈர்க்கிள் மற்றும் இறப்பர் உற்பத்திகள் உட்பட)
04. நூலகப் புத்தகங்கள், சஞ்சிகைகள்
05. நிர்மாணம் மற்றும் வீதிப் பராமரிப்பு உபகரணங்கள் (கல், மணல்,இரும்பு ஏணி, சவல்கள் மண்வெட்டி, இரும்பு, நிறப்பூச்சு போன்றன)
06. சீருடைகள் மற்றும் உபகரணங்கள் (துணிகள், சாரி, தண்ணீர் போத்தல்கள், குடை, பைகள், தொப்பிகள், காலணிகள் போன்றன)
07. அறிவித்தல் பலகைகள், பெயர்ப் பலகைகள்
08. புகைப்படப் பிரதி இயந்திரங்கள் / அச்சுப் பொறிகள் / தொலைநகல் இயந்திரங்களுக்குத் தேவையான மைகள் மற்றும் டோனர்கள்
09. இலத்திரனியல் / மின்சார உபகரணங்கள் (கணனி இயந்திரங்கள் / அச்சுப்பொறிகள் / அலுவலக இயந்திரோபகரணங்கள்)
10. மின் விளக்குகள் மற்றும் மின்சார துணைப்பாகங்கள் (வீதி விளக்குகளுக்கான பாகங்களுடன்)
11. வாகன உதிரிப்பாகங்கள், டயர்கள், டியூப்கள் மற்றும் உராய்வுநீக்கி எண்ணெய்கள்
12. விளையாட்டுப் பொருட்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள்
13. அனைத்து வகையான ஹியூம் குழாய்கள், கம்பி தூண்கள் மற்றும் கொங்கிறீட் உற்பத்திகள்
14. பிட்டுமன் மற்றும் இமல்ஷன் (கொலாஸ்) (80x100 Tar, CSS 1, CRS 1), தார்ப் பீப்பாக்களை கொண்டு வந்து ஒப்படைத்தல்

02. சேவைகள்

15. வாகனங்களை வாடகை அடிப்படையில் வழங்குதல் (டிராக்டர், டிப்பர், வேன், நீர் பவுசர்கள், JCB, Forklift)
16. அனைத்து வகையான வாகனங்களையும் சேர்விஸ் செய்தல் (அதிகாரப் பிரதேசத்திற்குள் அல்லது அதற்கு அண்மையில் அமைந்திருத்தல் வேண்டும்)
17. அனைத்து வகையான டீசல், பெட்ரல் வாகனங்கள் மற்றும் கனரக வாகனங்கள், இயந்திரோபகரணங்களின் தகர, நிறப்பூச்சு வேலைகள், வளிச்சீராக்க திருத்தவேலைகள்
18. முச்சக்கர வண்டிகளின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் மற்றும் குஷன் இடுதல்
19. அலுவலக இயந்திரோபகரணங்கள் (கணனிகள், புகைப்படப் பிரதி, ரோணியோ) திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
20. உணவு வழங்குதல் மற்றும் கேட்டரிங் சேவைகள்
21. ஒலிபெருக்கி இயந்திரங்கள், உற்சவப் பொருட்கள் வழங்குதல்
22. இறப்பர் முத்திரைகளை வெட்டுதல், அறிவித்தல் / பதாகைகள் / சுவரொட்டிகள் மற்றும் சகல வகையான அச்சு வேலைகள்
23. டயர், டியூப் மாற்றுதல், பொருத்துதல், ஒட்டு போடுதல், வீல் எலைன்மன்ட் செய்தல் மற்றும் டயர்களை மீள்நிரப்புதல்
24. அனைத்து வகையான குஷன் வேலைகள் / திரைச்சீலைகள் இடுதல்
25. உபகரணங்களை வாடகை அடிப்படையில் வழங்குதல் நிர்மாணம் மற்றும் பராமரிப்பு வேலைகளுக்குத் தேவையானவை
26. தச்சு வேலைகள், மேசன் வேலைகள், வெல்டிங் வேலைகள், நீர்க்குழாய் பொறிமுறை வேலைகள், உள்ளக தொலைபேசி சேவை பராமரிப்பு
27. அலுவலக அடையாள அட்டைகளைத் தயாரித்தல் மற்றும் புகைப்படச் சேவைகள்
28. சட்ட சேவைகள், நில அளவை சேவைகள், மொழிபெயர்ப்பு மற்றும் ஆலோசனை சேவைகள்
29. போத்தல், பத்திரிகைகள், பழைய இரும்பு மற்றும் சிதைந்த பொருட்களை கொள்வனவு செய்தல்
30. உள்ளக மின்சார முறைமை, மின் பிறப்பாக்கி இயந்திரம், மின்சார உபகரண நிறுவுதல், திருத்தவேலைகள் மற்றும் சேவைகளை வழங்குதல்
31. தகனச்சாலை திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள்
32. அலுமினிய துணைப்பாகங்களை பயன்படுத்தி கதவு, யன்னல்களை தயாரித்தல், பொருத்துதல் மற்றும் பகுதி பிரிப்புகளைச் செய்தல்
33. தீப் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் சேவைகளை வழங்குதல்

03. ஒப்பந்தங்கள்

கட்டிட நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்பு வேலைகளுக்கான ஒப்பந்தக்காரர்கள்	பதிவுக் கட்டணம்
20 இலட்சம் ரூபா வரை	ரூ. 10,000.00
20 இலட்சம் ரூபாவிற்கு மேல்	ரூ. 15,000.00
வீதி நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்பு வேலைகளுக்கான ஒப்பந்தக்காரர்கள்	**பதிவுக் கட்டணம்**
20 இலட்சம் ரூபா வரை	ரூ. 10,000.00
20 இலட்சம் ரூபாவிற்கு மேல்	ரூ. 15,000.00

நிபந்தனைகள்

01. தம்மால் தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவங்களின் சகல விபரங்களையும் உள்ளடக்கி, கெஸ்பேவ நகர சபை, பிலியந்தலை எனும் பெயருக்கு வரையப்பட்ட காசோலை, காசுக் கட்டளை அல்லது இந்த அலுவலகத்தின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு பொருளுக்காகவும் வெவ்வேறான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன், அவைகளுக்காக பின்வரும் வகையில் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்.
    I. 01 முதல் 15 வரையான உருப்படிகளுக்கு 2,000.00
    II. 16 முதல் 33 வரையான உருப்படிகளுக்கு 1,000.00
    III. ஒப்பந்தங்களுக்காக மேற்குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம்
03. அனைத்து தேவைப்பாடுகளின் பொருட்டும் பொதுவாக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே விலைகள் கோரப்படும் என்பதுடன் அவசியமான வேளைகளில் அதற்குப் புறம்பாகவும் விலைகளைக் கோரும் அல்லது கொள்வனவு செய்யும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
04. குறைந்தபட்சம் 30 நாட்கள் கடன் அடிப்படையில் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.
05. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் சமுகம் தந்து அல்லது 0112618100 அல்லது 0112618197 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

வழங்குநர்களுக்கு இருக்க வேண்டிய மூலப்பிரமாணங்கள்:

01. கூட்டுத்தாபனமானால் கூட்டுத்தாபனமாக சட்ட ரீதியாக பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்
02. தனி நபர் வியாபாரமொன்றானால் பெயர் பதிவுச் சான்றிதழ்
03. கம்பனியானால் கம்பனிச் சட்டத்திற்கமைவான பதிவுச் சான்றிதழ்
04. ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்யும் பொருட்டு நிர்மாணம் பயிற்சி மற்றும் அபிவிருத்தி (ICTAD) பதிவுச் சான்றிதழ் மற்றும் புத்தகம் (தேவைக்கேற்றவாறு) சமர்ப்பித்தல் வேண்டும்.
05. இதற்கு முன் ஐந்து அரச நிறுவனங்களுக்காவது பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கியிருத்தல் விசேட தகைமையாகும்.
06. வாகன திருத்தவேலைகள் தொடர்பில் மேல் மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மோட்டார் திருத்தகங்களாயிருத்தல் மற்றும் ஐந்து அரச நிறுவனங்களுக்காவது சேவைகளை வழங்கிய அனுபவத்தைக் கொண்ட நிறுவனமாகவிருத்தல் விசேட தகைமையாகும்.
07. உத்தரவாதக் காலம் உள்ள பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான உத்தரவாதக் காலத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.
08. வேறு விசேட தகைமைகள் இருக்குமாயின் குறிப்பிடவும்.

செயலாளர் மற்றும் சபையின் அதிகாரம் வாய்ந்த வேலைகளை நிறைவேற்றும் அதிகாரி,
கெஸ்பேவ நகர சபை.

2023-10.16
கெஸ்பேவ நகர சபை அலுவலகத்தில்.

இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.08.31 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு எஸ்.ஏ.டி.எஸ்.கே. அத்துகோரல அத்தாட்சிப்படுத்திய 2017.08.15 திகதியிட்ட ஈட்டு முறி இல. 2422 இன் பேரில் ரம்புக்கன, மடவல, உளுகொடவத்த, இல. 26/2 என்னும் முகவரியில் அமைந்த M/s CoCo அக்ரோ இன்வெஸ்ட்மென்ட் பிரைவேற் லிமிடெற்றிடமிருந்து 2023.05.30 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 66,523,196.06 (அறுபத்தாறு மில்லியன் ஐநூற்று இருபத்து மூன்று ஆயிரத்து நூற்று தொண்ணூற்று ஆறு ரூபாய்களும் ஆறு சதங்களும்) அத்துடன் மேற்குறிப்பிட்ட கடன் வசதி மீது வருமதியாக உள்ள ரூ. 42,233,005.73 (நாற்பத்திரெண்டு மில்லியன் இருநூற்று முப்பத்துமூன்று ஆயிரத்து ஐந்து ரூபாய்களும் எழுபத்து மூன்று சதங்கள்) மீது ஆண்டுக்கு பதின்மூன்று தசம் பூச்சியம் எட்டு (13.08%) வீதத்தில் 2023.05.31 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,
2. மேற்குறிப்பிட்ட பிரசித்த நொத்தாரிசு எஸ்.ஏ.டி.எஸ்.கே. அத்துகோரல அத்தாட்சிப்படுத்திய 2017.08.15 திகதியிட்ட ஈட்டு முறி இல 2422 இன் பேரில் கடன் வசதி இல. 81290580 இன் மீது மேற்குறிப்பிட்ட ரூ. 66,523,196.06 (அறுபத்தாறு மில்லியன் ஐநூற்று இருபத்து மூன்று ரூபாய்களும் ஆறு சதங்களும்) அத்துடன் நிலுவை ஆயிரத்து நூற்று தொண்ணூற்று ஆறு முதல் ரூ.42,233,005.73 (நாற்பத்திரெண்டு மில்லியன் இருநூற்று முப்பத்துமூன்று ஆயிரத்து ஐந்து ரூபாய்களும் எழுபத்து மூன்று சதங்கள்) மீது 2023.05.31 தொடக்கம் விற்பனைத் திகதி வரை ஆண்டுக்கு பதின்மூன்று தசம் பூச்சியம் எட்டு (13.08%) வீதத்தில் மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 182/3 (50/3) விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த M/s T&H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு துசித்த கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி ரம்புக்கனைக் கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட அட்டவணை.

வடமேல் மாகாணம் குருணாகலை மாவட்டத்தில் உடுகஹ கோரலை தேவமெதி ஹத்பற்றுவில் பொல்கஹவெல பிரதேச சபை எல்லைகளுள் வீரம்புகெதர பிரதேச செயலகப் பிரிவு கோனாவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் கினிபெந்த மற்றும் ஹன்வெல்லயில் அமைந்த "மகுருவலபிட்டிய எஸ்டேற் (உறுதியின் படி மதுருவலபிட்டிய எஸ்டேற்)" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் W.A. பிரேமரத்ன தயாரித்த 2017.03.04 திகதியிட்ட வரைபடம் இல.166/17 இல் காணித்துண்டு 01 என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, அதாவது மேற்கூறிய காணித்துண்டு 01 இன் எல்லைகளாவன: **வடக்கில்** பிரதான பாதையிலிருந்து வீரம்புகெதர வரை பிரதேச சபைப் பாதையும், **கிழக்கில்** மானெல் ஜயகொடி உரிமை கோரும் காணியும், திரு குசல் வைத்திருக்கும் குத்தகைக்காணி (உறுதியின் பிரகாரம் மானெல் ஜயகொடியின் காணி) மற்றும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான அதே காணியின் மீதிப் பாகத்தை பிரிக்கும் உயிர் மற்றும் கம்பி வேலியும், **தெற்கில்** கிரிமுதியான்சே மற்றும் உடபொல யசபால உரிமை கோரும் காணியை பிரிக்கும் உயிர் மற்றும் கம்பி வேலியும் **மேற்கில்** மொஹான் ஜயகொடி உரிமை கோரும் காணியை பிரிக்கும் வேலியும் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 166/17 இன் பிரகாரம் மூன்று ஏக்கர்கள் ஒரு றூட் (ஏ.3.றூ.1.பே.0) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மரங்கள், பயிர்கள். கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி குருனாகலை காணிப் பதிவகத்தில் V80/94இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

திருமதி.G.R.B.J.R.R. அபயபண்டார
முகாமையாளர்
இலங்கை வங்கி
இரம்புக்கணைக் கிளை
15.09.2023

இலங்கை வங்கி

ஏல விற்பனை அறிவித்தல்

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டு 54 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.

1. கடன் தொடர்பு இல.83969973.

கண்டி, அனகாரிக தர்மபால மாவத்தை, இல.117/6 ஐச் சேர்ந்த திரு செனரத் பண்டா தல்வத்த மற்றும் திருமதி மாரசிங்ஹ ரத்நாயக்க ஷிரோமணி தீபஷிகா அபேசேகர தல்வத்த ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர் சபை மேற்கொண்ட தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2023.09.08 ஆம் திகதி 2349 ஆம் இலக்க வர்த்தமானியிலும், 2023.09.05 ஆம் திகதி தினகரன், தினமின, மற்றும் டெய்லிநியூஸ் ஆகிய நாளிதழ்களிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ எனும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு துசித கருணாரத்ன அவர்கள் 2023 நவம்பர் 10 ஆம் திகதி மு.ப.10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபை எல்லைகளுள் டாம் வீதியில் கொழும்பு பிரதேச செயலகப் பிரிவில் மருதானை கிராம உத்தியோகத்தர் பிரிவு இல. 165இல் வோர்ட் இல. 26 இல், சீமன்ட் வீதியில் அமைந்ததும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் S. லோகநாதன் தயாரித்த 1990 நவம்பர் 28 திகதியிட்ட வரைபடம் இல. 3859 இல் விபரித்த குறித்த காணி, பத்தேகம விமலவங்ஸ ஹிமி மாவத்தை, வரி மதிப்பு இல. 72 மற்றும் 72/14 கொண்ட நிலமனைகள் மற்றும் மேல் மாடிக் கட்டிடத்தையும் கொண்ட மேற்கூறிய காணியின் எல்லைகளாவன: வடக்கில் வரி மதிப்பு இல. 68 மற்றும் 70 ஐக் கொண்ட நிலமனையும் (சீமன்ட் வீதி), கிழக்கில் வரிமதிப்பு இல. 70 ஐக் கொண்ட நிலமனையும் சீமன்ட் வீதியும் தெற்கில் வரிமதிப்பு இல. 72 ஐக் கொண்ட தோட்டமும், (சீமன்ட் வீதி) மேற்கில் வரிமதிப்பு இல. 68 ஐக் கொண்ட நிலமனையும் (சீமன்ட் வீதி) எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 3859 இன் பிரகாரம் ஐந்து பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.5) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள் பயிர்கள் கட்டிடங்கள் மற்றும் அங்கு அமைந்துள்ள சகலதும் அங்கு வளர்பவையும் ஆகும். இக்காணி கொழும்பு காணிப் பதிவகத்தில் A 974/268 இல் பதிவு செய்யப்பட்டது.

வரைபடம் இல. 3859 இல் குறிப்பிட்ட மேற்கூறிய காணி கீழ் விபரித்த காணிக்கு ஒத்ததாகும்.

மேற்கூறிய டீன்ஸ் வீதி மற்றும் சீமன்ட் வீதியில் அமைந்ததும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் S. சிங்கநாயகம் தயாரித்த 1965 ஒக்டோபர் 22 திகதியிட்ட வரைபடம் இல. 1057 இல் காணித்துண்டு 23ஐக் கொண்ட (நிலத்தளம்) மேல்மாடிக் கட்டிடம் மற்றும் வரிமதிப்பு இல.72 மற்றும் 72/14 ஐக் கொண்ட நிலமனைகள் அதாவது மேற்கூறிய காணித்துண்டு 23 இன் எல்லைகளாவன வடக்கில் T.B. ஜாயா மாவத்தை நிலமனை இல. 175 மற்றும் மேற்கூறிய வரைபடம் இல. 1057 இல் காணித்துண்டு இல. 24 உம் கிழக்கில் மேற்கூறிய வரைபடம் இல. 1057 இல் காணித்துண்டு 24 மற்றும் சீமன்ட் வீதியும் தெற்கில் காணித்துண்டு 6 (பிரவேசப் பாதை) மற்றும் மேற்கூறிய வரைபடம் இல. 1057 இல் காணித்துண்டு 7 உம் (தண்ணீர் கழிப்பறை) மேற்கில் T.B. ஜாயா வீதி நிலமனை இல. 175 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல.1057 இன் பிரகாரம் நான்கு தசம் ஒன்பது நான்கு இரண்டு பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.4.942) விஸ்தீரணமுடையது. இக் காணி கொழும்பு காணிப் பதிவகத்தில் D208/58 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை

1. மேற்கூறிய மருதானையில் சீமன்ட் வீதி மற்றும் டீன்ஸ் வீதியில் அமைந்ததும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் S. சிங்கநாயகம் தயாரித்த 1965 ஒக்டோபர் 22 திகதியிட்ட வரைபடம் இல. 1057 இல் விபரித்த காணித்துண்டு இல. 6 (பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு 6 மேற்கூறிய அதாவது காணித்துண்டு இன் எல்லைகளாவன: வடக்கில் வரி மதிப்பு இல. 175 ஐக் கொண்ட நிலமனை, T.B. ஜாயா பாதையும் மேற்கூறிய வரைபடம் இல. 1057 இல் காணித் துண்டுகள் 7 மற்றும் 23 உம் கிழக்கில் மேற்கூறிய வரைபடம் இல. 1057 இல் காணித்துண்டுகள் 22,13,14,16 மற்றும் 5 உம் சீமன்ட் பாதையும் தெற்கில் மேற்கூறிய வரைபடம் இல. 1057 இல் காணித் துண்டுகள் 22,8,9,10,11,12,1 மற்றும் 5 உம் போபஸ் வீதி வரிமதிப்பு இலக்கங்கள் 165,169 மற்றும் 177/6 உம் மேற்கில் மேற்கூறிய வரைபடம் இல.1057 இல் காணித்துண்டுகள் 1,2,3 மற்றும் 4 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல.1057 இன் பிரகாரம் பத்து தசம் மூன்று இரண்டு ஆறு பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.10.326) விஸ்தீரணமுடையதாகும். இக்காணி கொழும்பு காணிப் பதிவகத்தில் D 29/67 இல் பதிவு செய்யப்பட்டது.
2. மேற்கூறிய மருதானையில் சீமன்ட் றோட் மற்றும் டீன்ஸ் றோட்டில் அமைந்ததும் மேற்கூறிய வரைபடம் இல. 1057 இல் விபரித்த காணித்துண்டு 7 (தண்ணீர் கழிப்பறை) என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு மேற்கூறிய காணித்துண்டு இன் எல்லைகளாவன: வடக்கில் மேற்கூறிய வரைபடம் இல. 1057 இல் காணித்துண்டு 23 உம் கிழக்கில் மேற்கூறிய வரைபடம் இல. 1057 இல் காணித் துண்டுகள் 23 மற்றும் 6 உம் தெற்கில் மேற்கூறிய வரைபடம் இல. 1057 இல் காணித் துண்டு 6உம் மேற்கில் T.B ஜாயா மாவத்தை, வரி மதிப்பு இல. 175 ஐக் கொண்ட நிலமனையும் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 1057 இன் பிரகாரம் பூச்சியம் தசம் ஒன்று பூச்சியம் ஏழு பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.0.107) விஸ்தீரணமுடையதாகும். இக்காணி கொழும்பு காணிப்பதிவகத்தில் D 119/02 இல் பதிவு செய்யப்பட்டது.

ஏலவி

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

விலைமனுக்கோரல் (IFB)

இல.	ஒப்பந்தப் பெயர்
01	வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமை அலுவலகத்திற்கான 10KVA ஒன்லைன் தடையில்லா மின்சாரம் வழங்கி (UPS) ஒன்பதினை (09) வழங்கல், நிறுவுதல் மற்றும் பராமரித்தல்

மேற்கூறிய பணிகளுக்காக தேசிய போட்டி ஏல நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2023.10.17** ஆம் திகதி முதல் **2023.11.06** ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரச்சபை மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையத்தளத்தை **www.rda.gov.lk** பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள வீதி அபிவிருத்தி அதிகாரச்சபையின் பணிப்பாளர் (கொள்முதல்), **011-2884790 /** மின்னஞ்சல்: **procurement@rda.gov.lk** மூலமாகத் தொடர்பு கொள்ளவும்.

SELACINE

Replies to Classifieds & Casual Advertisements published C/o the **Daily News** should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

விலைமனுகோரல்
தளவைத்தியசாலை கந்தளாய்

கந்தளாய் தள வைத்தியசாலையின் கீழ்தரப்பட்ட நிர்மாணப்பணிகளுக்கான தகுதியுடைய ஒப்பந்தக்காரர்களின் (கொந்தராத்துக்காரர்களின்) முத்திரை பதிக்கப்பட்ட விலைமனுக்களை கோருவதற்கு வைத்தியசாலையின் பெறுகை குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ் நிர்மாணப் பணிகளுக்கான முழுமையான ஒப்பந்தபத்திரம் (விலைமனுக்கள்) 2 பிரதிகளுடன் ஏற்றுக்கொள்ளப்படும்

தொடர் இலக்கம்	பணியின் பெயர்	கேள்விக்காரர்களின் தகுதி	மீள்வழங்கப்படாத அனுமதிப்பத்திரக் கட்டணம்	"லங்சு" பிணைக்காரரின் பெறுமதி	மதிப்பிடப்பட்ட மூலச்செலவு மில்லியனில்
2023-06	Extension and renovation of X-ray room	C-6 & 7	2000.00	150,000.00	10.3

1. இதற்காக காரியாலயத்தினால் வெளியிடப்பட்ட பத்திரங்களில் மாத்திரம் கேள்விப்பத்திரம் முன் வைக்கப்படல் வேண்டும்.
2. ஒப்பந்த (விலைமனுக்கள்) பத்திரம் மீள்வழங்கப்படாத அனுமதிப்பத்திரக் கட்டணத்தை செலுத்தி வார நாட்களில் 2023.10.17ம் திகதியிலிருந்து மு.ப 9.00 இல் இருந்து பி.ப 2.30 வரை வைத்தியசாலை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
3. 2023.10.30ம் திகதி பி.ப 2.30 க்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதோடு அதற்கு முதல் பெறும் வகையில் விலைமனுக்கள் தலைவர், மீள்நிர்மாணபணிக்குழு, தளவைத்தியசாலை கந்தளாய்" என்ற விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பமுடியும். இல்லையெனில் கந்தளாய் தளவைத்தியசாலையின் காரியாலயத்திற்கு கொண்டு வந்து தரமுடியும். குறித்த நேரத்திற்கு பின் கிடைக்கும் (டென்டர்) ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஒப்பந்த பத்திரம் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் ஒப்பந்தக்காரர் or அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகளிக்க முடியும்.
4. கேள்விமனுக்களைக் கொண்ட கடித உறையின் மேல் இடது மூலையில் விலைமனு இலக்கம் மற்றும் குறித்த பணி தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.
5. கேள்விமனுக்கள் திறப்பதற்கு முன்னரான கூட்டம் (Pre-bid meeting) 2023.10.25ம் திகதி 2.00 மணிக்கு இடம்பெறும்.

எந்தவொரு கேள்விமனுவையும் ஏற்றுக்கொள்ளல் மற்றும் ஏற்றுக்கொள்ளாதிருக்கும் உரிமை வைத்தியசாலையின் பெறுகைக்குழுவிற்கு உண்டு.

மேலதிக விபரம்:- 026-2234948,0752526072

தலைவர்,
பிரதேச பெறுகைக் குழு,
தள வைத்தியசாலை,
கந்தளாய்.

பெறுகை அறிவித்தல்
மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

(மாகாண வீதி போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)

CSS1/CRS1 இமல்ஷன் வழங்குதல்

இவ் அதிகார சபையின் கீழ்க்காணும் நிறைவேற்று பொறியியல் அலுவலகங்களில் மூன்று மாத தேவைப்பாட்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து சேவைகள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் கேள்விச் சுருக்கத்தில் தரப்பட்டுள்ளவாறு படிவத் தொகுதிகளை கொள்வனவு செய்தல் வேண்டும்.

கேள்விச் சுருக்கம்

கேள்வி இலக்கம்	நிறைவேற்று பொறியியலாளர் பணிமனை	வழங்கல் அளவு		மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூ. (பதிவு செய்த வழங்குநர்கள் தவிர்த்து)	கேள்விப்பிணை முறியின் பெறுமதி	
		CSS1 லீட்டர்	CRS1 லீட்டர்		காசாக	வங்கிப்பிணை முறி
PRDA/ WP/ PRO/ 2023/ 88	1. கொழும்பு	6000	-	1000.00 + வெட் வரி	795000.00	159,000.00
	2. மொறட்டுவ	2000	-			
	3. அவிசாவளை	5200	5800			
	4. உடுகம்பல	15000	10000			
	5. ஹொரண	3000	2000			
	6. நிட்டம்புவ	-	1000			
	7. கிரிந்திவெல	6600	6000			
	8. நீர்கொழும்பு	6000	4000			
	9. அகலவத்த	3000	3000			
	10. களுத்துறை	-	2000			

2. இதற்கான கேள்வி ஆவணத் தொகையை 2023.10.30 வரை வார நாட்களில் மு.ப 9.00 முதல் பி.ப 2.30 வரை மேற்படி கேள்விப் படிவக்கட்டணங்களுக்கு உட்பட்டு இவ்அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான பிணைமுறியை காசாக அல்லது வங்கிப்பிணைமுறி மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படல். நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்படி பெறுமதிக் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கேள்வி வழங்குவதற்கு தகைமை பெறுவதற்காக கேள்வித்தொகை ரூ. 5.0 மில்லியனுக்கு மேற்படும் வேளையில் கேள்விதாரரால் குறித்த 1987 இல 03 எனும் பொது ஒப்பந்த சட்டத்தின் 08ம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரால் விநியோகிக்கப்படும் பொது ஒப்பந்தப் பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.
4. கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2023.10.31 மு.ப 11.00 ஆவணத்துடன் கேள்விகள் திறத்தல் அவ்வேளையிலேயே இவ் அலுவலகத்தில் நடைபெறும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

தலைவர்,
பெறுகைக் குழு,
மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே/மா),
இல 59, சென் செபஸ்ரியன் மேடு,
கொழும்பு -12
தொ.பே இல : 011-4549825/4849845

பெறுகை அறிவித்தலின் 2ஆம் திருத்தம்

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு
நீர்ப்பாசன அமைச்சு
நீர்ப்பாசனத் திணைக்களம்

Procurement of Hydraulic Hoist for Kuda Oya Reservoir

2023 செப்டெம்பர் 07 மற்றும் 26ஆம் திகதிகளில் ''தினகரன்'' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பெறுகை அறிவித்தலில் பின்வரும் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

விலைக் கோரல் இல.	வழங்கல் விபரங்கள்	எண்ணிக்கை	விலைக் கோரல் செல்லுபடியாக வேண்டிய காலம்	விலைக் கோரல் பிணை முறித் தொகை (ரூபா)	பிணை முறி செல்லுபடிக் காலம்
IFB/ID/GOSL/ NCB/2023/005	Procurement of Hydraulic Hoist for Kuda Oya Reservoir	02	2024 ஜனவரி 30ஆம் திகதி வரை	2,500,000.00	2024 பெப்ரவரி 27ஆம் திகதி வரை

விலைமனுக்கள் 2023 ஒக்டோபர் 30ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை வழங்கப்படும் என்பதுடன் 2023 ஒக்டோபர் 31ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும் என்பதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும்.

2023 செப்டெம்பர் 07ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் உள்ள மேற்கூறியவைகள் தவிர்ந்த ஏனைய விபரங்கள் எவ்வித மாற்றமுமின்றி அவ்வாறேயிருக்கும்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
நீர்ப்பாசனத் திணைக்களம்,
இல. 230, பௌத்தாலோக்க மாவத்தை,
கொழும்பு-07

2023-10-13ஆம் திகதி.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
e-NIC திட்டம்
ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

நாடெங்கிலும் நிறுவப்பட்டுள்ள DS-DRP க்காக வாயு சீராக்கி இயந்திரங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல்
IFB No: DRP/e-NIC/PRO/2023/13

1. e-NIC திட்டம், ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், **"B" பகுதி, 10 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை திட்ட கொள்முதல் குழுத் தலைவரினால்** ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் நாடெங்கிலும் நிறுவப்பட்டுள்ள DS-DRP க்காக வாயு சீராக்கி இயந்திரங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுவதற்கு தகுதியான வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விபரம்	DS-DRP அலகுகளின் மாவட்டங்கள்	அளவு
24000 BTU, இன்வெர்ட்டர் வகை, split, சுவரில் பொருத்தக்கூடிய வாயு சீரக்கிகள்	குருநாகல் மாவட்டம்	01
	திருக்கோணமலை மாவட்டம்	01
	கம்பஹா மாவட்டம்	03
	புத்தளம் மாவட்டம்	01
	அம்பாறை மாவட்டம்	01
	அனுராதபுரம் மாவட்டம்	02
	கேகாலை மாவட்டம்	01
	மொத்தம்	10

2. இம் மனுகோரல்கள் **தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.(NCB)**
3. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **காரியாலய நேரங்களில் மு.ப 09.00** மணி தொடக்கம் **பி.ப 03.00 மணி வரை சிரேஷ்ட கொள்முதல் அதிகாரி, e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்,** (தொலைபேசி: **011-2874626**) மூலம் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும். மேலும் e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "B" பகுதி, 10 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தில் **2023.10.16 ஆம் திகதி** தொடக்கம் **2023.11.06 ஆம் திகதி** வரை எவ்வித கட்டணச் செலுத்துகையும் இன்றி இலவசமாகப் பரீட்சித்துக்கொள்ள முடியும்.
4. ஒப்பந்தத்தை வழங்குவதற்காக தகுதிபெற பின்வரும் குறைந்தபட்ச தகுதிகளை மனுதாரர் பூர்த்தி செய்ய வேண்டியதுடன், மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளது.
   a. விலைமனுதார் **ஐந்து (05) வருடங்களுக்கும்** மேலாக இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருக்க வேண்டும். விலைமனுதார் தனது வணிக வழக்கமான அல்லது சட்டப்பூர்வ நிலை, பதிவு செய்த இடம் மற்றும் பிரதான வணிகத்தின்இடம் போன்றவற்றின் அசல் ஆவணங்களின் பிரதிகளை வழங்க வேண்டும்.
   b. இந்த டெண்டருக்கான விலைமனுவிணை சமர்ப்பிக்கும் விலைமனுதார்கள் **1987 ஆம் ஆண்டின் 3** ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும்.
   C. கேள்விக்கோரலினை சமர்ப்பிக்கும் வகையின் வாயு சீராக்கி இயந்திரங்களை வழங்குதல், நிறுவுதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றில் மனுதாரர் குறைந்தபட்சம் **03 வருட** அனுபவம் பெற்றிருக்க வேண்டும். (ஆவண ஆதாரங்கள் வழங்குதல் வேண்டும்).
   d. விலைமனுதார் இந்த தயாரிப்பின் ஆரம்ப உபகரண உற்பத்தியாளரின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநராக இருக்க வேண்டும். அதனை உறுதிப்படுத்தும் ஆவணங்களும் ஏலத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் மற்றும் ஆரம்ப உபகரண உற்பத்தியாளர் மற்றும் பொருந்துமாயின் அவர்களின் உள்ளூர் முகவர்கள் விநியோகஸ்தர்களின் தொடர்பு விவரங்கள் இருக்க வேண்டும். விலைமனுதாரால் தயாரிக்கப்படாத/வழங்கப்படாத உபகரணங்களுக்கு, இந்த விலைமனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தைப் பயன்படுத்தி ஆரம்ப உபகரண உற்பத்தியாளரின் அதிகாரத்தை வழங்கும் கடிதம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
   e. மனுதாரர், நிறுவுதல், பராமரிப்பு மற்றும் உதவி சேவைகளை வழங்குவதற்கு போதுமான நிரந்தர தொழில்நுட்ப பணியாளர்களைக் கொண்டிருக்க வேண்டும். (பணியாளர் விபரங்கள் தொடர்பு விவரங்களுடன் வழங்கப்பட வேண்டும்)
   f. மனுதாரர் இலங்கையில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் தேவையான தொடர்ச்சியான சேவைகளை (24 மணிநேரமும் 365 நாட்களும்) வழங்கும் திறனைக் கொண்டிருக்க வேண்டும்.
5. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2023.10.16** ஆம் திகதியிலிருந்து **2023.11.03** ஆம் திகதி வரை காரியாலய வேலை நாட்களில் **09.00** மணியிலிருந்து **03.00** மணி வரையான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத **ரூபா.3,000.00** கட்டணத்தை செலுத்தி **செயற்திட்டப் பணிப்பாளர், e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "B" பகுதி, 10 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை** காரியாலயத்தில் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். கட்டணத்தை காசாக செலுத்துதல் அவசியமாகும்.
6. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை **இரண்டு பிரதிகளுடன் (அசல் மற்றும் நகல்) 2023.11.06 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்** பந்தி 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திற்கு கிடைக்கப்பெறுமாறு மனுக்களை அனுப்ப வேண்டும். அல்லது **e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "B" பகுதி, 10 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை** எனும் முகவரியில் மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இட வேண்டும். மனுக்கள் **63 நாட்கள்** வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
7. ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் ஆகியவை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். அனைத்து மனுக்களும் இலங்கை மத்திய வங்கியில் பதிவுசெய்யப்பட்டு இலங்கையில் இயங்கிவரும் உரிமம் பெற்ற வணிக வங்கியினால் வழங்கப்பட்ட **ரூ.60,000/- (அறுபதாயிரம்)** மனுப்பாதுகாப்புடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தலைவர்,
திணைக்களத்தின் கொள்முதல் குழு,
e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்,
"B" பகுதி, 10 ஆம் மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி,
பத்தரமுல்லை.
2023.10.17

SELACINE

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER ADZ it's what you want
Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
BANK OF CEYLON BOC Lake House Branch Acc. No. 000000377

ஒலிம்பிக்கில் கிரிக்கெட் இடம்பெறுவதை உறுதி செய்தது சர்வதேச ஒலிம்பிக் குழு

லொஸ் ஏஞ்சல்ஸில் 2028 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் கிரிக்கெட்டை இணைப்பதற்கு சர்வதேச ஒலிம்பிக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

கிரிக்கெட்டுடன் பிஃளாக் கால்பந்து, ஸ்குவாஷ், லக்ரோஸ் மற்றும் போஸ்போல் அல்லது சொப்ட்போல் விளையாட்டு உள்ளடக்கப்படுவதை மும்பையில் நடைபெற்றுவரும் ஒலிம்பிக் குழுக் கூட்டத்தில் நேற்று (16) உறுதி செய்யப்பட்டது.

இதன்படி ஆடவர் மற்றும் மகளிர் டி20 கிரிக்கெட் போட்டி ஒலிம்பிக்கில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் ஏற்பாட்டுக்கு குழு ஆறு அணி விளையாட்டுகளை ஒலிம்பிக்கில் இணைப்பதற்கு பரிந்துரைத்திருந்தது. எனினும் இந்த போட்டிகளில் எத்தனை அணிகளை இணைப்பது, அணித் தேர்வு பற்றி இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

"உலகில் இரண்டாவது பிரபலமான விளையாட்டை இணைப்பதை இட்டு ஒலிம்பிக் குழு உற்சாகம் அடைகிறது" என்று 2028 ஒலிம்பிக் மற்றும் பராலிம்பிக் விளையாட்டுகள் பணிப்பாளர் நிகொலோ கம்ப்ரியானி தெரிவித்துள்ளார்.

ஒலிம்பிக்கியில் இதற்கு முன்னர் ஒரே ஒரு முறையாக 1900 ஆம் ஆண்டு கிரிக்கெட் இடம் பெற்றது. பிரான்ஸ் மற்றும் பிரிட்டனுக்கு இடையில் நடைபெற்ற ஒரே ஒரு போட்டியில் பிரிட்டன் 158 ஓட்டங்களால் வெற்றி யீட்டியது.

லொஸ் ஏன்ஜல்ஸ் ஒலிம்பிக்கில் கிரிக்கெட் போட்டிகள் இணைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அறிவித்த சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில் தலைவர் கிரெக் பார்க்லே குறிப்பிடுகையில்,

"லொஸ் ஏன்ஜல்ஸ் 2028 ஒலிம்பிக் போட்டிகளில் கிரிக்கெட் இணைக்கப்பட்டுள்ளது இன்று உறுதிசெய்யப்பட்டுள்ளமையை நாம் உற்சாகத்துடன் அறிவிக்கிறோம். எம்முடைய மிகச்சிறந்த விளையாட்டை ஒலிம்பிக்கில் காட்சிப்படுத்துவதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. அதேநேரம் மேலும் பல ஒலிம்பிக் போட்டிகளில் கிரிக்கெட் இணைக்கப்படுமாயின், இது வீரர்கள் மற்றும் ரசிகர்களுக்கு மிக சிறந்த விடயமாக இருக்கும்" என்றார்.

மத்திய ஆசிய கரப்பந்து:

இலங்கை அணி சம்பியன்

டயலொக் அனுசரணையில் கொழும்பில் நடைபெற்ற மத்திய ஆசிய ஆடவர் கரப்பந்தாட்ட சவால் கிண்ணத்தை இலங்கை அணி கைப்பற்றியது.

சுகததாச அரங்கில் நேற்று முன்தினம் (15) நடைபெற்ற இறுதிப் போட்டியில் உஸ்பகிஸ்தான் அணியை எதிர்கொண்ட இலங்கை தேசிய கரப்பந்தாட்ட அணி போட்டியை 3–0 வென்று சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது. இதன்போது இலங்கை அணி 25–14, 25–18 மற்றும் 25–22 என்ற புள்ளிகள் கணக்கிலேயே வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் சவூதி அரேபியாவை தோற்கடித்து ஆப்கானிஸ்தான் மூன்றாவது இடத்தைப் பிடித்தது. மஹேல இன்தீவர பண்டார தொடரின் சிறந்த வீரராக தெரிவானார்.

CAVA Men's Volleyball Challenge Cup Colombo 2023
Powered by Dialog

சர்வதேச செய்திகள்

காசாவில் இஸ்ரேலின் உக்கிர தாக்குதலுக்கு மத்தியில் போர் நிறுத்த முயற்சியும் தோல்வி

எகிப்தின் எல்லையில் உதவிகள் காத்திருப்பு: அபாய கட்டத்தில் காசா மக்கள்

காசா மீதான தரைவழி தாக்குதல் ஒன்றுக்கு இஸ்ரேல் தயாராகி வரும் நிலையில் அங்கு தொடர்ந்து உக்கிர வான் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. காசாவுக்கு உதவிகள் வருவது மற்றும் முற்றுகையில் உள்ள அந்தப் பகுதியில் சிக்கியிருக்கும் வெளிநாட்டு கடவுச் சீட்டு பெற்றிருப்பவர்கள் வெளியேறுவதற்கு வசதி ஏற்படுத்தும் வகையில் தெற்கு காசாவில் போர் நிறுத்தத்திற்கான எதிர்பார்ப்பு நேற்று (16) தோல்வி அடைந்தது.

ஹமாஸ் ஆட்சியில் இருக்கும் காசாவில் கடந்த ஒன்பது நாட்களில் இல்லாத வகையில் நேற்று அதிகாலை வான் தாக்குதல்கள் தீவிரம் அடைந்து காணப்பட்டன. பல வீடுகளும் தரைமட்டமாக்கப்பட்டதோடு உயிரிழப்பு எண்ணிக்கை வேகமாக அதிகரித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடக்கம் காசா மீது இடைவிடாது குண்டுமழை பொழிந்து வரும் நிலையில் அந்த பகுதிக்கு உதவிகளை வழங்குவதற்கான இராஜதந்திர முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த வாரம் இஸ்ரேலில் ஹமாஸ் நடத்திய தாக்குதலில் 1,300க்கும் அதிகமான இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டது 75 ஆண்டு இஸ்ரேலிய வரலாற்றில் ஒரு தினத்தில் இடம்பெற்ற அதிக உயிரிழப்பாக இருந்தது.

காசாவுக்குள் நுழைந்து தரைவழி தாக்குதல் ஒன்றை நடத்த தயாராகி வரும் இஸ்ரேல் அந்தப் பகுதியில் நீர், மின்சாரம், எரிபொருள் மற்றும் உணவு விநியோகத்தை துண்டித்து முழு முற்றுகையை செயற்படுத்தி வருகிறது. மறுபுறம் காசாவில் இருந்து இஸ்ரேல் மீதான ரொக்கெட் குண்டுத் தாக்குதல்களும் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

இஸ்ரேலிய துருப்புகள் மற்றும் டாங்கிகள் ஏற்கனவே காசா எல்லைகளில் குவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய வான் தாக்குதல்களில் காசாவில் கொல்லப்பட்டோர் எண்ணிக்கை 2,750 ஆக உயர்ந்துள்ளது. இதில் கால் பங்கினர் சிறுவர்களாவர். சுமார் 10,000 பேர் காயமடைந்துள்ளனர். மேலும் 1,000 பேர் வரை காணாமல் போயிருப்பதோடு இவர்கள் இடிபாடுகளில் சிக்கி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. காசாவில் மனிதாபிமான நெருக்கடி தீவிரம் அடைந்துள்ளது. அங்கு உணவு, எரிபொருள் மற்றும் நீர் தீர்ந்து வரும் நிலையில் பல நாடுகளினதும் பல நூறு தொன் உதவிகள் காசாவுக்கான எகிப்து எல்லையில் காத்துக் கிடக்கின்றன.

இந்த உதவிப் பொருட்களை ரபா எல்லைக் கடவை ஊடாக காசாவுக்கு பாதுகாப்பாக விநியோகிப்பது மற்றும் காசாவில் உள்ள வெளிநாட்டுக் கடவுச் சீட்டு வைத்திருப்பவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கான பாதுகாப்பு உத்தரவாதத்தை பெற எகிப்து காத்துள்ளது.

எல்லையை திறந்து காசாவுக்கு உதவிப் பொருட்களை அனுப்புவதற்கு உடன்பாடு எட்டப்பட்டதாக எகிப்து பாதுகாப்பு தரப்பினர் நேற்றுக் காலை அறிவித்திருந்தனர்.

எனினும் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அலுவலகம் பின்னர் வெளியிட்ட அறிவிப்பில், "வெளிநாட்டினரை வெளியேற்றுவதற்காக தற்போது எந்தப் போர் நிறுத்தமும் எட்டப்படவில்லை என்பதோடு காசாவில் மனிதாபிமான உதவி இடம்பெறவில்லை" என்று குறிப்பிடப்பட்டது.

எகிப்துடனான எல்லை திறக்கப்படுவது மற்றும் தற்காலிக போர் நிறுத்தம் ஒன்று பற்றிய செய்தியில் எந்த உண்மையும் இல்லை என்று ஹமாஸ் அதிகாரி இஸ்ஸதல் ரெஷிக் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

இந்த எல்லைக் கடவையின் எகிப்துப் பக்கமான பகுதி அண்மைய நாட்களாக திறக்கப்பட்டிருந்தபோதும் பலஸ்தீன பக்கம் இஸ்ரேலிய குண்டு வீச்சுகளால் செயலிழந்திருப்பதாக எகிப்து தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ரபா எல்லைக் கடவை தொடர்பில் நேற்றைய தினத்தில் தெளிவில்லாத சூழல் இருந்து வந்தது. இஸ்ரேல் தவிர்த்து காசாவுக்கான ஒரே வாயிலாக இந்த ரபா எல்லைக் கடவை உள்ளது. இந்நிலையில் எகிப்துக்குள் நுழையும் எதிர்பார்ப்பில் சிறு எண்ணிக்கையானோர் இந்த எல்லைக் கடவைக்கு அருகில் காத்து நிற்கின்றனர்.

காசாவில் இருந்து வெளியேறுவதற்காக இந்த எல்லைக் கடவைக்கு அருகில் இருக்கும்படி அமெரிக்கா தனது நாட்டு பிரஜைகளை அறிவுறுத்தியுள்ளது. காசாவில் சுமார் 500 தொடக்கம் 600 பலஸ்தீன மற்றும் அமெரிக்க இரட்டை பிரஜா உரிமை பெற்றவர்கள் இருப்பதாக அமெரிக்க அரசு மதிப்பிட்டுள்ளது.

அதேபோன்று பலஸ்தீன போராளிகள் பிடித்து வைத்திருக்கும் சுமார் 195 பணயக்கைதிகளையும் பாதுகாப்பாக விடுவிப்பதற்கு அமெரிக்கா முயன்று வருகிறது. இந்த பணயக்கைதிகளில் அமெரிக்கர்களும் இருப்பதாக கூறப்படுகிறது.

பலஸ்தீன பொதுமக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், நெதன்யாகு மற்றும் பலஸ்தீன அதிகாரசபையின் ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸை வலிறுத்தியதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

ஹமாஸ் தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கும் இஸ்ரேல், போர் விதிகளை பின்பற்றும்படியும் பைடன் வலியுறுத்தியுள்ளார்.

"பெரும்பான்மையான பலஸ்தீனியர்கள் ஹமாஸின் பயங்கரமான தாக்குதல்களுடன் எந்த தொடர்பும் கொண்டிருக்கவில்லை, ஆனால் அவர்கள் பாதிக்கப்படுகின்றனர்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குண்டு மழை

இஸ்ரேலிய போர் விமானங்கள் நேற்றுக் காலை காசா நகரில் அல் குத்ஸ் மருத்துவமனையை சூழவுள்ள பகுதிகளில் சரமாரி தாக்குதலை நடத்தியதோடு இந்த தாக்குதல்களால் அம்புலன்ஸ் வண்டிகளாலும் நகர முடியாத நிலை ஏற்பட்டதாக பலஸ்தீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசாவில் உள்ள மக்களை தெற்கை நோக்கி வெளியேறும்படி இஸ்ரேல் உத்தரவிட்டிருக்கும் நிலையில் சுமார் 2.3 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட அந்தப் பகுதியில் ஆயிரக்கணக்கான மக்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்துள்ளனர். இஸ்ரேலின் இந்த உத்தரவை பொருட்படுத்த வேண்டாம் என்று ஹமாஸ் குறிப்பிட்டுள்ளது.

காசா பகுதியில் இருக்கும் மருத்துவமனைகளுக்கான எரிபொருள் இருப்பும் 24 மணி நேரத்திக்கு மாத்திரமே போதுமாக இருப்பதாக நேற்று அறிவிக்கப்பட்டிருந்தது. இதனால் ஆயிரக்கணக்கான நோயாளர்கள் உயிராபத்தை எதிர்கொண்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் மனிதாபிமான அலுவலகம் எச்சரித்துள்ளது.

காசா நகரில் டெல் அல் ஹவாவில் இஸ்ரேலிய போர் விமானங்கள் பிரதான வீதி மீது குண்டு வீசி சேதப்படுத்தியுள்ளது. இதனால் நூற்றுக்கணக்கான குடியிருப்பாளர்கள் செம்பிறை சங்கத்தின் அல் குத்ஸ் மருத்துவமனையில் அடைக்கலம் பெறவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

காசா நகரில் இருக்கும் சிவில் அவசர சேவை மற்றும் அம்புலன்ஸ் சேவையில் மூன்று தலைமையகங்கள் மீது இஸ்ரேல் குண்டுகளை வீசியுள்ளது. இதனால் ஐவர் கொல்லப்பட்டிருப்பதோடு அந்தப் பகுதிகளுக்கான மீட்பு நடவடிக்கைகளும் ஸ்தம்பித்திருப்பதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கான் யூனிஸ் அகதி முகாமில் உள்ள அபூ முஸ்தபா குடும்பத்திற்கு சொந்தமான வீட்டின் மீது நடத்தப்பட்ட குண்டுவீச்சில் அந்தப் குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் கொல்லப்பட்டனர்.

இஸ்ரேலிய குண்டுவீச்சு சத்தத்துடன் நேற்று காலை விழித்துக் கொண்ட 45 வயதான சுஹைல் பாகர் தனது அண்டை வீடு தரைமட்டமாக்கப்பட்டு ஐவர் கொல்லப்பட்டதை கண்டுள்ளார்.

"நாம் பயங்கரத்துடன் விழுத்துக்கொண்டதோடு பெரும் அழிவினை கண்டோம். புல்டோசர்கள் மூலம் இடிபாடுகளை அகற்றி உடல்களை மீட்பதற்கு அதிக நேரம் எடுத்துக்கொண்டது" என்று பாகர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

கான் யூனிஸின் அருகாமையில் உள்ள வீதி ஒன்றில் தனது வீட்டுக்கு வெளியில் இருந்து கொண்டிருந்த வயோதிபரான அபூ அஹமது, "இஸ்ரேல் எம் அனைவரையும் கொலை செய்ய தீர்மானித்துவிட்டது" என்றார்.

காசா மக்கள் தொகையில் கிட்டத்தட்ட பாதி அளவானர்களான ஒரு மில்லியனுக்கு மேற்பட்டவர்கள் அந்த குறுகிய நிலப்பகுதிக்குள்ளேயே இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களின் தேவைகளை சமாளிப்பதில் சிரமத்தை எதிர்கொள்வதாக ஐக்கிய நாடுகளின் நிவாரண மற்றும் பணிகளுக்கான நிறுவனம் தெரிவித்துள்ளது.

காசாவில் உள்ள மக்கள் சுத்தமான நீரை பெறுவதில் பெரும் சிக்கலை எதிர்கொண்டு வருகின்றனர். கடைசி முயற்சியாக இவர்கள் விவசாய நிலங்களில் இருக்கும் உவர் நீரை அருந்தி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் நீர்வழி நோய்கள் ஏற்படும் அபாயம் அதிகரித்துள்ளது. தொடர்ந்து ஐந்தாவது நாளாகவும் நேற்று காசாவில் மின்சார வசதிகள் இருக்கவில்லை என்பதோடு இதனால் சுகாதாரம், நீர் விநியோகம் மற்றும் துப்புரவேற்பாட்டு சேவைகள் முடங்கிய நிலையில் உணவுப் பாதுகாப்பும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது.

இராஜதந்திர முயற்சிகள் ஸ்தம்பிதம்

இந்த மோதல் பிராந்தியம் எங்கும் பரவும் அச்சுறுத்தல் அதிகரித்திருக்கும் சூழலில் மத்தியஸ்த முயற்சிகளும் பின்னடைவை சந்தித்துள்ளன. இஸ்ரேலின் வடக்கு எல்லையில் லெபனான் ஹிஸ்புல்லா அமைப்புடன் தொடர்ந்து மோதல்கள் இடம்பெற்று வரும் நிலையில் மற்றொரு முனையிலும் போர் பதற்றம் அதிகரித்துள்ளது.

இதில் அமெரிக்கா பிராந்தியத்தில் தீவிர இராஜதந்திர முயற்சிகளில் ஈட்டுபட்டு வருகிறது. அந்நாட்டு இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் ஜோர்தான், கட்டார், பஹ்ரைன், ஐக்கிய அரபு இராச்சியம், சவூதி அரேபியா மற்றும் எகிப்து ஆகிய ஆறு அரபு நாடுகளுக்கு அவசர சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு பின்னர் இஸ்ரேல் சென்றுள்ளார்.

ஈரான் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்புகள் இந்தப் போரில் இரண்டாவது முனை ஒன்றை ஆரம்பிக்கும் வாய்ப்புக் குறித்தே அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் அதிக கவலையை வெளியிட்டு வருகிறது. எனினும் இஸ்ரேலின் தற்பாதுகாப்பு உரிமைக்கு அவை ஆதரவு அளித்து வருகின்றன. மோதலை தணிக்கும் முயற்சியில் எகிப்து, கட்டார் மற்றும் துருக்கி நாடுகளும் ஈடுபட்டுள்ளன. இந்த மூன்று நாடுகளும் இஸ்ரேலுடன் நல்ல உறவை பேணுவதோடு ஹமாஸ் அமைப்பிலும் செல்வாக்கு செலுத்தி வருகின்றன.

இஸ்ரேலின் பதில் தாக்குதல்கள் குறித்து சீனா மற்றும் ரஷ்யா கடும் விமர்சனங்களை வெளியிட்டு வருகின்றன. அதேபோன்று இந்த நாடுகள் இஸ்ரேலின் எதிரி நாடான ஈரானில் செல்வாக்கு செலுத்தும் நாடாக இருக்கும் சூழலில் பிராந்தியத்திற்கு இந்த மோதல் பரவுவதை தவிர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் நாடுகளாக உள்ளன.

ஈரான் ஹிஸ்புல்லா மற்றும் ஹமாஸ் அமைப்புக்கு நீண்ட காலமாக ஆதரவு அளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஐ.நா பாதுகாப்புச் சபை கூட்டத்தில் காசா நிலைமை குறித்து அமெரிக்கா மீது ரஷ்யா கடும் குற்றச்சாட்டை சுமத்திய சூழலில் இராஜதந்திர முயற்சிகளை முன்னெடுப்பதில் பல முட்டுக்கட்டைகள் இருந்து வருகின்றன. காசா மீது இஸ்ரேல் தரைவழி தாக்குதலை ஆரம்பித்தால் நிலைமை கட்டுப்படுத்த முடியும் என்று யாராலும் உத்தரவாதம் அளிக்க முடியாது என்று ஈரான் வெளியுறவு அமைச்சர் ஹொஸைன் அமிர் அப்துல்லாஹியம் நேற்று முன்தினம் எச்சரித்திருந்தார். "நிலைமை கட்டுப்பாட்டை இழக்கும் அச்சுறுத்தல் இருப்பது உண்மையே" என்று அவர் வலியுறுத்தினார்.

இஸ்ரேல் மோதலுடன் தொடர்பு: அமெரிக்காவில் சிறுவன் கொலை

இஸ்ரேல் மற்றும் காசா மோதலுடன் தொடர்புபட்டு அமெரிக்காவில் முஸ்லிம் என்ற காரணத்தினால் ஆறு வயது சிறுவன் ஒருவன் கத்திக்குத்து தாக்குதலில் கொல்லப்பட்டிருப்பதோடு அவனது 32 வயது தாய் காயமடைந்துள்ளார்.

இல்லிநொயிஸில் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் 71 வயதான ஜோசப் க்சுபா என்ற ஆடவர் மீது கொலை மற்றும் வெறுப்புக் குற்றத்தில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது. தற்போது இடம்பெற்று வரும் இஸ்ரேல் மற்றும் காசா மோதல் காரணமாகவே இவர்கள் இலக்கு வைக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த தாக்குதல் ஒரு கேவலமான செயல் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் சாடியுள்ளார்.

அந்த ஆடவர் பலஸ்தீன பூர்வீகம் கொண்ட அந்த குடும்ப வீட்டுக்குள் புகுந்து தாக்குதல் நடத்திய நிலையில் பொலிஸார் அங்கு விரைந்தபோது தாயும், மகளும் ஒன்றுக்கு மேற்பட்ட கத்திக்குத்து தாக்குதலுக்கு இலக்கான நிலையில் இருந்துள்ளனர்.

பேச்சை மாற்றிய அப்பாஸ்



ஹமாஸ் அமைப்பை விமர்சித்து பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் கூறியதாக பலஸ்தீன அதிகாரசபையின் உத்தியோகபூர்வ செய்தி நிறுவனத்தில் வெளியிடப்பட்ட செய்தி, சில மணி நேரத்திலேயே மாற்றப்பட்டது.

அப்பாஸ் மற்றும் வெனிசுவேல ஜனாதிபதி நிகலஸ் மடுரோ இடையில் தொலைபேசியில் இடம்பெற்ற உரையாடலில், ஹமாஸின் கொள்கை மற்றும் செயற்பாடுகள் பலஸ்தீன மக்களை பிரதிநிதித்துவம் செய்யவில்லை என்று அப்பாஸ் கூறியதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் சில மணி நேரத்தின் பின் அந்த வார்த்தைகளில் திருத்தம் கொண்டுவரப்பட்டிருந்தது. "பலஸ்தீன அதிகாரசபையின் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் முடிவுகள் பலஸ்தீன மக்களை சட்டபூர்வமாக பிரதிநிதித்துவம் செய்வதோடு வேறு எந்த அமைப்பின் கொள்கைகளையும் அல்ல" என்று அப்பாஸ் கூறியதாக திருத்தப்பட்டிருந்தது.

இஸ்ரேல் ஆக்கிமிப்பு மேற்குக் கரையில் ஆட்சியில் இருக்கும் அப்பாஸின் பலஸ்தீன அதிகாரசபைக்கும் காசாவில் ஆட்சியில் உள்ள ஹமாஸ் அமைப்புக்கும் இடையே நீண்ட காலமாக மோதல் நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒக்டோபர் மாதம் 17ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.